# மகாத்மா காந்திக்கு ஜே!



மணிமேகலைப் பிரசுரம்

பூவை எஸ். ஆறுமுகம்

# மகாத்மா காந்திக்கு ஜே!

(சிறுகதைத் தொகுப்பு)

பூவை எஸ். ஆறுமுகம்

மணிமேகலைப் பிரசுரம்
தபால் பெட்டி எண் : 1447
4, தணிகாசலம் சாலை,
தியாகராயநகர், சென்னை-600017
ஃபோன் : 4342926
ஃபேக்ஸ்: 044—4346082

முதல் பதிப்பு : 1998

**விலை: ரூ. 33-00**
முப்பத்து மூன்று ரூபாய்

அச்சிட்டோர் :
சதுர்வேந்தன் அச்சகம், சென்னை-24.

# உள்ளடக்கம்


| வ.எண் | | பக்க எண் |
|---|---|---|
| 1. | மகாத்மா காந்திக்கு ஜே! | 5 |
| 2. | இனி...! | 25 |
| 3. | ஆத்தா | 37 |
| 4. | சீதாப்பிராட்டியின் பவளக்கொடி! | 55 |
| 5. | மன விகாரங்கள் | 66 |
| 6. | தெய்வம் நேரில் வரும் | 80 |
| 7. | எல்லைச் சக்தி | 91 |
| 8. | பிள்ளைக் கனியமுதே கண்ணம்மா! | 98 |
| 9. | பிள்ளைக் கலி! | 107 |
| 10. | கால்படி அரிசி ஆத்மா | 113 |
| 11. | திருமதி சிற்றப்பலம் | 123 |
| 12. | பிட்டுக்கு மண்! | 163 |

# விற்பனையாகும் இதர நூல்கள்!

## சமூக நாவல்கள்

கரையோரப் பூவே! —தஞ்சை செல்வன் 70-00

ஒரு திருமணம் நள்ளிரவில் நிச்சயிக்கப்படுகிறது —தஞ்சை செல்வம் 27-00

இதயத்தைக் கிள்ளாதே —உமா மகேஸ்வரி 25-50

சிந்து நதிக் கரையோரம் ,, 33-00

தவம் —ராமசுப்ரமணியன் 40-00

மணிபர்ஸில் ஒரு போட்டோ ,, 32-50

நெஞ்சிலே நெருப்பு —சுப்பு ஆறுமுகம் 27-00

வித்யாசாகரின் ரசிகை! ,,

—எஸ். சங்கர நாராயணன் 27-50

கனவு தேசத்து அகதிகள் 28-00

அம்மா! —சுமங்கலி 35-00

கண்ணாளனே! —ராஜ சியாமளா 37-50

பல்லவர் கோமகன் —வே. கபிலன் 65-00

நெஞ்சிலிட்ட கோலமெல்லாம் —ப்ரீதி 49-00

இன்று பேசிய தென்றல் —ப்ரீதி 39-00

முடிந்துவிட்ட ஆசை —தேவிபாலா 32-00

ஒரு குமரி குழந்தையாகிறாள் ,, 27-00

## பா. தமிழினியனின் சிறுகதைகள்

அம்மி மிதிக்காதவள் 40-00

விஜயா ஏன் வந்தாள்? 30-00

நாற்காலி 28-00

மேகலா ஏன் மறுத்தாள்? 31-50

## நா.ரா. பண்டரிநாதன் நாவல்கள்

காலம் ஒருநாள் மாறும் 50 00

என் வாழ்வு உன்னோடுதான்! 50-00

பிரளயம் 54-00

முள்வேலி 55-00

## வெ. தமிழழகனின் நாவல்கள்

காதலுக்கு கண் உண்டு 38-00

மன்னிப்பாய் மன்னவனே! 22-00

# மகாத்மா காந்திக்கு ஜே!

## 1

அந்திக் கன்னி மஞ்சள் பூசிப் பொட்டிட்டுப் புன்னகை செய்துகொண்டிருக்கின்றாள்!...

விடிந்தால், மகாத்மா காந்தி பிறந்த நாள்!

'காந்தி மகாத்மா செத்து விட்டாரென்று எந்தப் பயல் சொன்னவன்?'

சேரிச் சாம்பான் தனக்குத் தானாகவும், தன்னில் தானாகவும் சிரித்துக்கொண்டார். சிரிப்பின் அலைகளிலே, மாறிய காலத்தின்—ஊகூம், மாற்றப்பட்ட காலத்தின் அதிசயம் சலசலக்கிறது!—

'ஆவணத்தாங்கோட்டைத் தேவர் குடியிருப்பிலேருந்து ஊருக்கு ஓசந்த பெரும்புள்ளியான கண்டிச்சீமைக் கங்காணி ஐயா இங்கிட்டு ரேக்ளாவிலே வந்திருந்தாக; வெத்திலை பாக்குப் போட்டுக்கிட்டாக; காந்தி விழா கைச்செலவுக்கு நூத்தியொரு ரூவா அசல் சலவைத் தாளாவே தந்தாங்க. பொறக்குமாசத் தீவாளி விருந்துக்கு என்னைய பெரிய மனசு வச்சு அழைச்சிருக்காங்க; கும்பிடு கொடுத்தாக; கும்பிடு வாங்கிக்கிட்டாக; அப்பாலேதான், புறப்பட்டுப் போனாங்க!...'

'இம்மாங்கொத்த நிலைமையிலே, காந்தி செத்துப் பூட்டார்னு பல்லு மேலே பல்லுப் போட்ட எந்தப் புறக்குடிப் பயமவனாச்சும் செப்ப வாய்க்குமா, என்ன?' —நெஞ்சின் ஈரம் கண்களில் தெரிந்தது. எட்டாக் கையிலே கிடந்த வெற்றிலைக்குட்டானை எட்டி எடுத்து விட்டார். அதிலேகூட, அவருக்கு ஒரு பெருமை; பெருமிதந்தான்!

'என்னைத் தொட்டாக்கத் தீட்டு ஒட்டிக்கும்னு, நல்ல காலம் இந்த வெத்திலைங்க மாஞ்சுமடியல்லே!...ப் பூவே!—இந்த வெத்திலைங்க என்ன பெரிய ஒசத்தியாக் கும்?—எட்டிப் பிடிக்க வாய்க்காத அம்புட்டு ஒசரத்திலே குந்தியிருக்கக் கூடிய கங்காணி ஐயாவே என்னோட குடிசையைத் தேடி வந்திட்டாகளே?... இப்படிப்பட்ட அதிசயத் திருக்கூத்துக்கெல்லாம் யாராம் காரணம்?— காந்திதான். ஆமா! எங்க காந்திச் சாமியேதான் காரண மாக்கும்! ஐயையோ...! எங்க காந்தித் தெய்வத்தை விதி யாட்டம், சொல்லாமல் கொள்ளாமல் அவசரப்பட்டுச் சுட்டுக் கொன்னுப்பூட்டானே எவனோ ஒரு பாவி?...' விம்மல் வெடித்தது; நெஞ்சும் வெடித்துவிடுமோ?

காக்கை கத்துகிறது.

குருவியும்தான்!

ஏக்கப் பெருமூச்சோடு ஏறிட்டுப் பார்த்தார் சாம்பான்.

எட்டடிக் குச்சில், மண் சுவரின் சனி முடுக்கில், கைக்கு எட்டும்படியாக அண்ணல் பொக்கை வாய்ப் புன்னகையைச் சிந்திக் கொண்டிருக்கிறார்!

காந்திஜியைப் போன்று, சாம்பானுக்குச் சிரிக்கத் தெரியவில்லை. காலம் 'சடுகுடு' ஆட, அந்தக் காலத்தின் மணல் வெளியில் பதிந்திட்ட அடிச்சுவடுகளென நினைவு

கன் 'உப்புக்கோடு' மறித்தனம்; அந்த ஆட்டத்தில் கங்காணியும் சேர்த்தி!

'கடவுளே, காந்தி மகாத்மாவே! எங்களையும் மனுச ஜென்மங்களாய் மதிச்சு, எங்களுக்கும் ஒரு விடிமோட்சம் ஏற்படுத்துறதுக்காக நீங்க உங்க காலத்திலே எம்புட்டோ பாடுபட்டீங்க; நீங்க செஞ்ச போதனைக்கு உண்டான பலனை ஓரளவுக்கு நீங்களே கண்ணுக்குக் கண்ணாய்க் காணவும் வாய்ச்சதென்னமோ பொய் இல்லேதான்; ஆனாலும், எங்களுக்குப் பரிபூர்ண விடுதலை கிடைச்சிட்டுதுன்னு எங்களாலே இன்னமும்கூட பரிபூர்ணமாய் நம்ப ஏலலே!

கங்காணி மாதிரி, ஆயிரத்திலே ஒருத்தர் அத்தி பூத்தாப்பிலே எங்களையும் ஒரு பொருட்டாய் மதிக்கத் தலைப்பட்டிருக்காங்க; இந்த நடப்பிலேகூட, உண்மை எந்த மட்டுக்கு ஒளிஞ்சுக்கிணு இருக்குது என்கிறதும் எங்களுக்கு மட்டுப்படல்லே. ஏன்னா, இந்த லோகத்திலே இப்பைக்கு வேசம் போடுறவங்கதான் மிஞ்சிக்கிட்டு வாராங்க! இந்தத் துப்பு ஒங்களுக்குப் புரியமுங்க: நீங்க ஒசந்தவங்க; ஆனதாலேதான், ஈனச் ஜெம்மங்களான எங்களையும் ஒசத்தப் பாடுபட்டீங்க.

நீங்க கண்ட கனாவோட நல்லது-கெட்டதைத் துல்லியமாய்ப் புரிஞ்சுக்கிடறதுக்கு ஏத்த சமயம் இதுதானுங்களே சாமி...? ஆனா, நீங்க எங்களையெல்லாம் தவிக்கவிட்டுப் போட்டுப் போயிட்டீங்களே?—பாளத்த பாவி ஒருத்தன் கண்ணை மூடிக்கிட்டு, ஒங்களைச் சுட்டுப்புட்டானே என்கிறதுக்காவ, நீங்களும் கண்ணை மூடிக்கிட வேணுங்களா, சாமியே?... ஐயையோ, தெய்வமே, எங்க தெய்வமே!'

கிழவாடி இன்னமும் மதுரைவீரன் சிலையேதான்.

யாரோ கூப்பிட்டார்கள்.

ஊஹூம், மூச்!

பணம் இருந்தும் மனம் இல்லாத—அதாவது, சமுதாயநலப் பற்றுதல் இல்லாத சமூகத் துரோகியை நினைவுகூர்ந்து நினைவூட்டிப் பிரகடனப்படுத்துகிற பாவனையில், மிக மிகப் பலவீனமாக எரிந்துகொண்டிருக்கிறது மண்ணெண்ணெய்ச் சிம்னி விளக்கு.

புகையிலை எச்சில் குமட்டிக் கொண்டு வரவே, சாம்பானுக்குச் சுயபிரக்கினையும் வந்தது. தலையைத் தாழ்த்தியவராகப் பத்திரமாகவே வெளியே வாசலுக்கு வந்தார். ஆத்தாடி!... நல்லமூச்சு வந்தது. வாசல் கொட்டகையில் எத்தனை நெற்குதிர்களாம்!

''எம்புட்டு வாட்டி அலட்டுறதாம்?'' என்று கோபப்படுகிற பாவனை செய்தபடி, வந்து நின்றாள் கிழ்வி.

''என்னையா கூப்பிட்டே, புள்ளே?''

''எனக்கு ஒடமை கொண்ட ஓங்களைக் கூப்பிடாம, மறுகா, யாரைக் கூப்பிடுவேனாம்?''

வாழ்க்கைத் தடத்தில் கிட்டத்தட்ட எழுபத்தேழு தொலைக் கற்களைத் தாண்டிவிட்ட பெரியவருக்கு இப்போதுதான் சிரிக்க வேண்டும் போலத் தோன்றியிருக்கலாம், பல் போனாலும், சொல் போகாத மானி—மானஸ்தர். ''எம்வூட்டு ஆசைப் பெண்டாட்டிக்குக் கோவத்தைப் பாருங்களேன், கோவத்தை!'' பொக்கை வாயில் புன்னகை பூவாக மலர்கிறது; மணக்கிறது.

''ஏண்டி அங்காளம்மைக் குட்டி! கஞ்சிப் பொழுதுக்குக் குடிசையிலேருந்து பறிஞ்ச, அமாசை இருட்டுப் பறிஞ்சடியும் வந்திருக்கியே?—என்னாவாம் சங்கதி?—மூத்த பயலையும் இன்னம் கண்ணுப்புறத்திலே காண வாய்க்கல்லியே?—போன எடம், வந்த எடத்திலே தட்டுப்பட்டானா?''

தன்னுடைய ரதிக்கிளியான கிழவியை விழுங்கி விடுகிற மாதிரி பார்த்தார் அவர்.

கிழவி என்றால்; வெட்கமான வெட்கம் வரக்கூடா தென்று சட்டமா, என்ன?

அந்த நாளிலே, அழகுக் கலாபமயிலான அங்கா ளம்மையின் வெட்கத்தைக் கண்டும், ரசித்தும் வெட்கப் படாமல் அவளைக் கட்டிக்கொண்டவர் இந்த சாம்பான் என்பது சிதம்பர ரகசியம்!...

''மச்சான்காரவுங்களே!''

''...''

''இந்தாலே பாருங்க, ஒங்களைத்தானுங்களே?''

தொட்டுணர்வின் இனிமையான சுகத்தில் முதியவர் இன்பமான சொர்க்கத்தை உணர்ந்திருக்க வேண்டும். சொப்பனம் கண்டு விழிப்பவர் போன்று, விழிகளை மூடி மூடித் திறந்தார்.

''ஏ, புள்ளே! ஒனக்குச் சங்கதி தெரியுமாங்காட்டி?... ஊர் நாட்டுக்கு ஒசந்த கண்டிச்சீமைக் கங்காணி முத்து வீரப்பத் தேவர் ஐயா நம்ம குடிசைக்குத் தேடி வந்து, நாளைக்குக் காலம்பற நடக்கப்போற காந்தி செயந்திச் செலவுக்கு நூத்தியொரு ரூவா தந்தாராக்கும்! ஆமாடி, அங்காளம்மே!—இது நம்ம தாராடிச்சாமி சத்தியமாய் மெய்யான தாக்கலாக்கும்!'' என்றார் சாம்பான். வாயெல்லாம் பல் இல்லை, சிரிப்பு; அடங்காச் சிரிப்பு; அது ஆனந்தச் சிரிப்பு.

''காந்தியைக் கொண்டாடுறதுக்குக் கங்காணி எசமானரு நூத்தியொரு ரூவாய் குடுத்தது, மெய்யா லுக்குமே நூத்திலேயொரு சேதிதானுங்க, மச்சானே?''

''இந்த நடப்புத் தாக்கல் நாளைக்கு விடிஞ்சதும் விடியாததுமாய் ஊர் முச்சூடும் பரவி, கங்காணியைப்

பெருமையோட உச்சாணிக் கொம்பிலே குந்தவச்சுப் புடாதுங்களா? சோழியன் குடுமி சும்மாவே ஆடாதுங்க! —இப்பிடி நூத்தியொரு ரூவா கொடுத்ததாலே, ஊர் மத்தியிலே நாலு பேர் நல்லதனமாய்த் தம்மைப் பத்திப் பெருமையோடப் பேசுவாங்க என்கிற நப்பாசை கங்காணிக்கு மட்டும் இருக்காதா என்ன? அவரும் மனுஷப் பிறப்புத்தானுங்களே? சுயநலப் பித்து அவருக்கு மட்டும் இருக்காதுங்களா, மச்சானே?...அது போகட்டும்! பெரிய எடத்து விசயத்திலேருந்து நம்மோட சின்ன எடத்து விசயத்துக்கு வரலாமுங்க!...''

''என்னா''

''மூத்தவன் வீரமணி எங்கண்ணுக்குத் தட்டுப் படல்லே; ஆனா, அவனோட கண்ணாலம்-காட்சி சம்பந்தப்பட்டவங்க தட்டுப்பட்டாங்க; சங்கதியை நேரு சீராய் முடிச்சுப்புட்டேனுங்க. சாகுபடி செய்கிறதுக்குக் கூட கோயம்புத்தூர்லே ஒரு படிப்பைப் படிச்சுப் பட்டத்தையும் வாங்கிக்கிட்ட நம்ம ராசாப் பயலுக்குப் பொண்ணு குடுக்கிறதுக்கு எங்க அண்ணாச்சி எம்புட்டோ குடுத்து வைச்சிருக்க வேணுமுங்க!''

கிழவிக்கு இருமல் வந்தது.

இந்தக் கிழவர் மறுபடி கனவு காண ஆரம்பித்து விட்டாரோ?

''மச்சானே!''

''............''

''ஏங்க, மச்சான்காரவுகளே! நானு பேசிக்கிட்டே இருக்கேன்; நீங்க பாட்டுக்குப் பேசாமல் இருக்கீகளே? ஏதுனாச்சும் கனா-கினா காணுறீங்களா?''

''ஆமா, புள்ளே, ஆமா... நான் கனவுதான் காணு றேன்; மனுசங்களுக்கு மட்டுமில்லே, தெய்வத்துக்கும் நாயமான ஒரு கனவைத்தான் காணுறேன்!—ஆனா, நீ கனா காணுறதாட்டம், படிச்சுப் பட்டம் வாங்கிக்கிட்ட என்னோட செல்வத்தை ஒன்னோட படிக்காத அண்ணன் மவளுக்குக் கட்டிக் கொடுக்கவே மாட்டேன்!''

''என்னாங்கிறேன், இப்பிடிச் சொல்லிப் போட் டீங்க?''

''பின்னே எப்பிடிச் சொல்லிப் போடணுமாம்?''

''நையாண்டி நைச்சிகமா பண்ணுறீங்க; பண்ணுங்க, பண்ணுங்க!... என்ன செய்யுறது?—ஒங்க காட்டிலே மழை பெய்யுதே? அது சரி; நம்ம வீரமணியை எங்க பவளத் துக்குக் கண்ணாலம் பண்ணிவைக்காமல், பின்னே, ஊருக்கு ஒசத்தியான கங்காணி மகள் செண்பகத்துக்குக் கட்டி வைக்கப் போறீங்களாக்கும்?...''

## 2

அங்காளம்மை பேசிய பேச்சுகள் சாம்பானை சிலிர்க்க வைத்தன.

கண்கள் ஜொலிக்க அவளைப் பார்த்தார்.

''ஏண்டி, புள்ளே! எம் மகன் வீரமணிக்கு—இந்தச் சாம்பான் பெத்த பிள்ளையான வீரமணிக்கு அந்தக் கங்காணி மகளை-ஊர் உலகத்துக்கு ஒசந்த கங்காணி மகள் செண்பகத்தைக் கண்ணாலம் பண்ணி வச்சால் செல்லாதா, என்ன?''...கூறைக் காற்றில் பறந்த மயிர்க் கற்றையைக் கோதியெடுத்து அள்ளிச் செருகிக் கொண் டார் சாம்பான். தன்னை மறந்து சிரித்தார்; ஊர்-உலகத்

தையும் மறந்து சிரித்தார்; ஆனால், காந்தியை மட்டும் அவர் மறந்து விடவில்லை!

''நல்லாச் செல்லும்; செல்லுபடியும் ஆகும்; நல்லாக் கனவு காணுங்க! மேளதாளத்தோட வேணும்னாலும் கனவு காணுங்க!''

''ஏலே, அங்காளம்மை! நீ எந்த அர்த்தத்திலே வேணும்னாலும் சொல்லிக்கிட்டுக் கிட; ஆனா இந்த ஒரு சங்கதியை மட்டுக்கும் ஒன்னோட இந்தச் சுங்கடி முந்தானையிலே முடிச்சுப் போட்டு வச்சுக்கிடு!—இந்தச் சாம்பான் கனவு கண்டாக்க, அது நடந்தே தீருமாக்கும்! அந்தக் கனவு கட்டாயமாய்ப் பலிச்சே தீருமாக்கும்! ஆமா!''—மதுரைவீரனுக்குப் பேசத் தெரிந்தால், இவ்வாறுதான் உக்கிரமாகவும், ரோஷமாகவும், அகங்காரமாகவும் பேசியிருப்பாரோ?

சோற்றுக் கைத் தழும்பிலே, ஒரு சொட்டுக் கண்ணீர் தெறித்தது; சிதறியது!

மனிதர்களுக்குள் எந்தச் சாதி வித்தியாசமும் கிடையாதென்று காந்தி மகாத்மா படித்துப் படித்துப் பாடம் சொல்லித் தரவில்லையா?—ஆனாலும், அந்தக் காலத்தில், ஒரு கட்டத்தில், சேரிச்சாம்பான், செட்டித் தெருவில் வாசலோரமாக நடந்து செல்லப்போக, அதற்குத் தண்டனையாக, அன்பின்றி, ஈவிரக்கமின்றி, வாசலிலிருந்த பூவரச மரத்தில் கட்டி வைத்து, திருக்கை மீன் வால் கொண்டு அடிஅடியென்று அடித்துப்போட்ட் அதே 'சூனா—பானா'வை நீதிதேவன் சந்நிதானத்திலே நிறுத்தி வைத்து அபராதம் கட்டச் செய்த புள்ளி ஆயிற்றே இந்தச் சாம்பான்?—சாம்பான் ராஜ்யத்திலே, அவர்தான் ஆறுகரைத் தலைக்கட்டிற்குத் தலைமைப் புள்ளி. கிழக்கே தாராடிப் பொட்டல்காட்டு வெளிதொடங்கி, மேற்கில்

காளி ஆத்தா கம்மாய் முடியவும், வடக்கே வாஞ்சி அய்யன் நஞ்சைத்தாக்கிலிருந்து, தெற்கே செட்டிமார் சுடுகாடு வரையிலும் அங்கங்கே தொட்டும் தொடாமலும், பட்டும் படாமலும், அங்கீகாரம் பெற்ற வாயமையைப் பரவியும் விரவியும் வாழ்ந்து வருகின்ற நாற்பத்தெட்டு குடிகளுக்கும் இவரது வாக்குத்தான் வேதம்; வேதவாக்கு! மயிர் பிளந்து நியாயம் வழங்குவதில் மன்னர்.

பாரதி கனவு கண்டாரே, 'எல்லோரும் இந்நாட்டு மன்னர்' என்று! அந்த மன்னர் ரகம்! இயற்கைத் தாயின் மண் மடியிலே உழைத்து உழைத்து, உள்ளத்தை உயர்த்திக் கொண்ட சாம்பான், தன் அருமைத் திருமகன் வீரமணியை அவன் விருப்பப்படி விவசாயப் பட்டம் பெறவும் செய்துவிட்டார் அல்லவா? — சாம்பான் என்றால், சாம்பான்தான்! ஒரு கெட்ட பழக்கம் உண்டா? மூச்!... குடித்தால், தண்டனை என்று ராசாங்கம் விதி விதித்தது ஒரு பக்கம் இருக்கட்டும்!—இங்கே, சாம்பான் ஆளுகைக்கு உட்பட்ட எல்லைக்குள் பறைச்சேரி ஆட்கள் யாருமே குடிக்கக் கூடாது: அதாவது, கள், சாராயம் அல்லது, மது எதையுமே குடிக்கக் கூடாது! இது, சாம்பான் சட்டம்! — நாளைக்கே, மதுவிலக்கு ஒருவேளை தளர்த்தப் பட்டாலோ அல்லது நீக்கப்பட்டாலும் கூட, இந்தச் சேரிப்புறத்தில் யாருக்குமே குடிக்க அதிகாரம் இருக்காது!—

சாம்பான் சிரித்தார்; மெய்ம்மறந்து சிரித்தார்; மெய்யை மறக்காமல் சிரித்தார்; இனம் விளங்கியதும், இனம் விளங்காததுமான ஒரு தவிப்புடன்—ஏக்கத்துடன் —ஆதங்கத்துடன் விம்மிக் கொண்டே சிரித்தார். 'காந்தி மகாத்மா!...' தலையிலே 'லேஞ்'சைக் கொய்து 'மூண்டாசு' சுற்றியவர், மறு இமைப்பில் அதை அவிழ்த்து ஏனோ ஆத்திரத்துடனும், ஆவேசத்துடனும் இயலாமை

யுடனும் எட்டத்திலே வீசி எறிந்தார்; வெளிச்சத்தில் செய்திப் பத்திரிகையை மீண்டும் புரட்டினார்.

வெளியே, அட்டகாசமாகவும், நிர்த்தாட்சண்யமாக வும் கை கொட்டிச் சிரிக்கிறது இருள்.

ஃ ஃ ஃ

புது வீடு என்றால், சேரியைப் பொறுத்தமட்டில், அது சாம்பான் வீட்டைத்தான் குறிக்கும். சங்கராந்தியன் றைக்குப் புதுமனை புகுவிழா நடப்பதாக ஏற்பாடு. மின்சார இணைப்பு நடந்து முடிந்தால், முடிந்தது வேலை.

அங்கே, வேப்பந்தூரடியில் இப்போது காந்த விளக்கு எரிந்தது.

காந்தி ஜயந்திக்கான முன் ஏற்பாடுகள் சுறுசுறுப்பாக நடைபெறுகின்றன.

விழாவின் நாயகரான காந்திஜிதான் முதன் முதலில் தயாரானவர்.

தோரணங்கள் கண்களைப் பறிக்கின்றன.

இசை உபகரணங்கள், கொம்பு — தப்பு — தாளம் என்று சர்வ சுதந்திரத்தோடு அணிவகுத்தன.

சாம்பானுக்குக் 'குடிக்காணியாட்சிப் பாத்தியதை' கொண்ட தோப்புக்களினின்றும் வாழைத்தார்கள், மொட்டை வண்டிகளில் வந்திறங்கின; சுமங்கலிக் கோலம் ஏந்திய ஏந்திழைகளின் பாவனை பிரதிபலித்தது.

"அப்பாலே, இன்னம் என்ன சோலி மிச்சம் சொச்சம் இருக்குது, வேலப்பா?'' என்று அதிகாரத் தோரணையில் வினவினார் சாம்பான்.

''வெத்தலை-பாக்கு, சந்தனம் வாங்கணுமுங்க, பெரியப்பா!'' என்று மரியாதை பளிச்சிடப் பதில் சொன்னான் வேலப்பன். குடிச் சிறையிலிருந்து தன்னை விடுதலை செய்து, தன்னையும், தன் குடும்பத்தையும் காத்த புண்ணியவானுக்குக் காட்டுகின்ற 'நன்றி', அந்த மரியாதையில் முகம் பார்த்திருக்கலாம்.

''பிஸ்கோத்தும், மிட்டாயும் வாங்க வேணும்.''

''பெரிய மனுசங்களுக்குக் கொடுக்கத்தானே, பெரியப்பா?''

''மனசாலே உயர்ந்த பெரிய மனுசங்களுக்கும் கொடுப்போம்; மனசளவிலே உயரப் பழகிக்கிட்டு வர்ற நம்மளை மாதிரி ஆளுங்களுக்கும் கொடுப்போம்!''

''சவாசு! அப்படியானா, உடனவே வாங்கிக்கிடலாம். கங்காணி ஐயாதான், சுளைசுளையாய் நூத்தியொரு ரூபா காந்திச் சாமியோட விழாச் செலவுக்குத் தந்திருக்காரே?''

''கங்காணி ஐயா பணம் தந்தது வாஸ்தவந்தான். ஆனா, அந்தப் பணத்தை நான் தொடப் போறதில்லே!''

''ஏங்க, அந்தக் காசை நாம தொடப்புடாதுங்களா?''

''ஆமாப்பா; தொடத்தான் படாது!''

''அது பாம்புங்களா, பெரியப்பாரே?''

''ஊம்; அந்தப் பாம்பு, நல்லதா, கெட்டதான்னு குணங்குறியைத் தெரிஞ்சுக்கிறவரைக்கும், அதை நான் தொடவே மாட்டேன்! காந்தி விழாச் செலவுக்கு வளமைப்படி நானே செலவழிச்சுக்கிடுவேன்; காந்தித் தெய்வம் தந்த பணத்தை, அந்த மகராசருக்குச் செல

வழிக்காமல், பின்னே வேறே யாருக்குச் செலவழிக்கிறதாம்?''

வானக்கரையில், கண்ணுக்குச் சரிவரப் புலப்படாமல், ஆகாயக் கப்பல் ஒன்று, மெல்லிய ஓசை பரப்பி நீந்திக் கொண்டிருந்தது.

''சாமான் சட்டு அம்புட்டுத்தானே, மூத்தவுகளே?'' என்று குறுக்கே பாய்ந்தார் முத்தரசன்.

காந்திப் புன்னகையை வெளியிட்டார் சாம்பான். ''யாபகம் வந்தால் சொல்லப்பா, முத்தரசா!...'' என்றார்.

''மாலை, கீலை வேணுங்களா?'' என்று கேட்டவன், பொடியன் பொன்னப்பன்.

''மாலைதான் வேணும்; 'கீலை' வேணாம்!'' என்றார் சாம்பான். சிரிப்பின் சலசலப்புக்கு ஊடே ''காலையிலே, சாயரட்சை மாலை வாங்கியாந்திட்டேன்; ஒரு மாலை, நம்ப காந்திச்சாமிக்கு! இன்னொண்ணு, நாளைய விழாவுக்குத் தலைமை தாங்கிறவங்களுக்கு!'' என்று விவ்ரம் கூறினார்.

''பெரியவுக கூட்டத்துக்குத் தலைமை தாங்க யாரைப் போடப் போறாகளாம்?''—அஞ்சலைப் பாட்டி.

''அக்கரைச் சீமையிலேயிருந்து இப்பத்தான் பிறந்த மண்ணை நாடி வந்து குதிச்சிருக்கிற நம்ம கண்டிக் கங்காணியைத்தான் போடலாம்ணு ரோசிச்சிருக்கேன்! நம்ம ஆளுங்களுக்கு இது சம்மதமில்லைன்னா, மனசை விட்டுப் பயப்படாமல் சொல்லிப்புடலாம்; உங்க இஷ்டப்பிரகாரம் வேறே ஒருத்தரைப் போட்டுக்கிடலாம்!''

"அப்படியெல்லாம் ஒண்ணும் இல்லேங்க; நீங்க நல்லதைத்தான் செய்வீக; அதிலே, நாயமும் கட்டாயம் இருக்கும்; ஆனபடியினாலே, கங்காணியையே உங்க மனசுப்படி விழாவை நடத்தித் தரச் சொல்லுங்க!" பற்பல குரல்கள். ஒரே குரலாக ஒருங்கிணைந்து, ஒருமைப் பட்டு ஒலித்தன.

"சரி, சரி. காரியங்களைச் செஞ்சுக்கிட்டிருங்க; பசியாறிட்டு ஓடியாரேன். எங்க வீரமணி இப்பவாச்சும் திரும்பியிருப்பானோ, என்னமோ? சரி, சரி. நான் வரேன்!"—புறப்படலானார் சேரித் தலைவர்.

ஃ ஃ ஃ

வட்டிற்சோறு ஆவி பறக்கிறது; அகல் விளக்கின் சன்னமான ஒளியில், ஆவியின் புகை சன்னமாகச் சுற்றிச் சுற்றி அலைகிறது.

"உருட்டின சோத்துக் கவளத்தை லபக்னு வாயிலே போட்டுக்கிடாம, நேரங்கெட்ட இம்மாம் பொழுதிலே கூட சொப்பனம் கண்டுக்கிட்டே இருந்தாக்க, அப்பாலே, ஓங்க மேனி என்னாத்துக்கு ஆகுமாம்?"—அங்காளம்மை உரிமை பூண்ட உறவில் வருந்தினாள்.

"வாழ்க்கையே சொப்பனம்தான் அப்படின்னு ஒரு சித்தர் பாடியிருக்கார்; அந்தச் சொப்பனத்தையே வாழ்க்கையாக்கி விளையாட வேணும். விளையாட்டுக் காட்ட வேணும்னுதான் நான் சதா சொப்பனத்திலே மூழ்கிக் கிடக்கேனாக்கும்!"

சோறுறுக் கவளங்கள் விரைந்தன.

தண்ணீர்க்குவளை காலி.

"கச்சப் பொடிக் குழம்புக்கு உப்பு திட்டம்தானுங் களே, மச்சான்காரவுகளே?"

''ஓ! உப்பு பத்தாட்டி நான் ஒன்னை விட்டிருப் பேனா?''

''ஒங்களை மாதிரிதான் ஒங்க தலைச்சன் வீரமணிப் பய லும்!''

''பலே! பலே!''

கடைக்குட்டி வாண்டு கரவொலி எழுப்புகிறான். நாளைய காந்தி விழாவை அமர்க்களப்படுத்த இவன் ஒருவனே போதும்!

அப்போது—

திட்டிவாசல் வெளியில், சைக்கிள் மணிச் சத்தம் கேட் கிறது.

''வெரசாய்ப் போய்ப் பாரேன்; முக்காலும் நம்ப ராசாவாத்தான் இருக்கோணும்; இப்பவே, நம்ப செல்வம் வீரமணியோட மனசையும் கண்டுதண்டிக்கிணு, அவனோட கண்ணாலத்தை இந்த ஐப்பசிக் கடுத்தத்தி லேயே நடத்திப்பிடலாம்; அப்பவே, புது வீட்டுக்கும் குடி புகுந்திடலாம்! ம்... சல்தியா ஓடுடி, புள்ளே!''

இருட்கன்னி நெற்றியில் இட்டுக் கொண்டிருப்பது இரத்தத் திலகமா, என்ன?

''மகனே வீரமணி!''

அங்காளம்மை பெற்ற பாசம் துடிதுடிக்கக் கதறு கிறாள். வீரமணியின் முகம் ரத்த விளாராக இருந்தது!

# 3

அங்காளம்மை, தன் மகனின் முகத்தைப் பார்த்து அரற்றினாள்.

''என்னப்பா நடந்திச்சு? நானும் ஒன் ஆத்தாளும் தொட்டுத் தொட்டு அழகு பார்த்து, மாறி மாறி முத்தம் கொடுத்து ஆனந்தமடைஞ்ச உன் கன்னங்க ரெண்டிலே யும் ரத்தம் பீறிடுதே? — யாரப்பா உன்னை இப்பிடி ஈவு இல்லாம, இரக்கம் இல்லாம அடிச்சுப் போட்டது?... ஊம், சொல்லு வீரமணி, சொல்லு!''—மூர்த்தண்யமாகப் பெற்ற பாசம் சீற முழங்கினார் சேரிச் சாம்பான். கண்கள், மிளகாய்ப் பழங்களாகச் சிவந்தன; சுடுசரம் சுடு கிறது; வழிகிறது.

''வாயைத் தொறந்து பேசுடா, எந் தங்கமே!''-தாய் அலறுகிறாள்; கதறுகிறாள்.

''அப்பாரே; கேட்டுக்கிடுங்க; நடப்புப்படி சொல்லு றேன். அடிநாளையிலே, நானும் நம்ம கங்காணி ஐயா மகள் செண்பகமும் காளி ஆயி ஒழுங்கை மணலிலே கமுக்கமாகச் சந்திச்சுக்கிட்டு, மணல் வீடு கட்டி, புருசன்—பெண்சாதி விளையாட்டு விளையாடுவோம். ஒன் ஃபைன் மார்னிங்... ம்... வந்து... ஒரு அழகான காலைப் பொழுதிலே, அது மாதிரியே நானும் செண்பக மும், புருஷன்—பெண்டாட்டி விளையாட்டு விளையாடி னப்ப, எங்களுக்குள்ளே சண்டை மூண்டிடுச்சு; கணவன்-மனைவின்னா, சண்டை-சச்சரவு வாராமல் இருக்குமுங் களா? இருக்கலாமுங்களா?—எங்களுக்குள்ளாற சண்டை வந்ததாலே, என்னோட அது—செண்பகம்—'டூ' போட்டு டுச்சு!... ஆனா, அந்தச் சம்பவத்துக்குப் பிறகு, நானும் செண்பகமும் சந்திக்கவே வாய்க்கல்லீங்க; அது அக்கரைச்

சீமைக்குப் போயிடுச்சு. இப்ப, நானும் படிப்பை முடிச்சு இங்கிட்டு பிறந்த மண்ணை மிதிச்சேன்; செண்பகமும் இப்ப திரும்பிடுச்சு. செண்பகம் பிஞ்சுப் பிராயத்திலே என்னோட 'டூ' போட்டுட்டுப் பிரிஞ்ச அந்தத் துயரத்தை இன்னைக்கு வரைக்கும்கூட, என்னாலே மறக்கவே முடியல்லீங்க! அந்தத் துன்பம் என்னோட அன்பான நெஞ்சிலே, செண்பகம் கொலு இருக்கிற என்னோட பாசம் மண்டின மனத்திலே ஒரு வடு கணக்கிலே ஏற்பட்டு உறுத்திக்கிட்டே இருந்திச்சு. அதனாலே, எப்பாடு பட்டாச்சும், செண்பகத்தை—சமைஞ்சு பக்குவமடைஞ் சிட்ட செண்பகத்தைக் கண்டு பேசி, என் கூட போட்டி ருந்த 'டூ'வைக் கலைச்சு என்னோடே அந்தச் செண்பகத்தை ராசி ஆகிப்பிடச் செஞ்சிட வேணும்னு தீவிரமான வைராக்கியம் கொண்டேன்; என் ஆசை கூடி வந்திச்சு: காலமும் கை கூடிச்சு; செண்பகத்தைச் சந்திச் சேன், அந்தியிலே; என் மனசைத் திறந்து காட்டினேன்; செண்பகம் ஆனந்தக் கண்ணீர் விட்டுச்சு! —'வீரமணி!... நீங்களும், நானும், புருஷன்-பெண்சாதி விளையாட்டு விளையாடினப்ப, நான் உங்களோடே 'டூ' போட்டேன்; இத்தனை வருஷம் கழிச்சு, நான் உங்க கூட போட்ட அந்த 'டூ'வைக் கலைச்சு நான் உங்களோடே 'ராசி' ஆகணும்னா, நீங்களும் நானும் மறுபடியும் நிஜமாகவே புருஷன்—பெண்சாதி ஆகிப்புட வேணுமாக்கும்!' என்று செருமிச்சு! —என்னோட நெஞ்சத்துக் கனவை இனம் புரிஞ்சுகிட்டாப்பிலே, அது—அந்தச் செண்பகம்—பேசின தும், நானும் அப்பவே 'சரி'ன்னு என் சம்மதத்தைச் சொல்லிட்டேன்! செண்பகம், வானத்துக்கும் பூமிக்கு மாகக் குதியாட்டம் போட்டுச்சு; 'டூ' கலைஞ்சுது; நாங்க ரெண்டு பேரும் 'ராசி' ஆனோம்!... மகமாயி சந்நிதியிலே நானும் செண்பகமும் விதியையே சாடிட்ட பெருமிதத் தோட ஜோடியாய் நின்னு கும்பிடு போட்டுக்கிட்டிருந் தோம்!—அப்பத்தான், மகளைத் தேடிக்கிட்டு வந்தார்

எங்க ஒசத்தியான கங்காணி! —அவரேதான் இப்படி என்னை சவுக்குமிளாறினாலே அடிச்சுப் போட்டார்! செண்பகத்தோட கண்ணீருக்காக— என்னோட செண்பகத்தோட அந்தப் புனிதமான-உயர்வான-சத்திய மான-தருமமான அந்தக் கண்ணீருக்காக நான் மௌனப் பிண்டம் ஆயிட்டேன். கங்காணிக்கும் 'மாப்பு' கொடுத் தேன்!...வினாத் தெரிஞ்ச காலந்தொட்டு, என் நெஞ்சைத் தொட்டு, என் நெஞ்சிலே கண்கண்ட தேவதையாகக் குடி யிருக்கிற அந்தப் பரிசுத்தமான நெஞ்சைச் சுமந்துக்கிட்டு இதோ, உங்க சந்நிதானத்திலே வந்து நிற்கிறேனுங்க அப்பாரே!"

வாழ்ந்து காட்டிய சேரிச் சாம்பானின் குழிவிழுந்த கண்களினின்றும் கண்ணீர் முத்துக்கள் குழி பறித்துச் சிந்தின.

அது ஆனந்தக் கண்ணீர்!

மாட்டுத தொழுவத்திலிருந்து பிணைக் கயிற்றைக் கட்டறுத்துக் கொண்டு வெளியே ஓடி வந்து குதித்தது செவலைக்கன்று.

பாதிச் சோற்றோடு எழுந்த சாம்பான், கை கழுவி யானதும், நேராகக் காந்தி அண்ணலைச் சந்தித்தார். அண்ணலின் திருச்சந்நிதயில், அகல்ஒளியில் மண்டி யிட்டார். காலடியிலே திருக்கை வார் மண்டியிட்டுக் கிடந்தது.

"மகாத்மா! நீங்க வேடிக்கையான இந்த மனுசங் களோட நெஞ்சுகளிலே விதைச்சிட்டுப்போன அன்புவித்து இப்ப அபூர்வமாய், அதிசயமாய் மூளை கிளம்ப ஆரம்பிச் சிடுசின்னுதான் தோணுது!... கேட்டீங்களா, எங்க வீர மணியோட கதையை?— அன்புக்குச் சாதி இல்லே, மதம் இல்லே அப்படி இப்படின்னு நீங்க ஏகமாச் சொல்லிட் டீங்க! பரிசுத்தமானது; நியாயமானது; யதார்த்த

மானது என்கிறதுக்கு இந்தப் பறைச்சாம்பான் மகன் வீரமணியும், அந்த ஒசந்தகுடிக் கங்காணி மகள் செண்பகமும் சாட்சியாய் நிற்கிறாங்க!—ஆனா, கங்காணிக்குப் புத்தி சொல்லிக் கொடுக்கிறதுக்கு, நீங்க இப்ப இருந்திருக்கப்படாதுங்களா?... ஐயாவே, என்ன கமுச்கமாய்ச் சிரிக்கிறீங்களே?...ஓ, எங் காலடியிலே கிடக்குதே, அந்தத் திருக்கைமீன் வாரைக் கண்டா, அப்படிச் சிரிக்கிறீங்க?... என் மகனை அடிச்சவன் எந்தக் கொம்பனாக இருந்தாலும், அவனைப் பதிலுக்குப் பதில் அடிக்காம விடவே மாட்டான் இந்தச் சாம்பான்! ஆனா, நீ பாடம் சொல்லித் தந்திருக்கிற அந்த அன்புதான் என் கைரெண்டையும் கட்டிப் போட்டுப்புடுச்சீங்களே, சாமியே?... இப்ப, இந்த ராத்திரி வேளையிலே, நானும் எம்மகனும் அந்த உயர்வான கங்காணி பங்களாவுக்குப் புறப்படுறோம்; உங்களையும் உங்க அன்பையும் துணையாய்க் கொண்டுதான் புறப்படுறோம்! போயிட்டு வாரோமுங்க தெய்வமே!''

வீரமணியின் அழகான கண்களில் கண்ணீர் நிறைகிறது.

இருதலைமணியன் பாம்பு மாதிரி சுருண்டு நெளிந்து கிடந்த திருக்கை மீன் வாரை, தூர வீசி எறிந்தார் சாம்பான். ''மகனே! புறப்படு!'' என்றார்.

''நானும் வாரேனுங்க, மச்சான்காரரே!''

''ஓ!''

பட்டி வண்டி புறப்பட்டது!

ஃ ஃ ஃ

கண்டிக் கங்காணியின் பேரழகுப் பெருமனையின் தலைவாசலில், மின்னொளி வெள்ளத்தில், மக்கள் நெரிந்தனர்.

புறப்படத் தயாராக நின்ற கங்காணியின் ரேக்ளா வண்டிக்குக் குறுக்கே பாய்ந்து நின்றது சாம்பானின் பெட்டி வண்டி.

''அடடே, சாம்பானா? வாங்க வாங்க!'' என்று வரவேற்றார் கங்காணி. ''உங்களைத் தேடித்தான் இப்ப புறப்பட்டுக்கிட்டு இருந்தேன்!'' என்று தொடர்ந்தார்.

''என்ன விசயம், சொல்லுங்க!'' —சாம்பானின் பேச்சில் நெருப்பு தூள் பறந்தது.

',நீங்க வந்த விசயத்தை முன்னாடி சொல்லப் புடாதா?''

''காந்தியோட பிறந்த நாள் கொண்டாட்டச் செலவுக்காக நீங்க நன்கொடையாய்க் கொடுத்த நூத்தியோரு ரூபாயை உங்ககிட்டவே திரும்பக் கொடுத்திட்டுப் போக வேணும்னுதான் வந்தேன். காந்தி மகாத்மா செத்துப் போயிட்டதாக நான் இன்னமும்கூட நம்பாமல்தான் இருந்துக்கிட்டிருக்கேன்! —இந்த நிலைமையிலே, ஊரார் மெச்ச வெளிவேஷம் போடுற உங்களை மாதிரி போலி மனுசங்களோட நன்கொடையை காந்தி விழாவுக்கு உபயோகப்படுத்தினா, அது தெய்வத்துக்கே அடுக்காது! —காந்தி மெய்யாலுமே செத்துத்தான் போயிட்டார்னு நான் கூட நம்பத்தான் நேரிடும்!...அப்பாலே?''

''ஊம், அப்பாலே?...''

''என் மகன் வீரமணிக்கு உங்க மகள் செண்பகத்தைப் பெண் கேட்கவும் வந்தேனுங்க, கங்காணி ஐயாவே!''

கங்காணி விம்மினார்; உணர்ச்சிவசப்பட்ட நிலையிலே விம்மினார். ''சாம்பான், ஒங்களுக்குக் கோடிப் புண்ணியம் கெடைக்கும்; காந்தி பிறந்த நாள் விழாவுக்கு நான் தந்த நன்கொடையை மட்டும் என்கிட்டே திரும்பத்

தந்திடாதீங்க!... என்னையும் ஒரு மனிதனாகத் தலை நிமிர்ந்து நடமாட ஒரு சந்தர்ப்பத்தையும் கொடுத்திடுங்க!...என்ன, சரிதானே?... ம்... வீரமணி! என்னோட கொஞ்சம் உள்ளே வாங்க!'' என்று வீரமணியை அழைத்தார். ''சாம்பான், நீங்களும் வாங்க; அங்காளம்மை! நீங்களும் வாங்க!'' என்றார்.

அப்போதுதான், செண்பகம் கண்களை மெள்ள மெள்ளத் திறந்தாள்.

வீரமணி செருமினான்.

''வீரமணி, என்னோட மகளை உங்களோட அன்புக் கைகளிலே ஒப்படைக்கப் போற நல்ல சேதியைச் சொல்லத்தான் நான் உங்களைத் தேடிப் புறப்பட்டேன். தெய்வம் தேடி வர்றமாதிரி, நீங்களே வந்திட்டீங்க... உங்களுக்குச் சொந்தமாக இருக்க பொசிப்பு இல்லாத உயிர் வேண்டவே வேண்டாம்னு எங்க பாதாளக் கேணியிலே விழுந்த எம் மகள், உங்களுக்காகவே செத்துப் பிழைச்சிருக்காளுங்க, வீரமணி! அன்பின் சட்டம் சரணாகதி அடைகிறதுதான் — அப்படின்னு காந்தி சொன்ன பேச்சோட உண்மையும் நியாயமும் தருமமும் இப்பத்தான் எனக்குப் புரிஞ்சுதுங்க, வீரமணி!'' விம்மி வெடிக்கிறார் கங்காணி.

ஃ ஃ ஃ

காந்திஜியின் பிறந்தநாள் விழா கோலாகலமாக நடைபெறுகிறது.

தாயின் மணிக்கொடியின் பட்டொளி நிழலில் கொலு வீற்றிருந்தார் அண்ணல் காந்தி அடிகள்.

விழாத் தலைமையாளர் கண்டிச் சீமைக் கங்காணி எழுந்தார்; காந்திஜிக்கு உணர்ச்சிவசப்பட்ட நிலையில்

மாலை அணிவித்தார். திரும்பினார். 'மகாஜனங்களே! ஊர் உலகத்தைப் போலே நானுந்தான் காந்தி செத்துப் போயிட்டார்னு நம்பிக்கிட்டிருந்தேன்: ஆனா, காந்தி செத்துப் போயிடல்லே என்கிற ஒரு சத்தியமான உண்மையை நேத்து ராத்திரிதான் நான் புரிஞ்சுக்கிட்டேன்? இந்தப் புதுப் பாடத்தைச் சொல்லிக் கொடுத்தவளே என்னோட அருமைப் பொண்ணு செண்பகம்தான்! திருவாளர் சாம்பான் அவர்களின் மகன் வீரமணிக்கு சொந்தமாவது என் மகள் செண்பகத்தின் உயிர் என்கிற தெய்வ நீதியையும் நான் தெரிஞ்சுக்கிட்டேன்! என்னோட வீட்டிலேயிருந்து இந்தக் கலியாணத்தை நான் நடத்தி வைக்கவேணும்னா, காந்தி மகாத்மா மறுபடியும் புதிதாகப் பிறந்துதான் தீரணும்! ஆனதாலே, நானும் சேரிவாசிகளிலே ஒருத்தனாக மாறி, இந்தக் கலியாணத்தை, காந்தி பிறந்த இந்தப் புனித நாளிலே நடத்தி வைக்கப் போறேன். அன்பு உள்ளம் கொண்ட உண்மையான காந்தி பக்தர்கள் புது மணத் தம்பதியை அன்போட வாழ்த்தும்படியும் கேட்டுக் கொள்கிறேன்!''

அவர்கள் மட்டுமா வாழ்த்துகிறார்கள்.

# இனி...!

ஊர்ப் பஞ்சாயத்துக் கேணியடி திமிலோகப் பட்டது!

பூங்காவனத்தின் ஆசை மச்சான், ஆணழகன் சிங்கார வேலன் லாரியில் தாறுமாறாக அடிபட்டுச் சாகப் பிழைக்கக் கிடக்கிறானாம்!

ஊர்வாய் பேசியது; பேசுகிறது.

பாவம்...!

''பாவம்டி நம்ம பூங்காவனம்...! நீ சொல்றது நூத்திலே ஒரு சேதிதாண்டி, அஞ்சலை! தன்னோட உசிருக்குசிரான மச்சான்பேரிலே உசிருக்கு உசிராகப் பாசமும் நேசமும் வச்சிருக்கிற பூங்காவனம், விதியோட எழுத்திலே பாவப்பட்ட ஜென்மம் ஆயிடாமல், ஆத்தா அங்காளம்மையோட புண்ணியத்தினாலே மஞ்சளும் மஞ்சள் தாலியும் ஆசீர்வாதம் செய்கிற நல்ல புண்ணியவதியாக ஆகிப் பூடணும்!''

''ஆமாடி... ஆமா...!''

நல்ல மனங்கள் உருகின.

இளைய வெயில் உச்சிப் பனைக்குத் தாவியது.

ஃ ஃ ஃ

உண்மைக்கு அசலான, அச்சான இன்னொரு பெயர் தான் வாழ்க்கை!

ஆகவேதான், வாழ்க்கைக்கு உண்மை... உண்மை நிலை ஜீவநாடியாகவும், ஜீவகீதமாகவும் அமைந்திட வேண்டுமென்பது விதியாகவும் விதியின் விதியாகவும் அமைகிறது: அமையவும் வேண்டும்!

உண்மை கொடிகட்டிப் பறந்திடவும் சத்தியமும், தருமமும் ஆனந்தக் கும்மி கொட்டிடவும் வாழ்ந்து காட்டத் துணிந்தவன்தான் பூங்காவனம்! ஏழ்மைக்குப் பிரதிநிதிதான். இருந்தால் என்னவாம்?... அவன் மனம் விலைமதிக்க முடியாத சொக்கப் பச்சையாக அமைந்து விட்டதே? போதாதா? ‘போதும்’ என்கிற மனம் அமைந்ததே அவளுக்குக் கிட்டிய பூர்வ ஜன்மப்புண்ணியம் தான்! ஆனாலும், அந்தப் புண்ணியத்தை மண்ணைக் கவ்வச் செய்யத் துணிந்த பாவப்பட்ட சோதனைகள் ஒன்றா, இரண்டா?

குளமங்கலம் மண்ணுக்குக் ‘குடிக்காணியாட்சிப் பாத்தியம்’ கொண்டாடிக் கொண்டிருந்த ஆண்பிள்ளைச் சிங்கம் வீரமுத்து, கண்டிக்கங்காணி கனகமுத்துச் சேர்வைகாரரின் பேரப்பிள்ளையாண்டான் என்னும் உறவையும் உரிமையையும் சவால் விட்டு, மெய்ப் படுத்திக் காட்டுபவன் மாதிரி, தன் முறைப் பெண்ணான அத்தை மகள் பூங்காவனத்தை அடைந்திட ஒற்றைக்காலி லேயே தவம் செய்யலானான்!

ஆனாலும், சூரப்புலி வீரமுத்துவை விடுதலைப் புலியாக—அதாகப்பட்டது, சூரத்தனத்திலிருந்து விடு தலை செய்யப்பட்ட வெறும் புலியாக ஆக்கி வேடிக்கை பார்க்கவும், வேடிக்கை காட்டவும் புரட்சித் தமிழச்சி யாகவே பூங்காவனம் அமைந்து விட்டாள்.

‘முடவன் எவனுமே கொம்புத் தேனுக்கு ஆசைப்படப் புடாது என்கிற அனுபவச் சட்டத்தைக்கூட புரிஞ்சுக்

கிடத் துப்புக் கெட்டுப் போயிட்ட துப்புக்கெட்ட என்னோட அம்மான் மகன் வீரமுத்து எனக்கு முறை மாப்பிள்ளையாக இருக்கலாம். அதுக்காக, அந்த வீரமுத்துவுக்கு நான் வாக்கப்பட்டு அவனுக்கு முந்தானை விரிக்க வேணும்னு எங்காச்சும் விதி இருக்கா என்ன? நாட்டுக்கும், வீட்டுக்கும் பச்சையாய்த் துரோகம் செஞ்சுக் கிட்டு இருக்கிற அந்தச் சிகப்புப் பணக்காரக் குடிகாரன் வீரமுத்துவினாலே என்னை என்ன செஞ்சுப்புட ஏலுமாம்? தூவே!'

காறித் துப்பிக்கொண்டே தலையைத் தட்டி முடி போட்டவளாகத் தலை நிமிர்ந்தாள் பூங்காவனம்.

ராத்திரி வந்தது.

வந்த ராத்திரி சிவராத்திரியாகவே வாய்த்தது. கன்னி நிலவாகவே மெய் உருகி மெய்ம் மறக்கின்றாள் பூங்காவனம். 'அன்பான அருமைச் சிங்கார வேலனே!... எம்புட்டு ஆசைமச்சானே! இந்தச் சமைஞ்ச குட்டி பூங்காவனம் வாழ்ந்தால், இனி உங்களோட தானாக்கும் வாழ்வாள், ஆத்தா அங்காளம்மை பேரிலே ஆணை வச்சுச் சொல்லிப்புட்ட சங்கதியாக்கும் இது!' தேவ குமாரனாகத் தோன்றாமல் தோன்றுகிறான் சிங்கார வேலன்!

பாதிச் சாமம்.

கதவு தட்டப்படுகிறது.

பத்ரகாளியாகிறாள் பூங்காவனம். ''என்னாங் கிறேன், அம்மான் மவன்காரவுகளே! ஒங்களுக்கு என்னா வேணும்? அதுவா, இல்லை இதுவா? ஊம்... சல்தியிலே செப்பிடுங்கங்கிறேன்!'' நயமாக, விநயமாக வினவினாள்.

அவள் சுட்டிய இடங்களிலே, வீச்சரிவாளும், பட்டாக் கத்தியும் விதியென நமட்டுச் சிரிப்புச் சிரித்தன!

"எனக்கு நீதான் வேணுமாக்கும்!"

"ஓ... அப்படீங்களா, அம்மான் மவன்காரவுகளே?... பலே...! ஒங்களுக்கு நான்தான் வேணும்னா, மூச்சுக் காட்டாமல் என்னை எடுத்துக்கிட வேண்டியதுதானே? அப்பாலே, என்ன ரோசம் கெட்ட ரோசனை வேண்டிக் கிடக்குது? ஊம்... வாங்கங்கிறேன்... ஊம்!"

சிம்னி விளக்கு பெரிதாகவே எரிந்தது.

மிருகவெறி கெட்டிமேளம் கொட்டப் பாய்ந்தான் சூரப்புலி வீரமுத்து.

பூங்காவனம் கண்கள் சிவக்க ரத்தக்காட்டேரி ஆகிறாள்! காந்தி மகாத்மா மானசீகக் குருவாகிஉபதேசம் செய்திருக்க வேண்டும்! மறு இமைப்பில், பூங்காவனத்தின் நகங்களும், பற்களும், மனிதத் தன்மையைப் பறி கொடுத்து நின்ற வீரமுத்துவிடம் விளையாடுகின்றன; விளையாட்டுக் காட்டுகின்றன!

ரத்தம் பீரிடுகிறது.

வீரமுத்து வீரிட்டான்: "ஐயோ! வலி தாளல்லியே! எனக்கு மாப்புக்கொடுத்து என்னை விட்டுப்புடு புள்ளே! நன்னியோட நான் கண்காணாமல் ஓடிப்புடுவேன்!"

சிங்காரவேலனின் புண்ணியத்திலே, வீரமுத்துவின் தலை தப்பியது.

அன்றொரு நாள் அந்திக்கட்டில் ஊருணியில் குளித்து முழுகி மஞ்சள் ரவிக்கையையும் சிவப்பு நிறத்திலான உள் பாவாடையும் காயப் போட்டுவிட்டுச் சுங்கடிப் புடவை யின் ஒரு தொங்கலைக் கருவேல மரத்தின் ஈசான்யமுடுக் கிலே முடிபோட்டு, மறுமுனையை உடம்பைச் சுற்றிக்

கொண்டு உலரவைத்துக் கொண்டிருந்தாள் பூங்காவனம். எதிர்பாராத மாய விதியாகப் பேய் மழையும், சூறைக் காற்றும் கொட்டி முழக்கத் திக்குமுக்காடிப் போனாள் கன்னி; இடுப்புச் சேலையைக் காற்று கொள்ளை கொள்ளவே, தீ மிதித்தவளாகத் துடித்த வேளை கெட்ட அவ்வேளையிலே, அங்கே செடி மறைவில் தேவகுமாரனாய்த் தோன்றின சிங்காரவேலன் கோவணத்துடன் நின்று, இடுப்பு வேட்டியைப் பூங்காவனத்தின் அழகு மேனியைக் குறிவைத்து வீசினான்!

மானம் காத்த அந்த நல்ல புண்ணியவானையே இப்போது மனம் காக்கவும் நிர்ணயம் செய்து கொண்டாள் பூங்காவனம்.

ஏழைமையும், ஏழைமையும் ஜோடி சேர்ந்தன.

காலம் ஒரு புள்ளி மானுங்கூட!

ஒரு நாள் அந்தி சந்திப்பொழுது; கம்மாய்க்கரை.

எதிரில் பூங்காவனத்தின் எதிரியான வீரமுத்து, சைக்கிளும் கையுமாக நின்றான்; உறுமினான்.

''ஏ புள்ளே...! பொட்டுப் பொழுதுக்குக் கால் பாவி தின்னு, பொட்டிலே அறைகிறதாட்டம் நான் சொல்லப் போற இந்த நல்ல சமாச்சாரத்தைக் காதிலே வாங்கிக்கிட்டுப் பறிஞ்சுப்புடு! நாட்டையும் வீட்டையும் ஒசத்தி நினைச்சு, பணப்பசை மிஞ்சியாய் இந்த வீரமுத்துவை, உம்புட்டு முறைமச்சானான என்னைக் கள்ளச் சாராயம் குடிக்கிறவன் என்னும்படியான ஒரு அற்ப சொற்பமான காரணத்தை வச்சுத் தட்டிக் கழிச்சுப்பூட்டு, எவனோ புறம்போக்குப் பயமவன் ஒருத்தன் கட்டின மஞ்சள் தாலியிலே கும்மாளம் போட்டுக்கிட்டு இருக்கிற உனக்குத் தாலிப்பொசிப்பு இன்னும் கொஞ்ச நாளைக்குத் தானாக்கும்!... இதை ஒன் சுங்குடி முந்தானையிலே முடி

போட்டு வச்சுக்கிடு!... ஆமா, செப்பிப்பூட்டேன்! உன்னோட ஆசையான, நேசமான மச்சான் உயிரைப் பலி வாங்காமல், நான் நல்ல தூக்கம் தூங்கவே மாட்டேன்! இது சத்தியமான சத்தியமாக்கும்! நீ இல்லாமல், நான் இந்த மண்ணிலே முழுப் பைத்தியமாகிட்ட அநியாயத்துக்குப் பழிக்கும் பழி வாங்காமல் தப்புவேனா நான்? நான் எப்பவுமே சூரப்புலியேதான்!''

புண்ணியத்தாலி ஊசலாடியது.

ஃ ஃ ஃ

உதயசூரியனைக் கண் காணாமல் செய்த பெருமையில், வெய்யில் சூடேறிக் கொண்டிருக்கிறது.

''ஐயையோ... எந்தெய்வமே!''

அலறிக் கதறிக் கொண்டே, தலைவிரிகோலமாக ஓடோடி வந்தாள் பூங்காவனம்! நெற்றிக்கு மகிமை சேர்த்த மீனாட்சி குங்குமம் சன்னம் சன்னமாகக் கரைகிறது; கரைந்து கொண்டிருக்கிறது. கொண்டைப் பூக்கள் கெண்டை மீன்களாகத் துவண்டு வீழ்கின்றன; ரத்தமும் ரணமுமாகிக் குற்றுயிரும் குலை உயிருமாகப் பேச்சு மூச்சில்லாமல் வெறும் பிணக் கணக்கிலே கண்மூடிக் கிடந்த சிங்காரவேலனின் பாதங்களிலே நெடுஞ்சாண் கிடையாகச் சரணடைந்தாள். ரத்தக்கண்ணீர் மடை உடைகிறது. மடையை உடைக்கிறது.

அழகான முகம் முழுவதிலுமே அடிபட்ட ரணங்கள் பளிச்சிட்டன.

நெற்றிப் பொட்டுக்குமேலே மண்டை பிளந்து விட்டாற்போன்று எலும்புகள் திமிறித் தெறித்தன;

மூச்சிறைக்க ஓடி வந்த நாட்டு வைத்தியர் நிதானம் காத்து, அழகுச் சிங்கம் சிங்காரவேலனின் நாடியைச்

சோதித்தார். ''ஆத்தாடி! உம்புட்டு அருமை பெருமை யான மச்சானோட அன்பான உயிர், சிவலோகம் பறிஞ்சு பொழுது உண்டனவே ஆகிடுச்சு, ஆத்தாளே!'' வைத்தியர் செருமினார்.

''ஐயையோ! எம்புட்டு ஆசை மச்சானே!'' நிலை குத்தின பார்வையில் சிலையான பூங்காவனம், மீண்டும் ரத்தக்காட்டேரி ஆகிறாள்; ''என்னோட நேச மச்சானை இப்படி அநியாயமாகச் சாகடிச்ச அநியாயக் காரப் பாவி யாருன்னு தெரிஞ்சா, அவனைத் தேடிப் பிடிச்சுக் கடிச்சு குதறி அந்தப் படுபாவியோட உசிரைக் குடிச்சுப் புடுவேனாக்கும்!'' விண்முட்டி மண்முட்டக் கூக்குரலிட்டாள்!

மறு இமைப்பில், சிங்காரவேலனைப் பலி வாங்கிய அந்தப் பாவியைக் கைகளைக் கட்டிய வண்ணம் பரபர வென்று இழுத்து வந்து நிறுத்தினார்கள் ஊர் இள வட்டங்கள்!

பூங்காவனம் ஏறிட்டு விழித்தாள்: மின் அதிர்ச்சியில் நிலைகுலைந்தாள். ''அட, பாவி வீரமுத்து... நீயா?''

வீரக் கண்ணகியாக நீதிமுழக்கம் செய்து, வீரத் தமிழச்சியாகப் பாய்ந்த பூங்காவனம், வெறி தீர வீரமுத்துவின் முகத்திலே எச்சிலை உமிழ்ந்து, அவன் தலை முடியைப் பற்றிக் குலுக்கி அவன் முகத்தை நிமிர்த்தினாள்!

சூரியன் சுட்டெரித்தான்.

''தெய்வம் திருவுள்ளத்துக்கும் அஞ்சாமல், ஒன்னோட சவால்படி என்னோட மஞ்சள் தாலியைப் பறிச்சுக்கிட்ட ஒன்னை அம்மாஞ்சுளுவிலே உசிரோட விட்டுப்பூடுவேனா, என்ன...? என் தாலியைப் பறிச்சுக் கிடுறதாய் எங்கிட்டே நீ செஞ்சு சபதத்தை மெய்ப்

படுத்திக் காட்டவேணும் என்கிற பாவப்பட்ட மிருக வெறியிலே எனக்கு எமனாகி, என் மச்சான் மேலே நயவஞ்சனையிலே லாரியை ஏத்தி, எந்தெய்வத்தைச் சாகடிச்ச உன்னைக் கடிச்சுக் குதறி உன்னை உசி ரோடவே சாகடிச்சுப் பழிக்குப் பழி வாங்கிட்டு, நானும் எம்மச்சான் பின்னாடி சிவலோகம் பறிஞ்சிடு றேன்!''

வீரமுத்துவின் சிவப்பேறிய விழிகளிலே சுடுநீர் தளும்புகிறது; ''அயித்தை மகளே! ஒரு பொழுதிலே, நான் உன் தாலியைப் பறிச்சுக்கிடுறதாகச் சவால் விட்டது என்னமோ நிஜம்தான்! ஆனா, அதுக்கும் இப்ப ஏற்பட்ட விபத்துக்கும் சாமி சத்தியமாய் எந்தச் சம்பந்தமுமே கிடையாது. தவிரவும், லாரியிலே அடிபட்ட ஆள் உம்புருசன் என்கிற தாக்கலே நீ சொல்லித்தான் எனக்கு விளங்கிச்சு... என்னைப் பழிக்குப் பழி வாங்க வேண்டி, நீ என்னோட உசிரைத் தாராளமாய்க் குடிச்சுப்புடு! நான் சம்மதிக்கிறேன். ஆனா, அதுக்கு ஊடாலே, நடந்த நடப்பைச் சொன்னால்தான் எம் மனசு ஆறும்...''

வீரமுத்து பேச்சை முடிக்கவில்லை.

கிறுக்குப் பிடித்தவளாகத் தலைமுடியைத் தாறு மாறாகவே பிய்த்துக் கொண்டவள், அடுத்த கணம் தன் கழுத்துத் தாலியையும் பிய்த்து எறிகிறாள்!

''தங்கச்சியோ...''

வீரமுத்துவின் ஆசைக் கண்ணாட்டி பவளக்கொடி நா தழுதழுக்க விம்முகிறாள்.

வெறிச்சோடிக் கிடந்த சூன்யத்தை வெறித்தவாறு நடந்த கதையை நைந்த குரலில் பேசி நின்றாள் பூங்காவனம்.

"எம் புருசன் குடிபோதையிலே லாரியை உன் மச்சான் மேலே ஏத்திக்கொன்னுப்புட்டாகளா? தங்கச்சிப் பொண்ணே...! எம் மச்சான் எங்க கண்ணாலத்துக்கு முந்தி குடிகாரராக இருந்தது வாஸ்தவம்தான்; ஆனா, என்னைக் கட்டிக்கிட்டப்புறம், குடியை மறந்து, மெய்யாலுமே நல்ல குடிமகனாக மாறிப்பூட்டாங் களாக்கும்!" தங்கத் தாலி மின்னிப்பளிச்சிடக் கருவத் தோடு பேசினாள் பவளக்கொடி.

மெய் நடுங்கப் பொறிகலங்கி மலைத்து நின்றாள் அபலை பூங்காவனம்.

'பவளக்கொடி செப்பினது மெய்யாலுமே சத்தியந் தானோ? அப்படின்னா, என் அருமை மச்சானோட பெருமையான உசிரைப் பறிச்சுக்கிட்டது பாழும் விதியேதானா?' வீரமுத்து ஒடுங்கி நின்ற திசைநோக்கி மறுகி நடந்தாள். நெருக்கமாக வீரமுத்துவை நெருங்கி னாள்! கொஞ்சம் முந்தி தான் துப்பிய எச்சில் இன்னமும் காயாமல் இருக்கவே, சுங்கடி முந்தானையைக் கொய்து எச்சிலின் ஈரத்தைத் துடைத்தாள் பூங்காவனம்.

தலை நிமிர்ந்து கண்ணீர் வழிந்தோட நின்ற வீரமுத்து, வாயைக் குவித்து ஊதினான். கள்ளச் சாராயத்தின் கெட்ட வாடை, நெடி எதுவுமே தடயம் காட்டவில்லை!

"அயித்தை மகளே பூங்காவனம்...! பவளக்கொடிக்கு நான் திருப்பூட்டினதிலேருந்து என்னைக் குடியை மறக்கச் செஞ்சு, என்னை அசலாக்வே நல்லவனாகவும் மாற்றிப்புட்டா எந்தெய்வம் பவளம்...! சாமி சத்திய மாய்ச் சொல்லுறேன், நான் உன் தாலியைப் பறிச்சுக் கிடப் போறதாக ஆத்திரத்தினாலே சவால் விட்டது மெய்யான சங்கதிதான்! ஆனா, அந்தச் சுபதத்துக்கும் இப்பைக்கு நடந்த விபத்துக்கும் ஒரு சம்பந்தமும் கிடையாது. ஆவுடைத்தாங்கோட்டை— பனங்குளம்

நெடுஞ்சாலையிலே நான் என்னோட சொந்த லாரியை வெரசாய் ஓட்டிப் போய்க்கிட்டு இருந்தேன். ஒரு மடக்கத்திலே நான் என் லாரியைத் திருப்பின சமயத்திலே, அந்த ஆள் அதுதான் உன் மச்சான், அத்துமீறிக் குடிச்சவர் கணக்கிலே தள்ளாடித் தடுமாறி வந்துக்கிட்டிருந்தார். ஒதுங்காமல் கொள்ளாமல் தன் போக்குக்கு தலைசுத்தினாப்பிலே நடந்து வந்தவர், லாரிமேலே மோதிக்கிட்டு மண்ணிலே சாய்ஞ்சிட்டார்; நான் பாடுபட்டு 'பிரேக்' போட்டும், என்னாலே லாரியைக் கட்டுப்படுத்த முடியலே! தடம் மாறாமலே விழுந்து கிடந்த உம் மச்சான் மேலே லாரி ஏறிடுச்சு! உம் மச்சானோட அருமையான உயிர் பறிபோனதோடே விதியோட விளையாட்டும் முடிஞ்சிருச்சு! இதுதான் ஆத்தா சத்தியமாய் நடந்த நடப்பு! என்னை நம்பு—பூங்காவனம்!'' வீரமுத்து புலம்பி அழுதான்.

எந்தப் புற்றிலே எந்தப் பாம்பு இருக்குமோ?

பூங்காவனம் இப்போது அழவில்லை! 'அப்படீன்னா, சட்டத்தோட நீதிக்கூண்டிலே குற்றவாளியாய் நிறுத்தப் படவேண்டியது மெய்யாலுமே விதியேதானா? நடந்தாள்: அருமை பெருமை வாய்ந்த மச்சான் சிங்கார வேலனை மறுபடி அண்டினாள்; முகத்தோடு முகம் பொருத்தி ஓர் அரைக்கணம் அமர்ந்திருந்தாள்! மறுகணம், அவள் முகம் சுழித்தாள்; முகம் சுளித்தாள்! 'உன் மச்சான் அத்துமீறிக் குடிச்சிட்டது கணக்கிலே தள்ளாடித் தடுமாறி வந்துக்கிட்டிருந்தார்!' வீரமுத்துவின் வாய்மொழிகளிலே விதி சிரித்ததோ, இல்லை, வினைதான் சிரித்திருக்குமோ?

அப்போது—

அங்கே—

அருமை பெருமை மிகுந்த, ஆசையும் நேசமுமான அன்பு மச்சான் சிங்காரவேலனிடம் வெறும் பிண வாடையை மட்டுலுந்தானா பூங்காவனம் நுகர்ந்து உணர்ந்தாள்...? சே...!

''ஆத்தாளே...! அதுவரையிலும் ஒரு பாவமும் அறியாமலே இருந்திட்ட எம் மச்சானைச் சமுதாயக் குற்றவாளியாக ஆக்கி, என்னையும் பாவப்பட்டதொரு சென்மமாக ஆக்கி, அபூர்வமாச் சோடி சேர்ந்த எங்களைச் சோடி சேர்த்தே அலங்கோலமாச் சோதிச்சுப் புட்டியேடி...ஆத்தாளே?''

வேரறுந்த சரக்கொன்றையென மண்ணிலே சரண் அடைகிறாள். பூங்காவனம்! வாய்திறக்க, அவளுக்கு இனிமேல் என்ன மிச்சம், மீதம் இருக்கிறதாம்?... அந்த விதிக்கும்தான் இனி என்ன விட்டகுறை, தொட்டகுறை இருக்கப் போகிறதாம்...?

பாவம்...!

பாவம், விதி...!

'தமிழ் அரசி'—24-4-92

# ஆத்தா

## ஒன்று

கங்குல் தாய் கருநிறத் துகிலெடுத்து, அதைத் தொட்டிலாக்கி உலக மக்களைப் படுக்கவைத்துத் தாலாட்டுப் பாடிக்கொண்டிருந்த வேளை அது. பலருக்கு உறக்கம் பிடித்தது; சிலர் கொட்டாவிகளை எண்ணிக் கணக்கிட்டுப் பிரித்துக் கொண்டிருந்தனர்; எஞ்சியவர்களுக்குத் தூக்கம் வேம்பானது. இந்தக் கும்பலில்தான் அவளும் சேர்த்தி.

அவள் என்றால் மட்டும் போதுமா—போதாது. அவளுக்கும் பெயர் ஒன்று உண்டு. பெயர் சூட்டும் நிகழ்ச்சி ஒரு விழாவாக அமையாமற்போனாலும், அந்தப் பெயரை அவளுக்கு இட்டு அழைப்பதற்கு பெற்றோர் எவ்வளவோ காலம் காத்துத் தவம் கிடந்தார்கள். 'பொறக்கப்போறது ஆண் குஞ்சாக இருக்கோணும், ஆதி பிரமர் சாமியே!' என்ற அவர்களது 'வேண்டுதலை' பலிக்கவில்லை; ஆனால் பிறந்த பெண் குழந்தை 'மூக்கும் முழியுமாக' இந்த மண்ணில் முதற் குரல் கொடுக்கத் தவறவில்லை.

அவள் பெயர் என்ன தெரியுமா? பொன்னரசி! பெயரைச் சொல்லும் உதடுகளில் கற்கண்டுச் சுவை வழி

மா—3

வதைப் போலவே, அவளைப் பார்க்கும் கண்கள் அன்புப் போதையும் இன்பப் போதமும் பெற்றுத் திகழும். பொன்னுக்கு அரசியாகவும், பெண்ணுக்கு அரசியாகவும் விளங்கின மகளுக்கு நடை வண்டி கொடுத்தவர்கள் அவளை ஈன்று வளர்த்து வந்தவர்களே தாம். என்றாலும் ஓர் அதிசயம் என்னவென்றால், காலம் பருவத்தையும், பருவம் தாவணியையும் பரிசளித்தன. அவள் 'சமைந்தாள்'. திறந்த வெளி அரங்கமாக இயங்கிவந்த ஊரும் உலகமும் அன்று தொட்டு அவள் வரை சுருங்கிக் கொள்ளப் பழகிக் கொண்டன. அவள் மனம் புழுங்கினாள். விரக்தியின் நெட்டுயிர்ப்பும், வேதனையின் குமைச்சலும் அவளது பருவத் துடிப்பைக் கிண்டிவிட்டு வேடிக்கை பார்க்கும் தருணத்தில், ஆசை முகமொன்றை ஆர்வம் பொங்க மனத்திரையில் வரைந்து ஓவியமாக்கி அனுபவித்து ஆறுதல் பெற்றாள் அவள். 'மச்சான் இந்தக் கணக்குக்கு பர்மாவிலே மாந்தளையிலேருந்து திரும்பினதும், எங் கழுத்திலே மஞ்சக்கயிறு கட்டிடுவாங்களாமே!' என்று தனக்குத்தானே வினா வடிவில் விடை அமைத்துப் பூரித்துப் போயிற்று பெண் உள்ளம். கனவின் வடிவிலே காதல் வளர்ந்தது. காதலின் உருக்கொண்டு கனவு நீண்டது. காதலும் கனவும் ஒட்டாத இரு துருவங்கள் என்கிறார்களே? ஐயை அறிவாளோ?

## இரண்டு

முன்னைப் பழங்கதை ஆயிற்றே இத்தனையும்!

பொன்னரசி விம்மினாள். ஏன்? வாழ்க்கைப் பாதையில் இருபத்தெட்டு மைல் கற்களைக் கடந்து வந்தவளுக்குத் துன்பம் ஒரு கேடா என்ன?

பொன்னரசியின் செவிப் புலன், எங்கிருந்தோ மிதந்து வந்து மோதிய அழுகைக் குரலை நுகர்ந்தது.

அவளும் நெஞ்சு வெடிக்க விம்மலானாள். துயரம மண்டிய ஓலத்தினின்றும் பிரிந்து தெரிந்த அந்தக் குழந்தையின் கதறல் அவளுடைய நெஞ்சின் அடித்தளத் தில் சம்மட்டியாக இறங்கியது. பொன்னரசி துடித்தாள்! துவண்டாள்; உயிர்ப்பு விடை பெற்றுவிடும் போல ஓர் உணர்வு கிளர்ந்தெழுந்தது. வாரிச் சுருட்டிக் கொண்டு எழுந்து உட்கார்ந்தாள். உடுத்திருந்த முன்றானைக்குள் அவளது மேனி ஒளிந்தது.

திருக்கோகரணத்தின் தலை வாயிலில் இருந்த பழைய அரமனை அப்போதைய மணி பன்னிரண்டு என்று சொன்னது. பஸ் நிலையத்தில் இருந்தவள் கேட்டாள். அவலம் நிரம்பிய ஓலத்தில் சுருதி கம்மிப்பட்டிருந்தது. பொன்னரசி மெல்ல எழுந்து நடை பயின்றாள். ஆஞ்சநேயர் கோயிலைத் தாண்டிய இடத்தில் காணப் பட்டது இடிந்த சுவர்ப்பகுதி. அங்கிருந்துதான் அழுகை 'சிரித்து'க் கொண்டிருந்ததென்பதை உணர்ந்து கொண் டாள் அவள். பிரஹதாம்பாள் எனும் தெய்வத்தை எண்ணித் தொழுது வேண்டினாள்; மண்டியிட்டுத் தரை யில் உட்கார்ந்தாள. 'பச்சை மண்' அது. அடுத்துப் படுத் திருந்த பெண்தான் குழவியின் அன்னையாக இருக்க வேண்டும். மூடு துணி எதுவுமில்லாமல் திறந்து கிடந்த தாய்மையின் இருப்பிடத்திலே மதலைச் செப்புவாய் பற்றிச் சப்பிச்சப்பிப் பார்த்தது. பாலமுதம் சுரந்தால் தானே...? ஆகவேதான் தொண்டைக் குழியில் நோவு எடுக்கும் பரியந்தம் அப்படிக் கத்தித் தீர்த்தது அது— அந்தப் பச்சைப் பாலகன். பெற்றவளுக்குக் குழந்தையை ஈன்ற கடமையுடன் செயல் முடிந்து விட்டது போலும்! அவள் தன் போக்கிலே ஆடாமல் அசையாமல் கண் வளர்ந்து கொண்டிருந்தாள்.

பொன்னரசி ஊர்பேர் அறியாத அந்த ஸ்திரீ மீது ஆத்திரப்பட்டாள்; தொட்டு எழுப்பினாள்; தட்டிக்

கூப்பிட்டாள். ஊஹூம், அவள் ஏன் அக்கறை கொள்ளப் போகிறாள்?

பொன்னரசி குனிந்து தன்னைத்தானே ஒரு முறை நோக்கிக் கொண்டாள். நெஞ்சகம் விம்மித் தணிந்தது. ஆனால், விழிப்புனல் மட்டுமே வடிந்தது! ம்...என்னாலே என்ன செய்ய முடியும்?

கைந் நொடிப் பொழுது கழன்று வீழ்ந்தது.

ஆதுரம் துள்ளப் பொன்னரசி குழந்தையை அணுகினாள்; குனிந்து அதை வாரியெடுத்து அணைத்துக் கொள்ள முனைந்த நேரத்தில், இதயத்தில் இடியொன்று வீழக் கண்டாள். இடியோசை, காதுகளைத் துடித்த நெஞ்சு நஞ்சம் உண்டாற்போலப் பதைத்துப் பின் தங்கிற்று. ''ஆ!...ஐயோ?'' என கூக்குரல் பரப்பினாள் பொன்னரசி. உதிரம் கொட்டியது, கண் முனைகள் இரண்டிலுமிருந்து. அடிவயிற்றில் அவளது மெலிந்த விரல்கள் இழைந்தன. மறுகணம் அவை சூடு பட்டுச் சூம்பின. அமிர்தம் பிறக்கும் பகுதிகளில் தீ அழல் எரிந்தது. நெற்றிப் பொட்டுத் தெறித்தது. 'ஐயையோ!' என்று கூப்பாடு போட்டவாறு பொன்னரசி மண்ணில் சாய்ந்தாள். அடி துண்டு பட்ட முருங்கையைப் போன்று.

அப்போது, 'ஆத்தா! ஆத்தா!' என்ற அழைப்புக் கேட்கத் தொடங்கியது.

அவள் விழிகளை விலக்கினாள். ஒருக்கால் 'ஆத்தா' என்ற சொற்கள் அவளுடைய உந்திக் கமலத்தைத் தொட்டனவோ? அவள் திகைப்படைந்தாள். குஞ்சுக் குழந்தைப் பிஞ்சுக் கைகளையும், பஞ்சுப் பாதங்களையும் பயன்படுத்தி முன்னேறி அந்தப் பஞ்சையிடம் பால் சேகரம் செய்ய எத்தனித்துக் கொண்டிருந்தது. பேசாத

பொற் சித்திரத்தை நெஞ்சுடன் நெஞ்சு இறுத்தி இறுக அணைத்த வண்ணம் சத்தைக் கூட்டி எழுந்தாள் பொன்னரசி. எடுத்த முயற்சியில் தோல்வி கண்ட சிசு வீரிட்டு அலறியது. தாய்க்காரி அப்போது மட்டும் எப்படியோ விழித்துவிட்டாள்; 'சீ! தூத்தேரி!' என்று ஏசியபின், குழந்தையை அவளிடமிருந்து பிடுங்கிக் கொண்டாள்; காறித் துப்பினாள்! எச்சிலைத் துப்பியவள் மீதும் அந்த எச்சிற்துளியொன்று பட்டது. கோடை மழைக்குக் கட்டியங் கூறியது கொடி மின்னல்.

## மூன்று

புதுக்கோட்டை பஸ் நிலையம் உதய சூரியனின் கருணைப் பார்வைக்கு ஆளானது. வாகன ஊர்திகளும் பிரயாணிகளும் கலந்த ஓர் அவசர—அவசியச் சூழலிலே, காலமெனும் திரி இயற்கையெனும் விளக்கிலே நின்று நிதானித்து எரிந்து கொண்டிருந்தது. முத்தி நெறி அறிந்த தவ முனியின் இதயம் போல நிர்மலமாகக் காட்சி கொடுத்தது விண். துறவு மேற்கொள்ள நெஞ்சுரம் பூண்டவன், அதே மனநிலையில் செயற்பட இயலாமல் சலனமுற்றுத் தவிப்பதைப் போன்று இருந்தது மண்.

விடிவெள்ளி விண்ணைத் தொட்டதும் தூற்றல் மண்ணைத் தொட்டது. பொன்னரசி, சீர்குலைந்து பழுதுபட்ட நடுத்தெருத் துர்க்கையின் சிலை நிலையில் இருந்தாள். நனைந்த மாதிரியே கிழிந்த துணி உலர்ந்துவிட்டது. அவளுடைய தளர்ந்த மனத்தில் அக்கணம் செந்நிறம் காட்டிய கேள்வி இது ஒன்று மட்டுந் தான்: 'நான் எத்தனையோ வாட்டி செத்து மடிஞ்சுப் பிடத் துணிஞ்சப்போலெல்லாம் என்னோட கனா பலிக்குமிங்கிற ஆசை மனசிலே ஓடினதாலேதானே நான் உசிர் மேலேயும் ஆசை வச்சுக்கிட ஆரம்பிச்சேன்? ஆனா,

இனிமே என் நெனைப்பு எங்கே பலிக்கப் போவுது... ஆமா. மெய்தான். இனி நானும் மக்கி மடிஞ்சு மண்ணாகிப் போனாப் போலேதான்! ...

ஆளுடைய அடிகளாரின் கவியின் ஒரு பகுதியைச் சாது ஒருவர் அடித் தொண்டையில் ஏற்றிப் பாடிக் கொண்டிருந்தார் :

'தொழுதகை துன்பம் துடைப்பாய் போற்றி!
வழுவு இலா ஆனந்த வாரி போற்றி'
அழிவதும் ஆவதும் கடந்தாய போற்றி!
முழுவதும் துறந்த முதல்வா போற்றி!'

நாணயம் புழங்கத் தொடங்கிற்று; காவி வண்ணம் கொண்டிருந்தவர் திசை திரும்பினார்.

குலதெய்வத்தின் நினைவு பொன்னரசிக்கு ஏற்பட்டது. முன்னடியான், சன்னாசி, சங்கிலிக் கறுப்பன் துணையுடன் நின்ற ஆதி பிரமரின் பயம் செறிந்த பாவம் தோன்றியது.

கண்களிலிருந்து உதிரம் கொட்டியது.

புழுதி மண்ணில் ரத்தத் துளிகள் சிந்தித் தெறித்தன.

பொன்னரசி தலை குனிந்த போழ்தில், உருவான புழுதி மண்ணில் பச்சைக் கொடியின் சித்திரம் ஒன்று உருக்காட்டி அமைந்திருப்பதைக் கண்டபோது, சப்த நாடிகளும் அடங்கிப் போனாற்போலிருந்தது.

'மகனே என்னை மன்னிச்சிட மாட்டியா?'

நூறடி ஆழமும் நூற்றுக் கணக்கான சுழிகளும் இணைந்த அந்தப் புதுக்குளம் அவள் வரவுக்குக் காத்திருந்தது!

## நான்கு

இனி,

கதையின் கரு.

பொன்னரசி அப்பொழுது பதினெட்டு வயது கொண்ட வாலைக்குமரி. கன்னி கழிந்த கட்டம். கட்டழகு சொக்க நின்றாள். ஆப்பிள் பழத் தோல் அவளது உடலில் போர்த்தப் பெற்றிருந்தது. சுண்டினால் ரத்தம் தெறிக்கும். சிலட்டூர் 'இளசு'கள் அவளுக்காக 'மோப்பம்' பிடித்தன. ஆனால் அவளோ, தன் அன்பு அத்தானுக்காகத் தவம் கிடந்தாள். மலைமகளின் தவம் பலித்தது. பிறை சூடிக கிடைத்த வரலாற்றை அவள் அறிந்திருந்தாள். ஆகவே, அது போன்று தன் இதயக் கனவும் ஈடேறும் என்பதாக எண்ணினாள்; எண்ணி மகிழ்ந்தாள். அவளுக்குரிய முறை 'அத்தானை' ஏந்தி வரும் கப்பலுக்காக அல்லும் பகலும் விழி நோகக் காத்திருந்த நேரத்தில், எதிர்பாராத வெடியொன்றை வீசிச் சென்றான் செந்நிறப் பில்லைச் சேவகன், அழுதாள்; அழுதாள்; அழுது கொண்டேயிருந்தாள்... மாண்ட அத்தான் மீளமாட்டான் என்று தெரிந்துங்கூடப் புலம்பினாள்; தந்தை அனுப்பிய இலங்கைச் சீமைப் பணம் அவளுடைய நெஞ்சப் புண்ணை ஆற்றவில்லை... வயதான அன்னையின் அன்பு அவளது ஆறாத் துயரத்தினைப் போக்கடிக்கும் அருமருந்தாக அமையக் காணோம். நீலக் கடலும் நீள் விழிகளும் ஒரே இனம்!

## ஐந்து

அந்திசந்திப் பொழுது. அப்படிப்பட்ட நடுவேளைப் பகுதியிலே, ஒருநாள். தண்ணீர் கொணர குளத்திற்குச் சென்றாள் பொன்னரசி. வயல் வரப்பைப் பார்த்துத்

திரும்பிக் கொண்டிருந்தான் கங்காணி மகன் கந்தசாமி! அந்தம் நிறைந்த எழில் வதனம்; அரும்பு மீசை...குறும்புப் பார்வை... இரும்பு உடல். அக்கரைச் சீமை சீராட்டி வளர்த்த செல்வச் சீமானின் புதல்வனல்லவா? சின்ன வயசில் 'கட்டுப் பாண்டி' ஆடிய காலத்தே அவன் அவளைக் கண்டுடது உண்டு. இனம் கண்டுகொண்டான். ஆனால், அவள் பார்வை தட்டுப்பட்டதும், அவனுக்கு இனம் விளங்கமாட்டாத ஒரு கிளர்ச்சி; நிறைவு.

புன்னகையும் புது நிலவும் அவர்கள் இருவரையும் அந்தரங்கமாகச் சந்திக்க உதவின. எட்டாப் பழமாக, இறக்காத தேனாக இருந்து வந்த பொன்னரசியின் உருவம் கந்தசாமியின் புகைப்படக் கருவிக்குத் தப்ப வில்லை. ஊர்க் கோடியில் சந்தித்து வந்த அவன் ஒரு நாள் மதியத்தில் அவளுடைய வீடு தேடியே வந்து சேர்ந்தான்.

''பொன்னரசியை நான் கட்டிக்கிடலாம்னு எண்ணி யிருக்கேன். அப்பாவுக்குக் கண்டிக்கு தபால் போட்டிருக் கேன். தாக்கல் வந்த கையோடு கல்யாணத்துக்கு தேதி குறிச்சிட வேண்டியதுதான்!''

செய்தியை வெளியிட்டான், பொன்னரசியைப் பெற்றவளிடம்.

தன் புருஷனுக்குக் கடிதம் எழுதி இது பற்றி முடிவு சொல்வதாகத் தெரிவித்தாள் பொன்னரசியின் தாய்.

நாலிலே இரண்டிலே வந்து போனான் கந்தசாமி—அந்த எழிலரசியைக் காண. ஒருநாள் உச்சிப் பொழுது... பொன்னரசி மட்டுமே வீட்டில் குந்தியிருந்தாள். அவள் அன்னை சந்தைக்குச் சென்றிருக்கும் விவரமும் கிடைத் தது. குளித்து முழுகி வந்திருந்த பொன்னரசி ஈரப் புடவை யைக் களைந்து மாற்றுடை உடுத்துக் கொண்டு கையில்

ரவிக்கையுடன் உள் திண்ணையில் அமர்ந்தபோது, கந்தசாமியின் புகைப்படத்தின் நினைவு எழவே, அதை எடுத்து வந்து அழகு பார்த்தவாறு இருந்தாள். நிழற் படத்துக்குரியவனே நேரில் வந்ததும், அவளுக்கு மகிழ்ச்சி தாங்கவில்லை. வந்தவன் அவளுடைய படத்தைக் காட்டி னான். ஆர்வம் துள்ளப் பொன்னரசி தன் உருவத்தைப் பார்த்துக் கொண்டிருந்தபோது, கந்தசாமி இளமை துள்ளும் பொன்னரசியின் அழகைப் பருகிக் கொண்டி ருந்தான். பருவமலரின் நெடி மண்டைக்கு ஏறியது. அவளுடைய கண்களுடன் அவனது விழிகள் அந்தரங்கம் பேசின. அவள் பிணங்கினாள். "நாளைக்கு உன் கழுத் திலே தாலி கட்டப் போறவன்தானே?... சரின்னு சொல்லு, பொன்னரசி!" என்று கெஞ்சினான். ஒப்ப வில்லை. கடைசியில் பலாத்காரத்தின் பிடியில் 'பெண்மை' கருத்தழிந்தது. காலத்தின் வளர்ச்சியோடு, அவளுள் கருவும் வளர்ந்தது. செய்தி அறிந்த அவள், செய்தியை உரியவனிடம் சேர்ப்பிக்க விரைந்தபோது, ஏச்சும் பேச்சும்தான் கிடைத்தன. "நீ துப்புக் கெட்ட கள்ளி! உன்னை நானா கண்ணாலம் பண்ணிக்குவேன்?... முடியாது!" என்று தீர்ப்பு வழங்கினான் கந்தசாமி. அடுத்த நாள் இரவிலே அவனை மயக்கிப் பொய் நாடகம் ஆடி, பழி தீர்த்துக் கொள்ள காட்டேரியாக மாறி, வெறி கொண்டு, கூரிய கத்தி கொண்டு சென்றபோது, அவன் கடல் கடந்த தகவல்தான் கிடைத்தது!

'நடத்தை கெட்டவள்ன்னு அவப்பேர் எடுத்த பின்னாலே இனிமே நான் இந்த ஊர் நாட்டிலே தங்கவே மாட்டேன்?' என்று முடிவெடுத்து, பிறந்த வீடு துறந்து, இரவோடு இரவாக கால் போன திசைக்குச் சென்றாள் பொன்னரசி. மறுதினம் பிற்பகல் பொழுதிற்கு அவள் புதுக்கோட்டையைத் தரிசித்தாள்; அணிந்திருந்த

நகைகள் தரிசனம் தந்தன... கரு அவளைச் சித்திரவதை வதை செய்தது. 'சீ! சனியன்!' என்று ஆத்திரப்பட்டாள். உருத்தெரியாக் கருமீது. அண்டிய இடம் அடைக்கலம் தந்தது. ஏழைக் கிழவி ஒருத்தி நிழல் தந்தாள். பொன்னும் மணியும் படி அளந்தன. ஓரிரவு, கருவைக் கரைக்க விஷப் பச்சிலையைப் பொன்னரசி தயாரித்தபோது, அவ்விஷயம் அம்பலமானது. கிழவி தடுத்துவிட்டாள், "நீ யோசிக்காம நடந்ததுச்கு அது என்னா செய்யும் பாவம்?" என்றாள்.

பொன்னரசிக்குப் பேறு காலம் நெருங்கியபோது, ஆதரவு கொடுத்து வந்த கிழவியும் நமனுலகு ஏகினாள்.

## ஆறு

பொன்னரசியின் வாழ்க்கைப் பாதையில், மீண்டும் ஒரு திருப்பம் ஏற்பட்டது. கிழவியிடம் 'நடந்த கதை'யை இதயம் திறந்து சொன்னதுபோல, வேறொரு பங்களாவில் கூறிய சமயம், அவள் அடித்துத் துரத்தப்பட்டாள். காலங்கடந்த இரவு வேளையில் நகர்ப் பகுதியைக் கடந்த இடத்தில் இருந்த சத்திரத்தில் ஒண்டினாள். வலி எடுத்தது. புதுக்கோட்டை அம்மன் காசு கூட அவளிடம் ஒட்டியிருக்கவில்லை. மெல்ல எழுந்தாள். ஆந்தையின் குரலை அடையாளமாக்கி கை முடிச்சுடன் நடந்தாள்... நடக்க முடியாமல் நடந்தாள்... காடு தென்பட்டது. சுருண்டு விழுந்தாள். கும்மிருட்டு. அவள் திரும்பக் கண் மலர்ந்தாள். 'குவா' என்னும் மொழி கேட்டது. எஞ்சியிருந்த தெம்பைக் கூட்டினாள். 'பச்சை மண்'ணைக் கையிலெடுத்தாள். ஆண் சிசு! 'சனியன்!' என்று வாய் விட்டுக் கூறிய வண்ணம் அதன் கழுத்தை நெரிக்கப் பிரயத்தனம் செய்தபோது, யாரோ நடந்து வரும் அரவம்

கேட்டது. குழந்தையைத் தரையில் போட்டாள். ஒளி காட்டத் தொடங்கியபின், நிலவில் அவள் நோக்கு மண்ணுக்கு ஓடியது... 'பச்சை ரத்தத்'தின் நெற்றியிலிருந்து குருதி வழிந்து, பூமியைச் செந்நிறப்படுத்தியிருந்த பயங்கரக் காட்சிதான் அவள் பார்வைக்கு இலக்கானது. ரத்த பூமிமீது கிடந்த பச்சைப் பாலகனை ஏறெடுத்துப் பார்க்க முற்பட்டாள். வழிப்போக்கர்களின் காலடிச் சத்தம் அருகில் கேட்டது. பொன்னரசி சற்றுத் தொலைவில் இருந்த புதர்ப் பக்கமாக மறைந்து, தன் அவல நிலையைச் செம்மைப்படுத்திக் கொண்டு வந்தவர்கள் போனதும், மறுபடியும் பழைய செம்மண் பூமிக்குத் தள்ளாடித் தள்ளாடி நடந்து சென்றாள். குழந்தை காட்சி தரவில்லை. அதுவரை சுமையாகத் தோன்றிய அந்த 'இன்பச் சுமை'யின் மகிமை இப்போதுதான் அவளுக்குப் புரிந்தது. ''கங்காணி மகன் காட்டிய ஆசையிலே மோசம் போன நான் கடைசியிலே என்னோட செல்வத்தைப் பறிகொடுத்துப்பிட்டேனே?'' என்று புலம்பினாள். குழந்தை மரித்திருக்க நியாயமில்லை என்றவரைக்கும் அவளுக்கு நம்பிக்கை பிறந்தது. வழிப்போக்கர்கள் குழந்தையின் அழு குரல் கேட்டு எடுத்துச் சென்றிருப்பார்கள் எனவும் திட்டமிட்டாள். உடனேயே வெறி பிடித்தது போல அந்தப் பாதையில் தொடர்ந்து நடக்கலானாள், காளி போல. தவறி விழுந்த புகைப் படங்கள் அவளுடைய பார்வையில் பட்டால்தானே? பொழுது விடிந்ததுதான் கண்ட பலன்; குழந்தை கிட்டவில்லை!

அண்டைக் கிராமத்தில் மூர்ச்சை போட்டுச் சாய்ந்து விட்ட பொன்னரசியை நிலை உணர்ந்த நல்லவர்கள் காத்துப் பேணினார்கள். ''ஏண்டா ராஜா என்வயத்திலே வந்து ஒண்டினே?...ஐயோ, நான் பேய்!'' என்று தனக்குத் தானே பேசித் தலைமயிரைப் பிய்த்துக்கொண்டு நாட்கள்

சிலவற்றை ஓட்டினாள் அவள். புகல் கிடைத்த இடத்தில் 'கழுகு' ஒன்று வட்டமிடுவதை யூகித்த அவள் தன் வசமி ருந்த பசி கொண்ட கத்தியின் துணையுடன் அங்கிருந்து மீண்டும் புதுக்கோட்டைக்கு வந்தாள். ஆஞ்சநேயர் சந்நிதியில் மண்டியிட்டு அழுது தன் தவற்றைப் பொறுத் தருளுமாறு கதறினாள். 'என் குழந்தை உசிரோட இருக்குமா?... என் கைக்கு திரும்பவும் கிடைக்குமா?' என்று ஆஞ்சநேயரிடம் மானசீகமாகக் கேள்வி விடுத்தாள். நல்ல பதிலே கிடைத்தது. அப்பொழுது அவளுக்குத் தன் உயிர்மீது ஒரு கவலையும், ஓர் அக்கறையும் ஏற்பட லாயின. 'ம், என்னோட மகன் எனக்குக் கிடைச்சதும் என்னை ஏமாத்தின அந்தப் பழிகாரனை பழிவாங்கிப் பிடுறேன்!' என்று சூளுரைத்துக் கொண்டாள்.

## ஏழு

பத்து ஆண்டுகள் கழிந்து போயின. நிகழ் காலத் துக்கும் இறந்த காலத்துக்கும் பாலம் சமைத்த அந்தப் பெரும்பொழுது எப்படித்தான் ஓடி நழுவியதோ? தண் எழில்—மாற்றுக் குறைந்து கொஞ்சும் அழகு மறுமுறை யும் கறைபடலாகாதே என்ற நினைவில் பசியும் பட்டினியு மாகக் கிடந்து, அவ்வழகைச் சிதைத்துக் கொண்ட அந்த விந்தைச் சம்பவம் அவள் மறக்க முடியாதது. 'பத்து மாசம் சுமந்த பாலகன் உங்கிட்டே இருந்தா, இந்நேரம் உன்னோட சபதமும் பலிச்சிருக்கும்... உனக்கும் ஆறுதல் சொல்லியிருப்பான்! தாயாக இருக்க வேண்டிய நீ பேயாகிப் போனியே?...' என்று அவளுடைய மனச் சான்று இடித்தது

காட்டுப் புதிரிடுக்கிலே புழுதி மண்மீது ரத்தக் கறை யும் தானுமாகக் கிடந்த அக்குழவியை இமைப்போதுதான் அவள் கண்டிருக்க முடியும். உருப் புரியாத தோற்றமும்,

உருப்புரிந்த ரத்த வெள்ளமும் அவளை ஒவ்வொரு கணமும் சாகடித்துக் கொண்டிருந்தன. அத்தகைய சித்திரவதையிலும் அவளுக்கு ஓர் ஆனந்தம் ஏற்படத் தான் செய்தது. 'ஆமா, நான் இப்பிடிச் சாகாமல் செத்துக்கிட்டிருப்பதுதான் நல்லது. நான் செஞ்ச மன்னிக்க ஏலாத குத்தத்துக்கு இதுதான் தகுந்த தண்டனை!''

பொழுது ஏறிக் கொண்டிருந்தது.

மூச்சுப் பிடித்தது... எப்படியோ எழுந்தாள் பொன்னரசி. கந்தலும் கிழிசலும் கொண்ட துணி மூட்டை அவள் கக்கத்தில இருந்தது. கத்திமுனை தோலில் உரசியது. அவள்து வைரியான கந்தசாமியின் படமும் அவளுடைய படமும் ஞாபகத்தில் ஓடின; அவை என்றோ எப்படியோ அவளிடமிருந்து பிரிந்து விட்டனவே— நடந்தாள்.

கீழராஜ வீதியிலிருந்து மடங்கி, சென்ற வழி வழியே மறுகி நடந்தாள் அவள். புதுக்குளம் வந்தது. படி ஏறிச் செல்ல அடி வைத்தபோது, தொங்கல் வீட்டில் கல்யாணம் நடந்ததை அறிந்து அங்கு சென்றாள்... வெள்ளை பூசிய சுவர்களும் வாழைத்தார் கட்டின காவணமும் அவளைக் கவர்ந்தன. மாப்பிள்ளையைப் பார்த்தாள். இளம் வயசுக்காரன். அவளுக்கு வேறு நினைவு பளிச்சிட்டது. 'என் கண்ணுக்கும் இன்னம் ஆறேழு வருசம் போனா இது போலக் கண்ணாலம் ஆகவேணுமே!'

அன்னதானம் வழங்கப்பட்டது. ஏழைகளோடு வரிசையாக அவளும் நின்றாள். பிறகு என்ன தோன்றியதோ, அங்கிருந்து நகர்ந்துவிட்டாள். 'நான் சாப்பிட்டு, உசிரோடிருந்து யாருக்கு என்ன ஆவப் போவுது?...என் புள்ளையை இத்தினி வருசத்துக்கு அப்பாலேயா இனிக் கண்ணாலே காணப்போறேன்? ஊரிலே ராசாங்கமாக் குடியும், குடித்தனமுமா இருக்க வேண்டிய நான், இப்பிடி

நாயா அலையணும்னு எந்தலையிலே எழுதியிருக்கு. எம்மவன் எங்கிருந்தாலும் அவனை நிறைஞ்ச ஆயுசுக்குக் காப்பாத்து!'

மஞ்சிவிரட்டு நடந்து முடிந்த இடம் தென்பட்டது. நடந்தாள்.

புதுக்குளத்துத் தென்கரை ஓரத்தில் வந்துநின்று வேர்வையை வழித்தெடுத்தாள் பொன்னரசி! சிறு குடல் பெருங்குடலைக் கவ்வியது; தலை சுற்றியது. பயம் உள்ளடங்கிய அந்தக் குளத்தையே வைத்த கண் வாங்காமல் பார்த்தாள். 'ம்!—இன்னிக்கு நடுச் சாமத் தோட எல்லாம் முடிஞ்சிடும்!'

பிறந்த மண்ணுக்கு ஓடினாள் அவள்—மனோரதப் பயணம். பெற்றவர்கள் மறைந்து போனார்களாம்... கந்தசாமி குடியும் குடித்தனமுமாக ஊரில் இருக்கிறானாம்! பட்டணத்தில் நாட்டு வைத்தியர் நல்லதம்பியை எதிர்பாராமல் சந்தித்தபோது கிடைத்த விவரங்கள் இவை.

தேம்பிய நெஞ்சம் அவளுடைய 'விதி'யை நேரக்கிக் கேட்டது; 'இத்தனை காலமாக எத்தனையோ ஊரெல்லாம் சுத்தி அலுத்தேனே. எம்மகனை ஒருவாட்டியாச்சும் காட்டப்படாதா? ஒருவாட்டி எங்கண்ணைக் கண்டுக் கிட்டா, நான் அப்பவே நெறைஞ்ச மனசோடே செத்திடு வேன்?...இந்த ஆசையாச்சும் பலிக்குமான்னுதான் அங்கங்கே வேலைவெட்டி செஞ்சு கிடைச்ச சோத்துப் பருக்கையைச் சாப்பிட்டு உசிரைக் காப்பாத்தினேன். ஆனா, என் ஆசை அவிஞ்சிருச்சி; இனி எங்கே என் கண் மணியை காணப்போறேன்? ஐயோ நான் மாபாவி...!''

குளத்துக்குக் கீழ் இறக்கத்தில் ஓடிய சாலையில் நிழலடர்ந்த மரங்கள் தென்பட்டன. சறுக்குப்படி வழியாக அவள் இறங்கினாள். கால் சறுக்கியது. முதல்படியில் விழுந்த அவள் மறு படிக்குப் புரண்டாள். பிறகு அப்படியே உருண்டு விழுந்து விட்டாள், பாவம்!

# எட்டு

''அம்மா!...அம்மா!...!'' பொன்னரசி விழிகளை விரித்தாள். ஆலமரத்தடியில் யாரோ சிறுவனின் மடியில் தலைசாய்த்துக் கிடப்பதை உணர்ந்தாள். அவசரப்பட்டு எழ முயன்றாள். நெற்றி மேட்டிலிருந்து, வேதனை குரல் தந்தது. எழுந்தமர்ந்ததும், முதலில் தென்பட்டவை: பககத்தில் சிதறிக் கிடந்த ரத்தத் துளிகள்; துடிக்கும் இதயத்தோடு அந்தப் பையனை ஏறிட்டு நோக்கினாள். வழிந்த கண்ணீருடன் அவன், ''அம்மா, நீங்க பிழைச்சிட்டீங்க...ஒரு மடக்கு காப்பித் தண்ணி குடியுங்க'' என்று சொல்லிக் காப்பிக் குவளையை அவள் கரம் தொட்டு நீட்டினான்.

பொன்னரசிக்கு மின் அதிர்ச்சி ஏற்பட்டது. அவளுடைய பெற்ற வயிறு என்றுமே அடைந்திராத அமைதியைப் பெற்றது. மார்பகத்தில் பால் வெள்ளம் பாயத் துடிப்பது போலவும் உணரலானாள். இமை மூடாமல் அவனையே பார்த்தாள். பத்து அல்லது பதினொரு வயசான அச்சிறுவன் 'ராஜா' மாதிரி இருந்தான். செம்மறியாட்டுக் கும்பல் காரிக் கோலம் திகழ அவன் பின்னே அணி வகுத்திருந்தது. அவனது நெற்றிப் பக்கம் கூர்ந்து நோக்கினாள். அந்த இடத்தில் பெரிய தழும்பு காணப்பட்டது. 'ஆதி பிரமரே! இவனேதான் எம் மகனா...?'

தான் மயங்கிச் சுருண்டு புரண்ட நிகழ்ச்சி அப்போது தான் பொன்னரசிக்கு விளங்கியது. அவள், அவன் கதையைக் கேட்டாள்.

''அம்மா, நான் அனாதை. என்னைப் பெத்த ஆத்தா பிறந்தமேனியா என்னைக் காட்டிலே அனாதையா வீசிப் போட்டுப்பிட்டுப் போயிட்டாங்களாம்! வழியிலே கண்டவங்க என்னை வளர்த்து ஆளாக்கினாங்க...யாரோ

ஒருத்தன் ஆசை காட்டி எங்க அம்மாவை ஏமாத்திப் பிட்டானாம்; அதினாலேதான் என் தாயார் என்னை அனாதையாக்கிப்பிட்டாங்க போலே?...என்னைப் பெத்த வளை—என் தாயை ஒரு நடையாச்சும் கண்டாத்தான் என் ஆவி வேகும்...ஆனா ஈவிரக்கம் இல்லாம என்னை வீசிப்பிட்டுப் போன ஆத்தாவுக்கு நல்ல தண்டனை கொடுக்கவும் கொடுப்பேன். என்னைப் பெத்தெடுத்த அம்மாவை ஏமாத்தின அந்த மனுசனை...ம்... என் அப்பனை எப்போ கண்டாலும் அப்பவே கண்டந் துண்டமாச் சீவிப் போடுவேன். அவன் படம் எங்கிட்டேதான் இருக்கு; எங்க அம்மா படங்கூட வச்சிருக்கேன்; என்னை வளர்த்தவங்க கொடுத்திருக்காங்க!...''

பையனின் கண் இமைகள் நனைந்து ஈரமாயின.

அவனுக்குத் தெரியாமல் பொன்னரசி நேத்திரங் களைத் துடைத்துக் கொண்டாள். சிறுவனுக்குப் பக்க மாகக் கிடந்த முடிச்சிலிருந்து தலை நீட்டிய புகைப்படங் களை எடுத்தாள். ஆம்; ஒன்று அவள் படம்; இன் னொன்று கந்தசாமியின் நிழலுரு. மறுபடியும் அவற்றை முடிச்சுக்குள் திணித்தாள்.

'கடவுளே; நீ ரொம்ப நல்லசாமி...என் ஆசை நிறை வேறிடுச்சு...இம்பிட்டு நாளாக நான் பட்ட பாடு வீண் போகலை. என் வைரியைப் பழி வாங்கிறதுக்கு என் மகனும் கிடைச்சுப்புட்டான்...!'

''தம்பி, உன்னோட ஆத்தாவை நேரிலே கண்டா அவ பேரிலே ஒனக்கு ஆத்திரந்தான் வருமா?''

''ஆமா; என் பேரிலே ரவை கூட ஈவிரக்கமில்லாம என்னைவிட்டுப் போட்டுப் போன குற்றத்துக்கு அவங்க மேலே ஆத்திரம்தான் வரும்!''

விக்கலுக்கும் விம்மலுக்கும் இடையில் பொன்னரசி தத்தளித்துக் கொண்டிருந்தாள்; மறுவினாடி பித்துப்

பிடித்த மாதிரி கீழே கிடந்த பாறாங்கல்லில் மோதிக் கொண்டாள். ரத்தம் பீறிட்டுக் கொண்டிருந்தது.

சிறுவன் அவளுடைய தோளைப் பற்றித் தடுத்தான்.

அதே சமயம் வேறொரு புதுக் குரல் கேட்டது. "ஏம்மா, ஏம்மா?" என்று ஓடி வந்தான் மீசைக்காரன் ஒருவன். அருகில் ரேக்ளா வண்டி நின்றது.

பொன்னரசி தலை நிமிர்ந்தாள்; அந்த மனிதனைப் பார்த்தாள். விழுங்கி விடுபவள் போல முறைத்துப் பார்த்தாள். புகை நெளிந்தது. முடிச்சில் ஒளிந்திருந்த கத்தி அவள் கைக்கு வந்தது.

செம்மறியாடுகளை மேய்க்கும் பையன் ஒன்றும் புரியாமல் பரக்கப் பரக்க விழித்தான்!

"தம்பி, இந்த ஆளுதான் உன் அப்பன்!" என்றாள் அவள், வெறியுடன்.

"ஆ! அப்பிடியா?..."

மீசைக்கார மனிதனை நோக்கிக் கைக்கம்பை வீசினான் சிறுவன். அவன் சுருண்டு விழுந்தான். நெற்றியிலிருந்து ஊற்றெடுத்த ரத்த வெள்ளம் பூமித் தாய்க்கு வைத்த குருதிக் குங்குமம். அச்சமுறத் துலங்கிக் கொண்டிருந்தது.

"பொன்னரசி, என்னை மன்னிச்சிப்பிடு. இப்போதே என்னோட வந்திடு. நான் உன்னைக் காப்பாத்துறேன்... நம்ப மகனையும் கண்டுபிடிப்போம்...!" என்றான் அவன் —கந்தசாமி.

பொன்னரசியின் கையிலிருந்த கத்தி மின்னியது. ரத்தக் காட்சியைக் கண்டதும் அவள் மனத்தில் புயல் நீங்கிய அமைதி கனிந்ததோ? கத்தி நழுவியது. பையனுடைய கையைப் பிடித்து அழைத்து வந்தாள். "பாவம்;

மன்னிச்சிடு; அந்த ஆள் எக்கேடு கெடட்டும்!'' என்று வேண்டினாள் அவள்.

புழுதி வழியே ரத்தத் துளிகள் சுவடு காட்டிக் கொண்டேயிருந்தன.

''அப்பனைக் காட்டினீங்க; என் ஆத்தாவையும் காட்ட மாட்டீங்களா, அம்மா?'' என்று விம்மிய பையன் அவளைப் பரிதாபம் இழையோட நோக்கலுற்றான்.

''தம்பி, பழிக்குப்பழி வாங்கத்தானே உன் அம்மாவை நீ இப்படித் தேடுறே?...''

''ஊஹூம்! அவங்களை மன்னிச்சிடுவேன்; அவங்க என் தாய்!''

அடுத்த கணம் என்ன எண்ணினானோ, தன் முடிச்சிலிருந்த புகைப்படத்தை எடுத்துப் பார்வையிட்டான் அவன்.

''ஆத்தா!''

நெஞ்சில் பாய்ச்சிக் கொள்ள ஓங்கிய கத்தியைப் பிடுங்க முனைவதற்குள், செந்நிறம் பீரிடத் தலைப் பட்டது.

''ஆத்தா!...உங்களை நான் சாக விடவே மாட்டேன். நீங்க என்னை அனாதையாகிவிட்டது பெரிய தப்பாக இருந்தாலும், பத்து மாசம் சுமந்து பெத்தெடுத்த தாயாச்சே நீங்க!...உங்களைத்தான் நிதமும் கையெடுத்துக் கும்பிட்டுக்கிட்டு வாறேன். முத்துமாரி அம்மா, நீதான் இனி எங்களுக்குத் துணை. இம்பிட்டு நாளைக்கப்பாலே ஆத்தாளும் மகனுமான எங்க ரெண்டு பேரையும் மட்டும் பிரிச்சுப்பிடாதே?...''

பிஞ்சு நெஞ்சு கதறியது!

(முத்தாரம்—1958)

# சீதாப்பிராட்டியின் பவளக்கொடி!

ஊர் வெற்றிலை பாக்கு வைத்தாகி விட்டது.

விடிந்தால் கல்யாணம்.

ரங்கூன் தேவர் என்று அழைக்கப்பட்ட சின்னத் தம்பித் தேவரின் ஒரே மகனான சிரஞ்சீவி முத்தையனுக்கும் சிங்கப்பூர்த் தேவரென்று கூப்பிடப்பட்ட பெரியண்ணத் தேவருடைய ஒரே மகளான செளபாக்கியவதி பவளக் கொடிக்கும் திருமணம்.

இந்த சுபச் செய்தியைக் கேள்விப்பட்டதும், பனங்குளம் மட்டுந்தானா மூக்கின்மேல் விரலை வைத்தது?

''கண்டீங்களாடி பொண்டுகளா இந்த அதிசயக் கூத்தை? நம்ப பவளக்கொடி 'வாழ்க்கைப்பட்டால் தன்னோட சொந்த அயித்தை மகன் வீரமணிக்குத்தான் வாழ்க்கைப்படுவேன்; இல்லாங்காட்டி, காளிகோயில் பாதாளக் கேணியிலே குதிச்சு உசிரை விட்டுப்புடு வேனாக்கும்' அப்படின்னு வீறாப்புப் பேசினாளே?... ஆனா, இப்ப கதையே மாறிப் பூடுச்சுதே?...பாவம், பவளக்கொடி. பவளக்கொடி அப்பனுக்கும் வீரமணி அப்பனுக்கும் இடையே ஊடாடி உரப்பட்ட அந்த ஜன்மப்

பகைமை கெலிச்சதுதான் மிச்சம் போலெ. ஆனா, பவளக் கொடியும் வீரமணியும் தங்க அப்பன்மார்களையும் எகிறிக்கிட்டு ஒண்ணடி மண்ணடியா கூடிக்குலாவிப் பேசி மகிழ்ந்ததெல்லாம் இனிமே கதையாகப் போகுதேடி, பொண்டுகளா!...''

சமைந்த பெண்கள் கற்களாகச் சமைந்து போனார்கள்.

''என்னாங்கடா இது? நம்ப சேக்காளி வீரமணி, தன் னோட அம்மான் மகள் பவளக்கொடியைக் கொண்டுக் கிட வேணும்னு ஒரே வைராக்கியத்தோட ஒத்தைக் காலிலே நின்னுக்கிட்டிருந்தானே? இப்ப என்னடான்னா கதையே தடம் மாறிப் பூடுச்சே?... 'என்னோட பவளக் கொடி கழுத்திலெ என்னைத் தவிர இன்னொரு பய இந்த ஊர் நாட்டிலே மூணு முடிச்சுப் போட்டுப்புட ஏலுமா? அப்படிக்கொத்த ஒரு இடுசாமம் வரும்னு புரிஞ்சா, அப்பவே எம்புட்டு அம்மான் மகளைச் சிறை எடுத்துக் கிட்டுப் பறந்திட மாட்டேனா நான்?' அப்படின்னு மார் தட்டிப் பேசினானேடா நம்ப வீரமணி?... ஐயோ. பாவம்! வீரமணிக்கு இனி பைத்தியம்தான் பிடிக்கப் போகுது!... ஊம்!...''

இள வட்டங்களுக்கிடையிலும் குமுறல்!

ஊர் வெற்றிலை பாக்கு வைத்தாகிவிட்ட பிறகு, இனிமேல் ஊர் பேசி என்ன, உலகம் பேசி என்ன?

விடிந்தால் முகூர்த்தம்!

ஃ ஃ ஃ

பெரியண்ணத் தேவருக்கு சந்தோஷம் தலைகால் புரியவில்லை. இந்த ரகசியத்தை வாசலை அடைத்துப் போடப்பட்டிருந்த மணப்பந்தலின் நட்ட நடுவில் எரிந்து

கொண்டிருந்த காந்த விளக்கு அம்பலப்படுத்திக் கொண்டேயிருந்தது.

''உங்க மச்சான் வேலுத் தேவர் வீடு தவிர பாக்கி யுள்ள சகலத்தனை வீடுகளிலேயும் கண்ணாலப் பத்திரிகை யும் ஊர் வெற்றிலைப் பாக்கும் வச்சு விருந்தும் சொல்லிப் புட்டோமுங்க அண்ணாச்சி!''

''சபாசு!'' என்று வாய்விட்டுச் சிரித்தார் பெரியண்ணன்: ''பாவம், வேலுத் தேவனும் அவன் மகன் வீரமணியும் உப்புப் போட்டுச் சாதம் உண்ணிருந்தாக்க, இம்மா நேரம் அவங்க ரெண்டுபேருக்கும் நானும் என் தங்கப் பொண்ணு பவளக்கொடியும் செஞ்சு காட்டின அவமரியாதைக்கு கேணியிலெ விழுந்து உசிர்களை மாய்ச்சுக்கிட்டிருக்கோணும்!... என்னமோ, காளி கோயில் முதல் காளாஞ்சி தாவாவிலே ஆந்தா மூத்தவள். வேலுத் தேவனுக்கு அனுசரணையாக இருந்ததாலே, என் னோட வீம்பு பலிக்காமல் போயிடுச்சு. அதுக்காக அவன் ஊருக்கு உசந்த மனுசனாக ஆகிவிட ஏலுமா? என்னோட பணத்துக்கும் பகைக்கும் முன்னாடி அவன் எம்மாத்திரம்? அதனாலேதானே ரங்கூன் தேவர் எங்க வீட்டுச் சம்பந்தத்தை விரும்பி வந்து ஏற்றுக்கிடவும் வாய்ச்சுது!... சரி, சரி, பொழுது ஓடிக்கிட்டிருக்குது. வாழைமரம் கட்டுங்க. கூந்தல் தோரணம் கட்டியாகணும். ஆளுக் கொரு சாயாத் தண்ணியை ஊத்திக்கிட்டு வந்து, அலுவலை முடிச்சுப்புட்டுத்தான் தலையைச் சாய்க்க வேணும்!'' என்றார் அவர்.

முதுகுப்புறத்திலிருந்து பெருமூச்சுச் சத்தம் கேட்டது.

பதற்றம் மூள திரும்பிப் பார்த்தார் பெரியண்ணத் தேவர். ''அடடே, பவளமா? வாம்மா, வா'' என்றார். அவரது கரிய பெருவிழிகள் மகளைத் துருவி அளந் தனவோ?

பவளக்கொடி முல்லைப்பூ மலர்வது போலப் புன்னகை காட்டினாள்: "அப்பா, முதல் காளாஞ்சி தவசலிலே உங்களுக்கு அயித்தை புருசன் ஏற்படுத்தின அவமானத்துக்கு ஒருபடி கூடுதலாவே இப்ப நீங்க அவங் களுக்குச் செஞ்சு காட்டிப்புட்டீங்களே? பலே!... பலே!... நம்ப வீட்டு விருந்துச் சாப்பாட்டுக்கு அவங்களுக்குப் பொசிப்பு இல்லாமல் பூடுச்சே! பாவம்!" என்று ஏளனம் காட்டி நகைத்தாள்.

"அல்லாத்தையும் எங்கண்ணு கேட்டுக்கிட்டுத்தான் இருந்தியாக்கும்!...நீ சொல்றது ஒட்டு மொத்தமான உண்மை அம்மா."

"உங்களுக்கு வார நல்லது—கெட்டது எல்லாம் உங்க மகளுக்கும் சேர்த்துதான் என்கிற துப்பு எம்புட்டுக்கன்னி நெஞ்சுக்கு மட்டுப்பட்டடியும் உங்க வழிக்கு வந்திட் டேனே, அப்பா?"

"ஆமா, ஆமா!" என்று பெருமை சுடர் தெறிக்கச் சிரித்தார் தேவர்: "அது சரி. நெக்லேஸ் புடிச்சிருக்கா?" என்று கேட்டார்.

"பிரமாதமா இருக்குங்க!"

"தென்னம்பாளைச் சங்கிலி?"

"கழுத்துத் தாங்காது போலிருக்குங்க!"

"அப்பிடியா? சம்பந்தி வீட்டு அந்தஸ்துக்கும், நம்ப அந்தஸ்துக்கும் தக்கனைதான் அல்லாத்தையும் வீச்சாவே முடிச்சிருக்கேனாக்கும்!"

அப்போது சம்பந்தி வீட்டிலிருந்து முகூர்த்தப் பட்டு வந்தது.

நாணம் கண் பொத்தி விளையாட "ரொம்ப நேர்த்தியாய் இருக்குன்னு நான் சொன்னதாகச் சொல்லி யனுப்புங்க, அப்பா!" என்றாள்.

''அப்படியே சொல்லியனுப்புறேன். நேரமா யிருச்சுது. காலா காலத்திலே நீ சாப்பிட்டுப்புட்டு கெட்டியமாய்ப் படுத்துத் தூங்கம்மா, பவளக்கொடி!'' என்றார் தந்தை.

''நீங்க எதொண்ணுக்கும் பயப்படாதீங்கப்பா... எனக்குத் தெரியாம என்னை எவனும் சிறை எடுத்துக்கிட்டுப் போயிட முடியாதுங்க அப்பா!'' என்று சிரித்தாள் பவளம்!

ஃ ஃ ஃ

வட்டிற் சோற்றைத் தட்டி விட்டு எழுந்தான் வீரமணி.

வேலுத் தேவர் திடுக்கிட்டார்.

அவருடைய தர்மபத்தினி சீரங்கம் துவண்டாள்: ''தம்பி, கெட்ட சொப்பனம் கண்டதொப்ப அந்த இடுசாமச் சங்கதியை மறந்துப்பிடுறத்தை விட்டுப்புட்டு, வட்டிச் சோற்றைத் தட்டி விட்டுட்டியேப்பா?'' என்றாள்.

கண்ணீர் மல்க அன்னையை ஏறிட்டு நோக்கினான் வீரமணி. ''ஆயி, நான் என்னோட அம்மான் மகள் பவளத்தை நினைச்சு இப்போ கிலேசம் காட்டலே. உங்க கூடப் பொறந்த் பொறப்பு நம்மளுக்குச் செஞ்சு காட்டியிருக்கிற அவமரியாதையை நினைச்சுத்தான் சங்கடப்படுறேன். ஊர் வளமைப் பிரகாரம் நம்ப வீட்டுக்கு மாத்திரம் ஊர் வெற்றிலை பாக்கும், கண்ணாலப் பத்திரிகையும் வைக்காமல் பண்ணிப்பிட்டாரே எங்க அம்மான்காரர்? இதை நினைச்சால்தான் நெஞ்சு ஆறவேமாட்டேங்குது!'' என்றான் இளவட்டம்.

''தம்பி, கும்பிடு கொடுத்துக் கும்பிடு வாங்கணும்னு நம்ப ஊர் நாட்டிலே சொல்லிக்கிடுவாங்க. உன்

அம்மானை, சிங்கப்பூர்ப் பணம் கண்ணை மறைச்சிடுச்சு. எங்கிட்டே புதுப்பணம் நடமாடாட்டியும், பழைய பணத்துக்கு குறைச்சல் இல்லேயே? நம்ப மச்சு வீட்டு மானத்தைக் கட்டிக் காப்பாற்றி விட்ட தங்கமப்பா நீ?... உனக்குப் பொண்ணுக்கா பஞ்சம்? இந்தத் தையிலேயே நம்ம வீட்டிலேயும் கொட்டு மேளம் கொட்ட வச்சுப்புடு றேண்டா, மகனே!'' வீறுபூண்டு பேசினார் வேலு.

வீரமணி சிரித்தான்.

''தம்பி, சாப்பிட்டுப்புட்டுப் படுத்துக்க. விடிஞ்சதும், நீ சிலட்டூர் ரேக்ளாப் பந்தயத்தைப் பார்க்கிறதுக்குப் பறிஞ்சிடு. 'நாளைக்குக் காலம்பற நீ இங்கிட்டு இருந்தா உம் மனசு உன்னையும் தாண்டி மீறிக்கிட்டு ஏங்கித் தவிச்சுக்கிட்டிருக்கும்!''

வீரமணி தலையை ஆட்டினான்!

ஃ ஃ ஃ

மாப்பிள்ளை அழைப்பு முடிந்தது. படகுபோல அலங்கரிக்கப்பட்ட காரிலே பவனி வந்த மாப்பிள்ளை முத்தையன், புதிய முறுக்கு மீசை இளம்பரிதியில் மின்ன, தோளில் டிரான்ஸிஸ்டருடன் காரிலிருந்து இறங்கி மணவறையில் அமர்ந்தான்.

மாப்பிள்ளையை உட்கார வைத்துவிட்டு உள்ளே விரைந்தார் சிங்கப்பூர்த் தேவர்.

ஆனால்...

ஏன் இப்படிப் பதறுகிறாள் தேவரின் மனைவி வள்ளியம்மை?

''மச்சான், நம்ப பொண்ணைக் காணலீங்க. எல்லா நகை நட்டுகளையும் போட்டுக்கிட்டிருந்த பொண்ணு இட்டே கங்கணம் கட்டிக்கிடுறதுக்குப் புதுப் பட்டைக்

கட்டிக்கிடச் சொல்லிட்டு உள்ளாற பலகாரம் சுட்டுக்கிட்டு இருந்தேன். மாப்பிள்ளைக்காகத் திரும்பி வந்து பார்த்தாக்க, நகை நட்டுங்க அல்லாம் ஆல வீட்டிலே அப்படியே அப்படியே இருக்குதுங்க! நம்ப மகளைக் காணலீங்க!''

தாய் துடிக்க, தந்தை துடித்தார்.

'காளி ஆத்தா, என்ன சோதனை இது?... நான் எப்பிடி சம்பந்திக்காரங்க மூஞ்சியிலே முழிப்பேன்?'—தவித்துத் தண்ணீராக உருகின பெரியண்ணைத் தேவர், உறவுக்காரர்களை அழைத்துப் பவளக்கொடியைத் தேடும்படி காதோடு காதாக உத்தரவிட்டார் அவர். மாப்பிள்ளையோ டிரான்ஸிஸ்டரில் பாரதத்திடம் மண்ணைக கவ்விக் கொண்டிருந்த பாகிஸ்தானின் நிலையைக் கேட்டுக் கொண்டிருந்தார்.

தேடப் போனவர்கள் வெறுங்கையாகத் திரும்பினர்.

அப்போது ஒருவன் ஓடி வந்து, ''உங்க அக்கா மகன் வீரமணியையும் வீட்டிலே காணலீங்க!'' என்றான். ''மெய்யாலுமா?'' என்று கேட்டுப் பதறினார் தேவர். 'ஒருவேளை, வீரமணிப் பயல் எம் மகளைக் கடத்திக்கிட்டுப் பறிஞ்சிருப்பானோ?' என்ற ஐயப்பாட்டில் துடித்த வண்ணம் கொல்லைப்புறமாக ஓடினார்: ''அக்கா, எங்கே வீரமணி?'' என்று பதட்டம் மூள வினவினார்.

''ஏம்ப்பா, விருந்து சாப்பிட வா?'' என்று கேட்டாள் தமக்கை.

''எம் மகளைக் காணலே; அதுக்காகத்தான் விசாரிக்கிறேன்!''

''உம் மகளை எம்மவனா மடியிலே பதுக்கி வச்சிருக்கான்? எம்மவன் ரேக்ளா பந்தயம் பார்க்கப் போயிட்டானாக்கும்!''

மணப்பந்தல் அமளி துமளிபட்டது.

''எங்கேங்கறேன் கண்ணாலப் பொண்ணு?'' என்று அதிகாரத்தோடு கேட்டார் ரங்கூன் தேவர், தொடர்ந்து, ''முத்தையா!'' என்று வீரிட்டார்.

''பொண்ணைக் காணலையாம்டா! எங்கிட்டு ஓடிப் பூடுச்சோ?... இல்லே, அந்தப் பொண்ணோட முறை மச்சான்காரன் சிறை எடுத்துக்கிட்டுப் போயிட்டானோ தெரியலே...! ம்... ஏந்திருடா!... இந்தப் பெரியண்ணன் பண்ணின சின்னத்தனத்துக்கு இவனைப் பின்னாலே ஒரு கை பார்த்துக்கிடுவோம்!''

மாப்பிள்ளை எழுந்து விட்டான்.

பெரியண்ணத் தேவர் விம்மிக் கொண்டு நின்றார்.

வாசலில் வந்து நின்றது ஓர் அழகான ரேக்ளா. அதில் பவளக்கொடியும் வீரமணியும்.

''முத்தையா அண்ணாச்சி!... ஒரு நிமிஷம் நில்லுங்க. நான் பிறந்த மறு ஆறாம் மாசத்திலேயே பவளக்கொடி பிறந்திச்சு. அப்பவே, எனக்குத்தான் பவளக்கொடி, பவளக்கொடிக்குத்தான் நான் அப்படின்னு எங்க இரண்டு தரப்புப் பெற்றோர்களும் முடிவு செஞ்சிட்டாங்க. அந்த உறவு முறையைச் சத்தியவாக்காக நம்பி நாங்க ரெண்டு பேரும் அஞ்சு வயசிலேயே காளி ஆத்தா சந்நிதியிலே ஒருத்தருக்கொருத்தர் கையடிச்சுச் சத்தியம் பண்ணிக்கிட்டோம். ஆனா ஊடாலே முளைச்ச முதல் காளாஞ்சித் தகராறைப் பெரிசுபடுத்தி எங்க அம்மான்காரர் பவளத்தை உங்களுக்குக் கட்டிக் கொடுக்கத் துணிஞ்சிட்டார். ஆனதாலேதானுங்க, நான் என்னோட முறைப்

பொண்ணு-பவளத்தை என் அம்மான் மகள் பவளத்தைச் சிறை எடுத்துக்கிட்டுப் போனேன், அதோட பரிபூரண சம்மதத்தின்பேரிலே!... நான் ஆணாகப் பொறந்தவன்... என்னைப் பறறி இந்த ஊர் நாட்டிலே எப்படியும் பேசிக் கிடலாம்... பரவாயில்லே! ஆனா... எங்க பவளக்கொடி பொண்ணாகப்பொறந்ததாச்சே? அதைப்பத்தி நாளைக்கு ஊர் உலகம் ஏசுமே? அதனாலே நாங்க ரெண்டு பேரும் புருசன் பெண்சாதியாக ஆகிறதுக்கு முன்னாடி ஓடி வந்து விட்டோம்! இது ஆத்தா பேரிலே ஆணை வச்சுப் பேசற தாக்கல்! இதை நீங்க நம்புங்க. பவளத்தை ஏற்றுக்கிடுங்க. வாங்க மணவறைக்கு!...''

''வீரமணி'' என்று விளித்தான் முத்தையன். அவன் கண்களும் பனித்தன: ''தம்பி, 'நான் இதயம் இல்லாத பாவி இல்லே. உன்னோட பவளம் உன்னோட பவள மாகவே எப்போதும் இருக்கட்டும்!... குறித்த முகூர்த்தத் திலே நீ உன் பவளத்துக்குத் திருப்பூட்டு!... என்னைப் பார்க்கிலும் நீயேதான் சகலத்தனை வகையிலவும் உன் பவளத்துக்குப் பொருத்தமானவன்... ம்... இன்னொரு சங்கதியையும் கேட்டுக்க. நான் நாளைக்கு 'வாரு'க்கு கிளம்பிடறேன். அழைப்பு வந்திருச்சி. இதோ, இந்த டிரான்ஸிஸ்டரிலே.''

முத்தையன் கம்பீரமாக மணப் பந்தலைவிட்டு நடக்க லானான்.

பவளம் உள்ளே போனாள்!

ஃ ஃ ஃ

''முகூர்த்த வேளை முடியப் போவுது. சீக்கிரம் மண வறையிலே வந்து குந்திக்கிடுங்க, மாப்பிள்ளை!'' என்று பகைகடந்த பாந்தவ்யத்தோடு கெஞ்சினார் பெரியண்ணத் தேவர்.

''பவளம்...!''

''இதோ வந்துடுவா—பட்டு உடுத்துக்கிட்டு...''

''வீரமணி!... தம்பி!'' என்று அலறிக்கொண்டு வந்தான் முத்தையன்: ''தம்பி, உன் பவளம் விருந்து அடுப்பிலேருந்து கொள்ளிக் கட்டையை லாவி எடுத்து அதைத் தன் சேலைத் தலைப்பிலே வச்சுக்கிடுச்சு!... ஓடியாயேன்!''

எல்லாரும் உயிர் துடிக்க, உள்ளம் துடிக்க, திட்டி வாசலுக்கு ஓடினர்.

அங்கே...

தீச்சுடர்கள் அவள் மேனியெங்கும் தொட்டுத் தொடர்ந்து கொண்டிருந்தன.

''பவளம்! பவளம்!'' என்று ஓலமிட்ட வீரமணி, தண்ணீர் வாளியுடன் அவளை நெருங்கினான்.

''மச்சான்! அங்கிட்டே நில்லுங்க! ஆமா, செப்பிட்டேன்!'' என்று ஆணையிட்டாள் பவளக்கொடி.

''பவளம்! என்ன விளையாட்டு?''

விழி வெள்ளம் கரை புரள, பவளம் இதழ் திறந்தாள்: ''மச்சான்! இது விளையாட்டு இல்லீங்க... இது அக்கினிப் பிரவேசமாக்கும்!... சீதாப்பிராட்டி தீக்குளி நடத்தினாங்களே, அது ராமர் சாமிக்கு மட்டுந்தானா? ஊர் உலகத்துக்காகவும் தானுங்களே?... அந்த நாள் தொட்டு உங்களுக்கிண்ணே காத்துத் தவம் கிடந்தவள் நான். ஆனா, இடை நடுவிலே கதை தடம் மாறிப் பூடுச்சு... ஆனாலும், விதிப்படி அந்தக் கதை முடிய வேளை பார்த்துக்கிட்டும் இருக்குது. அதுக்குள்ளாற, நான் என்னோட பரிசுத்தத்தை உங்களுக்காக இல்லாட்டியும், ஊர் உலகத்துக்கு மெய்ப்பிச்சுக் காட்ட வேணுமில்ல!...

என்னைப் பெரிய மனசு பண்ணித் தடுக்காதீங்க... எப்பவுமே நான் உங்க சொத்தேதான். அட்டியில்லே தான். ஆனாலும், உங்களாலெ சிறையெடுக்கப்பட்ட நான், இப்போ திரும்பி வந்திருக்கேன். உங்களுக்கேதான் வாழ்க்கைப் படவும் போறேன். ஆனாலும்... என்னை ஊர் உலகம் தூய்மையானவள் அப்படின்னு ஒப்புக்கிட வேண்டாமா?''

பவளக்கொடி தீயாகச் சிரித்தாள்.

''பவளம்! நீ தங்கம்! சொக்கப் பச்சை ஆத்தா நீ! உத்தரவு தா!... நெருப்பை அணைச்சுப்புடுறோம் தாயே!''

அழுகுரல்கள் விண்ணைச் சாடின.

''காளி ஆத்தா!...என் பவளத்தைக் காப்பாற்ற மாட்டேயா, தாயே மூத்தவளே?...சரி, நானும் என் பவளத்துக்குத் துணை போறேன்!...''

வீரமணி வெறிகொண்ட நிலையில், பவளத்தைச் சுற்றி எரிந்து கொண்டிருந்த தீக் கங்குகளைச் சரண் அடைந்தபோது...

'பட பட 'வென்று நீதியின் தீர்ப்புப் போலே முழங்கத் தலைப்பட்டது வானம்! ஆமாம், அதோ மழை பொழிகிறது!

(ஆனந்த விகடன்)

# மன விகாரங்கள்

நிர்த்தாட்சண்யம் கொண்ட விதி கர்ப்பவாசம் கொண்டிருந்த ஓர் அழகான, அமைதி மிக்க ஆண்டி மடம் அது. அந்த மடத்தைப் பற்றினதொரு விசேஷம் என்னவென்றால், அது ஆண்டிகள் கூடிக் கட்டிய மடம் அல்ல. ஆண்டிகள் கூடுவதற்காகக் கட்டப்பட்ட மடம்!

''சாமிகள் எல்லாரும் அவங்க அவங்க விச்ராந்தியாய்க் குந்திக்கலாமே!'' என்றார் பசுபதிப் பண்டாரம்.

''ஆஹா!''

''அடடே, மெதுவாய்க் குந்துங்க சாமிகளே!'' என்று பசுபதிப் பண்டாரம் பொறுப்புடன் எச்சரித்தவராக, மெள்ள அடியெடுத்து வைத்து நெருங்கி, தட்டுத் தடுமாறிய வண்ணம் நின்ற அந்தகர்களான அந்த இரு ஆண்டிப் பண்டாரங்களையும் கைத்தாங்கலாக இருபுறமும் அணைத்துக்கொண்டு மூச்சுக்கூட்டிப் பற்றி, தரையில் குந்தச் செய்து, அந்நிம்மதியின் கனிவுடன் பெருமூச்செறிந்தார் அவர்.

படர்ந்து இழைந்த இருளை மேலும் படர விடாமல் செய்வதில் கங்கணம் கட்டியிருந்த பிறைநிலவின் மோகனக் கவர்ச்சியின் பின்புலத்திலிருந்த நல்லெண்ணத்தை அறியக் கொடுத்து வைக்காதவர்களாக்கி விட்டி

ருந்த நல்லக்கண்ணு பண்டாரமும் சிவப்பிரகாச பண்டாரமும் பரஸ்பரம் ஒருவருக்கொருவர் அனுசரணையாக 'ஊம்' கொட்டிக் கொண்டே, நரைத்த தமது தாடியைத் தடவி விட்டுக் கைகளைப் பரப்பி மூட்டை முடிச்சுகளைத் தடுமாற்றத்துடன் தொட்டுப் பார்த்துக் கடைசியில் அவரவர்களுடைய ஊன்று கோல்களை இனம் கண்டு கொண்ட அமைதியில் மயிர்ச் செறிவைக் கடந்து, மங்கிய சிரிப்பைப் பரப்பி அமைதி கண்ட அந்த விசித்திரத்தைக் கண் கொண்டு பார்த்துப் பெருமூச்சு விடலானார் பசுபதி சுவாமிகள்.

மடத்தை ஒட்டிய ஒற்றையடிப் பாதை நெடுகிலும் குளித்து முழுகி, ஈரம் கொட்டிய நரை முடியை ஆறப் போட்டவாறு சென்று கொண்டிருந்த பூங்கிளி, அந்த ஆண்டி மடத்தை உன்னிப்புடன் பார்த்து, ஒரு பொட்டுப் பொழுதுக்குத் தட்டுத்தடுமாறி நின்று, பிறகு காலடி எடுத்து வைத்து மறுகி நடந்து சென்ற விசித்திரம் ஏடு விரிந்தது.

பசுபதி சுவாமிகள் மாயையின் கட்டறுத்துத் திரும்பலானார்.

முருகன் கோயில் குரு பூஜையில் அளிக்கப்பட்ட அமுது, காட்டுக்கொன்று மேட்டுக்கொன்றாக விதியின் விளையாட்டுக்கு நேராகப் பிரிந்துகிடந்த முகம் அறியாத அந்தப் பண்டாரங்கள் அனைவரையும் ஒன்று கூடச் செய்த விந்தையை வியந்தார் பசுபதிப் பண்டாரம்.

''சரி, எல்லோரும் சாப்பிடுவோமே!''

''ஹர ஹர! சம்போ மஹாதேவா!''

ஃ ஃ ஃ

இரவு கண் வளர்ந்து கொண்டிருந்தது: ஆனால், நிலவு மட்டும் விழித்துக் கொண்டிருந்தது.

நிலவைப் போலவே, அந்தப் பண்டாரக் கூட்டத்தில் இரண்டே இரண்டு பேர் மட்டும் தூக்கம் பிடிக்காமல் பீடித்துவிட்டிருந்த மன உளைச்சலுடன் போராடிக் கொண்டு விழித்துக் கொண்டிருந்தார்கள்.

அந்த இருவரும் நல்லக்கண்ணுவும், சிவப்பிரகாசமும் ஆவர்!

''இப்ப நாம கட்டையைப் போட்டிருக்கிற ஊரு என்னவோன்னு சொன்னாங்களே?...என்னா ஊராம்?'' என்று வினா விடுத்தார் சிவப் பிரகாச சுவாமிகள்.

''ஆவணத்தாங் கோட்டையின்னு சொன்னாங்க!'' என்று விடை கொடுத்தார் நல்லக்கண்ணு சுவாமிகள்.

அக்குரலைக் கேட்டதும், சிவப்பிரகாச சுவாமிகளின் மனம் ஏனோ ஒரு கணம் அதிர்ந்தது.

''சாமிகள் என்ன, பதிலே சொல்லலே!''

''ஒண்ணுமில்லே!'' உங்க் குரலானது என்னை அசத்திவிட்டிடுச்சு. அவ்வளவுதான்!''

''ஏனுங்க ஐயா?''

''உங்க தொனியே நான் எங்கேயோ எப்பவோ கேட்டதாக ஒரு ஞாபகம் மனசிலே ஓடுச்சு!'' என்று தன் உள்ளத்தை வெளிப்படுத்தினார் சிவப்பிரகாசம்.

''ஒங்க பேச்சானது எனக்குக் கூடுதலான ஆச்சரிய மாவே தோணுது. நாம ரெண்டு பேரும் பாவம் செஞ்ச ஆத்மாக்கள். இல்லாட்டி, எப்பவோ ஒருத்தர் மூஞ்சியை ஒருத்தர் கண்டுக்கிட வாய்ச்சிருக்குமே? ஆமா, சாமி களுக்குப் பூர்வம் எது பிறந்த ஊரோ?''

நிமிர்ந்து உட்கார்ந்தார் சிவப்பிரகாசப் பண்டாரம். ''நமக்கு ஊரு ராமநாதபுரம் சீமை!'' என்றார். அவர் பேங்சில் இப்போது புதிய தொனி குரல் ஈர்த்தது.

இக்குரலைக் கேட்ட மாத்திரத்தில் நல்லக்கண்ணு சாமியாரின் முகம் சுண்டிய கோலத்தைக் கோல நிலவு சுட்டியது. அரைக்கணம் அவர் மனம் சிந்தனை வசப் பட்டது.

"என்னா சாமிகள், மூச்சுக் காட்டலை?" என்று தூண்டினார் சிவப்பிரகாசம்.

"இப்போ நீங்க பேசின பேச்சோட சாயலை நானும் எப்பவோ, எங்கேயோ கேட்ட மாதிரி ஒரு நினைப்பு ஓடுச்சி நெஞ்சிலே! ஆமா, மெய்யாலே உங்களுக்குச் சொந்த ஊர் இந்த வட்டாரம்தானா?" என்றார் நல்லக்கண்ணு.

இதைக் கேட்டதும் சிவப்பிரகாசத்தின் உதடுகள் சுழித்தன. வெளுத்திருந்த அவை மேலும் வெளுத்து விட்டன. விரக்தி கொண்ட சிரிப்பை வெளியிட்டார். "சாமிகளுக்கு ஏன் ஐயப்பாடு வருது? இந்தக் கிழம் சாகப் போறதுக்குள்ளாற எதுக்கு ஒரு பொய்யைச் சொல்ல ணும்? உடலெடுத்துப் பட்ட பாடு பத்தாதா? எங்குரலை நீங்களும் கேட்டதாச் சொல்லுறீங்க. இதுவும் ஒரு ஆச்சரியமேதான்! சரி. உங்களுக்குப் பூர்வீகம் எது?" என்று ஆர்வம் பீரிடக் கேட்டு வைத்தார்.

"நமக்குத் திருச்சிப் பக்கம் வயலூர்...முருகன் ஊர்!" என்றார் நல்லக்கண்ணு பண்டாரம். அவர் பதிலைக் கவனமான கட்டுப்பாட்டுடன் வெளியிட்டார்.

"ஓஹோ!...நீங்க இந்த அறந்தாங்கி ஆவணத்தாங் கோட்டை வட்டாரத்துக்கு இதுக்கு முந்தி வந்த தில்லையோ?"

"ஊஹூம்! நீங்க வந்திருக்கிங்க போலே! அதாலே தான், ஆவணத்தாங் கோட்டைன்னு கேட்டதும், அது

சார்ந்திருக்கக் கூடிய வட்டாரத்தையும் சொல்லிட்டீங்க. இல்லீங்களா? நான் வந்ததில்லே! ஆமாங்க!''

''நானும் உங்க மாதிரியேதான். சாயரட்சை பேசிக் கிட்டது சாமி கூட்டம். அதை வச்சுச் சொன்னேன். அவ்வளவுதானாக்கும்!'' என்று விளக்கம் கொடுக்கலானார் சிவப்பிரகாசம்,

இப்போது நல்லக்கண்ணு சாமியாரின் முகம் அமைதியடைந்ததாகக் காட்டிற்று. ''ஒரு உண்மையை உங்ககிட்டே கேட்கலாமா, சிவப்பிரகாச சுவாமிகளே',' என்று மெல்லப் புதுப் பேச்சில் திரும்பினார். தும்மல் பறிந்தது.

''ஆஹா! கேட்கலாமே?'' என்றார் நல்லக்கண்ணு பண்டாரம்.

அச்சமும் வேதனையும் கலந்த சிரிப்புடன், ''சாமிகளுக்கு இந்தக் கோலம் வந்ததற்கு என்னை மாதிரிக் காதல் விவகாரம்தான் காரணமா! இல்லே, குடும்பம் ஏற்பட்டு அப்பாலே வெறுப்பு வந்து, இப்படிக் கஷாயம் பூண்டீங்களா?'' என்று துருவினார் சிவப்பிரகாசப் பண்டாரம்.

நல்லக்கண்ணு அட்டகாசமாகச் சிரிக்கத் தொடங்கினார். சிரிப்பின் மெல்லலைகள் ஓயவில்லை. அதற்குள் அவர் சொன்னார்: ''உங்க நிலைக்குக் காதல்தான் காரணமா? ஆஹா! என்ன ஒற்றுமை நம்மளுக்குள்ளே! இங்கேயும் அதே கதைதான்! காதல் தோற்றது. அப்பவே பிறந்த மண்ணைத் துறந்திட்டேன். வருஷம்....ஆமா, நாற்பதுக்கும் தாண்டிட்டுது!''

''ஈஸ்வரா!'' என்று சுழல் மனத்துடன் தனக்குத் தானே உள்ளடங்கிய ,பாவனையில் சொல்லியவண்ணம் பீடி ஒன்றைத் தேடி, பற்றவைத்தார் சிவப்பிரகாச சுவாமிகள். புகையின் சுழலில் மனம் புகைந்தது. மனம்

நடந்து வந்த பாதையைத் திரும்பிப் பார்த்தது. விடியற் பொழுதில் தான் மிதித்த மண் அறந்தாங்கிச் சீமை என்பதாக அறிந்து கொண்டதிலிருந்து ஆரம்பித்துப் பின்னோக்கிச் சென்று பார்த்த தருணம், மாயக் காலம் உருக் காட்டிய ஊமைச் சிரிப்பின்—சிலிர்ப்பின்—சிந்தனையின் ஆசைகள், அவலங்கள், கோலங்கள், குமைச்சல்கள், சிரிப்புகள், அழுகைகள், கனவுகள், சிதைவுகள் போன்ற பல திறப்பட்ட மன் உணர்வுகள் மன லயிப்புகளாகவும் மன விகாரங்களாகவும் பரிணாம வடிவு கண்டு தனது சிந்தைவெளியில் கூத்தாடிய விந்தையையும் அவர் உய்த்துணரத் தவறிவிடவில்லையே!

யாரோ தும்மிய சத்தம் எதிர் வாடையினின்று கேட்டது.

ஈ உட்காரக் கண்டு காதுகளை உலுக்கிக் கொள்ளும் காளை மாடு போல, சிவப்பிரகாசப் பண்டாரம் தலையைக் குலுக்கிக் கொண்டார். அப்போது, "சாமிகளே, இந்தக் கட்டையும் புகை பிடிச்சா, உடம்புக்கு இந்த வாடையிலே ரொம்ப உணக்கையாய் இருக்கும்னு யோசிக்கறேன்" என்று நல்லக்கண்ணு பண்டாரம் சொல்லி, பீடியை எடுத்துத் தடுமாறியவாறு நீட்டி, கடைசியில் சுட்டுக் கொண்டு எப்படியோ பீடியில் தீக்கங்கை உண்டு பண்ணிக் கொண்டார்.

புகை அலைகள் எதிரும் புதிருமாக முயங்கிப் பிரிந்தன.

"யாரோ தும்முன சத்தம் கேட்டுச்சே?... நீங்க தும்மலையே சாமிகளே?"

"இல்லை" யென்று மறுதளித்தார் நல்லக்கண்ணு.

"நினைச்சேன். அது பொம்பளை தும்மின சாடை தான்னு என் புத்திக்கு எட்டிச்சு!"

"அப்படியா? நீங்க ரொம்ப சூட்சுமக்காரர்தான்! ஊரிலுள்ள பொம்பளை யாராச்சும் குளத்தை நாடி

வந்திருப்பாங்க!...உத்தேசமாய்ப் பார்த்தா, இப்ப நடுச் சாமமாயிருக்க வேணும்னு தோணுது!''

அப்பேச்சுக்குத் தோதாக எங்கோ சாமக் குருவி கத்தியது.

''வாஸ்தவம்தான்! சரி, இனி நான் என் கதைக்கு வரட்டுமா?''

''பேஷாய்!''

மீண்டும் ஒரு பெருமூச்சை வெளியிட்டார் சிவப் பிரகாசப் பண்டாரம். ''இப்போ நல்ல நிலவுக் காலம்னு பேசிக்கிட்டாங்க. இந்த மாதிரியான ஒரு நிலவுக்காலம் என்னோட வாழ்க்கையிலும் இருக்கத்தான் இருந்திச்சு. அப்பத்தான் என்னோட நெஞ்சிலேயும் நினைவிலேயும் என் அத்தை மகள் பூங்கிளி குடி கொண்டிருந்திச்சு. அழகுன்னா அப்படி ஒரு அழகு. உயிர் மணக்கும் அழகு. அப்படிப்பட்ட தேவதையை நான் நேசிச்சு என் உடைமை யாக்கிக்கிடணும்னு தவமாய்க் கிடந்தேன். பூங்கிளிக்கும் எம்பேரிலே ஒரு மயக்கம். 'மச்சான், மச்சான்'னு உயிராய் இருந்திச்சு. ஆனா, அப்பதான் விதி தன்னோட வேடிக்கை யைச் காட்ட எத்தனிச்சது. பூங்கிளிக்கு அம்மான் மகன் முறை கொண்ட ஒரு இளவட்டமும் பூங்கிளியை—என் னோட பூங்கிளியை நேசிச்சு, கட்டிக்கிட்டால் அதையே கட்டிக்குவேன்னு பழியாய்க் கிடந்தான். இந்த விசயம் என் காதுக்கும் எட்டிச்சு. அப்பவே எனக்குப் பூங்கிளியை அடைய வேணும்கிற ஆசை கூடுதலாய் வளர்ந்திச்சு. என்னோட தவிப்பையும் தாபத்தையும் பூங்கிளிகிட்டே நேருக்கு நேராய்ச் சொல்லிப்புட்டேன். அதே மாதிரி அதோட அம்மான் மகனும் அதுகிட்டே புட்டுவச்சுச் சொல்லியிருக்கான்!'' அத்துடன் நிறுத்திவிட்டு, பீடித் துண்டை வீசினார் பண்டாரம்.

'ஊம்' கொட்டிக் கேட்டுக் கொண்டிருந்த நல்லக் கண்ணு பண்டாரம் ஒரு விநாடி மௌனத்தின் பிடியில் அடிமையாகி விட்டார்.

''கதையைக் கேட்குறீங்களா, நல்லக்கண்ணு சாமி களே!''

''ஆஹா!''

''குரல் சொரத்தில்லாமல் இருக்குதே!''

''ஏதோ ஒரு ஞாபகம் மூண்டிச்சு. ம்...சொல்லுங்க!''

''ஓஹோ! ஒங்க கதை உங்க நெஞ்சிலே தடம் காட்டிச்சோ?''

''ஊம்!''

சிவப்பிரகாசம் தொடர்ந்தார்:

''சரி, கதையை முடிச்சுப்புடுறேன். இனி நமக்குத் தூக்கமா வரப்போகுது? சரி! ஆக, நாங்க ரெண்டு பேரும் ஒருத்தருக்கொருத்தர் சளைக்காமலும் விட்டுக் கொடுக் காமலும் திட வைராக்கியத்தோட பூங்கிளியை மனமார நேசிச்ச உண்மைச் சங்கதி பூங்கிளிக்குத் தீர்க்கமாய்ப் புரிஞ்சிட்டுது! எங்க ரெண்டு பேர் வாழ்க்கையும் பூங்கிளி மனசாலே சொல்லயிருந்த அந்த ஒரு தீர்ப்பின் முடிவிலே ஊசலாடிக்கிட்டு இருந்திச்சு. இந்த நடப்பு ஊர்க் காட்டிலே பரவிருச்சு; எங்க மூணு தரப்புப் பெற்றவங் களுக்கும் விசயம் தீர அர்த்தமாயிடுச்சு!...

இந்த நிலைமையிலே, நானும் பூங்கிளியோட அம்மான் மகனும் ஒருநாள் அந்தி சந்தியிலே சந்திசசிக் கிட்டோம். அந்த ஆளைக் கண்டதும் எனக்கு ரத்தம் கொதிச்சுது. 'டேய்! நான் பூங்கிளியைக் கண்ணாலம் கட்டிக்கிலைன்னா, அப்பாலே என்னோட இந்த ரெண்டு கண்ணையும் பொட்டையாக்கிக்கிடுறேன். இது காளி ஆத்தா பேரிலே ஆணை!' அப்படின்னு சபதம் வச்சேன் அவன்கிட்டே!...உடனேயே அவனும் வீறாப்புக்கொண்டு என் மாதிரியே சூள் உரைச்சான்!...ஆக, எங்க ரெண்டு பேரோட அழகான கண்களும் பூங்கிளி சொல்ல இருந்த வாய்ப் பேச்சிலே தத்தளிச்சுகிட்டிருந்திச்சு!...ஒருநாள்

காலம்பற பூங்கிளி கங்காணிக் கேணியிலே விழுந்திட்ட தாய்த் தாக்கல் கிடைச்சுது. எனக்கு உயிரே போயிருச்சு. எடுத்தேன் ஓட்டம். தொபுகடீருன்னு அந்தப் பாதாளக் கிணத்திலே குதிச்சேன்! நான் குதிச்ச அதே சமயத்திலே பூங்கிளியோட அம்மான் மகனும் கேணியிலே குதிச்சான்! எங்க ரெண்டு பேருக்கும் எங்க உசிர்களைப் பத்தி அக்கறை லவலேசமும் இல்லாம, பூங்கிளியோட உயிரைக் காப்பாத்தியாகணும்கிற ஒரு லட்சியம் மட்டும் தான் மேலோங்கியிருந்திச்சு. அதுப்பிரகாரமே, ரெண்டு பேரும் பூங்கிளியைக் காப்பாத்திப்புட்டோம்!...

விதி தீர்ப்பைப் படிக்கிற கட்டம் வந்திச்சு. நாங்க ரெண்டு பேரும் ஒருத்தருக்குத் தெரியாது ஒருத்தர் உயிரைக் கையிலே பிடிச்சுக்கிட்டு இருந்தோம். பூங்கிளி அந்தியிலே என்னா முடிவு சொல்லிச்சு, தெரியுமா?—எங்க ரெண்டு பேரையுமே அது கண்ணாலே பார்த்துக் கண்ணீர் விட்டுச்சு!— எங்க ரெண்டு பேரிலே யாரையுமே அது கண்ணாலம் கட்டிக்கப் போறதில்லை...அப்படீன்னு நீதி வழங்கிடுச்சு!... 'இந்த என்னோட முடிவிலே மெய் யயலுமே தோத்தவதானே நான்!' அப்படீன்னு பூங்கிளி தீர்ப்புப் படிச்சுது. இந்த ஒரு பேச்சிலே எம்புட்டோ அர்த்தம் பொதிஞ்சிருந்ததாவே எனக்குப் புரிஞ்சுட்டுது... என் மனசு அழுது தவிச்சுது. கடைசி வாட்டியாய் அதோட அழகான கண்ணீரைப் பார்த்த நிம்மதியோட அன்னிக்கு ராத்திரியோட ராத்திரியாய், பிறந்த ஊரை விட்டுப் பிரிஞ்சுட்டேன். என் மடியிலே தயாரா வச்சிருந்த நாகதாளி வேரை அரைச்சு வழியிலே எங்கண்ணிலே பூசிக்கிட்டேன். என்னோட கண்ணு ரெண்டும் அவிஞ்சு போச்சு.... ஆமாங்க ஐயா... நான் செஞ்ச சபதத்தை நிறைவேத்திப்புட்டேன்... அன்னிக்கு ஆரம்பிச்ச கதை தான் இந்தச் சிவப்பிரகாசப் பண்டாரத்தோட சோக வாழ்க்கை! எம்புட்டு அத்தை மகள் பூங்கிளி எங்கிட்டு

வாழ்க்கைப்பட்டு எப்படி இருக்குதோ, அந்த ரகசியம் அம்மையப்பனுக்குத்தான் வெளிச்சம்!... ஈஸ்வரா! எப்படியோ அது நல்லா இருந்தாச் சரி! இனி அதையெல்லாம் நினைக்க எனக்கு ஏது உரிமை?''

சிவப்பிரகாச சுவாமிகள் பேசி முடித்ததும், செருமத் தொடங்கி விட்டார். அவிந்த கண் அமைப்புகளினின்றும் கண்ணீர் தாரை தாரையாகப் பெருக்கெடுத்து, சொட்டுச் சொட்டாக வழிந்தது.

அப்போது, நல்லக்கண்ணு பண்டாரமும் விம்மலானார். ''அழாதீங்க சுவாமிகளே! நாம சபலத்தைக் கடந்தவங்க... சலனத்தைக் கடந்தவங்க... என் கதையும் ஒங்க கதையாட்டம்தான்! ஒங்களைப் போலவே நானும் என் சபதத்தை நிறைவேற்றிக்கிடவே என் கண்களை அவிச்சுக்கிட்டேன். ஆமா, இது சத்தியம், சுவாமிகளே!'' என்றார் அவர். வைராக்கியம் பேசியது.

மண்டியிருந்த ஆவாரஞ் செடிப் பத்தைகள் சலசலத்தன.

சிவப்பிரகாசப் பண்டாரம் திகைத்தார். ''நல்லக்கண்ணு சுவாமிகளே! நீங்க... நீங்க பூர்வத்திலே சுவாமிநாதன்தானே?...ஒங்க பேச்சின் ஒரு தொனியிலேயே நான் புரிஞ்சுக்கிட்டேன். சொல்லுங்க... நான்தான் பூர்வத்திலே முத்துலிங்கமாய் இருந்தவன். சொல்லுங்க நிசத்தை! நாம ரெண்டு பேருமே பொய்யையும் கடந்தவங்க இல்லையா?'' என்று விவேகத்தோடு உணர்ச்சி வசப்பட்டுப் பேசியவர், தட்டுத் தடுமாறிய வண்ணம் தடவித் தடவி நல்லக்கண்ணு சுவாமிகளின் கைகளைப் பிடித்துக் கொண்டு கெஞ்சினார்.

நல்லக்கண்ணு பண்டாரம் 'ஓ'வென்று ஓலம் பரப்பினார். ''ஆமாம் சுவாமிகளே, ஆமாம்! நான் சாமிநாதன் தான்!''

சிவப்பிரகாசப் பண்டாரம் அப்படியே நடுநடுங்கினார். கைகளைத் தடுமாற்றத்துடன் விலக்கிக் கொண்டு நல்லக்கண்ணு பண்டாரத்தை ஆரத் தழுவிக் கொண்டு கதறினார். ''ஈஸ்வரா! உன் விளையாட்டுக்கு இவ்வளவு ஊட்டம் இருக்கும்னு எங்களுக்குத் தோணுறதுக்கு இப்பதான் வேளை வந்திருக்குது போலே!... உன் தீர்ப்புக்குக் குறுக்கே நிற்கிறதுக்கு இந்த ஆண்டிப்பண்டாரங்களுக்கு ஏது வல்லமை?''

சிவப்பிரகாச சுவாமிகளின் அழுகை நிற்கவில்லை.

நல்லக்கண்ணு சுவாமிகளின் கண்ணீரும் நிற்கவில்லை.

''அழாதீங்க!''

''ஊம்!''

''நீங்களும் அழக் கூடாது!''

''ம்...''

அப்போது புதிய விம்மல் ஒலி கேட்டது.

''யாரோ ஒரு பெண் தேம்புற சத்தம் வருதே?''

''ஆமா அப்படித்தான் எனக்கும் தோணுது...''

அப்போது...

மீண்டும் விசும்பல் சத்தம் கேட்டது.

விசும்பில் விளையாடிய கோலமதி, மடத்தின் எதிரே நின்று கொண்டிருந்த பூங்கிளியைச் சுட்டிக்காட்டியது. நரைச் சுருள்களிலே சீதளக் கதிர்கள் இழைந்தன. நெற்றித் திலகம் கசிந்து வழிந்தது. கழுத்தில் வெறும் 'கருகு மணிச்சரம்' மட்டும் இழைந்திருந்தது. சுருக்கங்கள் படர்ந்த முகத்தில் அழுகைக்கிடையே அழகின் சாயலும் வேடிக்கை காட்டியது. தும்மல் தொடர்ந்தது.

''ஐயா... சாமிகளே!''

சுவாமிகள் இருவரும் மாயையின் இருட்டில் தவித்துச் சிலிர்த்தார்கள். அவர்களது இதயங்கள் புயல் உருக் கொண்டனவோ?

''யாரு, பூங்கிளி குரலாட்டம் கேட்குதே?''

''ஆமாங்க... அப்படியேதான் எனக்கும் கேட்குது...''

பூங்கிளி அந்தச் சாமியார்களுக்கு முன்னே வந்து நின்றாள். கைகளைக் குவித்துக் கும்பிட்டபடி, ''கும்பிடு றேனுங்க. நான் பூங்கிளியேதானுங்க!'' என்றாள். நா தழுதழுத்தது. மூக்கை உறிஞ்சிக் கொண்டாள்.

நல்லக்கண்ணு பண்டாரம் சாமிநாதனாகவும் சிவப் பிரகாச சாமியார் முத்துலிங்கமாகவும் உருமாறிய தன் விளைவாக, ஒரு கணம் இருவருமே நிலைதடுமாறி, நினைவு மயங்கி, தங்களையும் மறந்தகதியில் தங்களையும் மீறி இருக்கையை விட்டு எழுந்தார்கள். எழுந்தவர்கள் ஊனக் கண்களின் இருட்டின் மாயையில் தவித்துத் தடுமாறித் தரையில் விழுந்தார்கள். உடனே, சாமி நாதனும் முத்துலிங்கமும் மறைந்தனர்... நல்லக்கண்ணு பண்டாரமும் சிவப்பிரகாச பண்டாரமும் நிலைத்தனர்.

பூங்கிளி அவ்விரு சுவாமிகளுக்கும் உதவி செய்ய எண்ணினாள். ஆனால், மறு இமைப்பில், அவள் அவர் களது நிதர்சனக் கோலத்தை எண்ணி அஞ்சினாள், அவளது நெஞ்சு தாங்க முடியாத அளவுக்கு வலித்தது.

''சுவாமிகளே! ஒங்க ரெண்டு பேரோட இந்தப் பயங்கர நிலைமைக்குச் காரணமாயிருந்த இந்தப் பாவியை நீங்க சமிக்க வேணாம்... சமிக்கவும் மாட்டீங்க! ஒங்க ரெண்டு பேரோட நினைப்பு ஒண்ணையே துணைக்கு வச்சுக்கிட்டு அந்தரங்க சுத்தியோட இம்மாம் காலத்தையும் கன்னியாவே கழிச்சுப்புட்ட இந்தப் பூங்கிளி, ஒங்க ரெண்டு பேருக்கும் தொண்டூழியம் செஞ்சு எங்கண்ணை மூடிக்கிட தவம் இருந்தேன்! காளி ஆத்தா என்னோட இந்தக் கனாவைப் பலிக்க வைக்கத்தான்

இம்புட்டுக்காலம் கழிச்சு ஓங்க ரெண்டு பேரையும் ஒட்டுக்கா எம் முன்னாலே காட்டிப்புட்டிருக்குது!... எம் பேச்சு சத்தியமுங்க... நல்ல வாக்குக் குடுங்க, சாமி மார்களே!...''

கூப்பிய கரங்கள் கூப்பியபடியே இருந்தன.

வழிந்த கண்ணீர் மணிகள் வழிந்த வண்ணமே இருந்தன.

வெடித்த பெருமூச்சுகள் வெடித்த நிலையிலேயே இருந்தன.

இப்போது சாமியார்களின் இருவகைப்பட்ட விம்மல்கள் வெடித்துத் துடித்துச் சிதறின. மறுகணம், அவை தடம் தெரியாத வகையில் அடங்கி விட்டன! மாயையின் பிடியினின்றும் கட்டறுத்துக் கொண்டன போலும்!

சிவப்பிரகாசப் பண்டாரம் தொண்டையைக் கனைத்துக் கொண்டார்.

''தாயே, நாங்க மாயையைக் கடந்த சாமியார்கள்! எங்களை இனியும் சோதிக்கப்படாது. அந்த நாளையிலே நீங்க தோத்துப்பிட்டதாக எங்க ரெண்டு பேர்கிட்டவும் சொன்னீங்க... ஆனா, இப்போ மெய்யாவே நீங்க ஜெயிச்சிக்கிட்டீங்க! ஓங்க கெலிப்பு காளி ஆத்தாளுக்கே அர்ப்பணமாகட்டும்! எங்களைப் பெரிய மனசு பண்ணி மன்னிச்சுப்புட்டு, நீங்க இப்பவே இங்கேயிருந்து போயிடுங்க. இது எங்க கட்டளை! ஆணை!'' என்று தீர்ப்பு வழங்கினார் சிவப்பிரகாச சுவாமிகள். ''ஆமாம்!'' என்று ஒத்துப் பாடினார் நல்லக்கண்ணு பண்டாரம்.

உயிர் ஊசலாட ''ஐயையோ, காளி ஆத்தா!'' என்று கூக்குரலிட்டுக் கதறினாள் பூங்கிளி.

ஃ ஃ ஃ

மழ்மல் பொழுது.

''பாவம்! யாரோ பொம்பளை ஒருத்தி மடத்துக்குப் பக்கத்தாலே சவமாய்க் கிடக்குதே!'' என்று பசுபதி பண்டாரம் மனிதத்தன்மையின் பதற்றத்தைக் கட்டுப் படுத்த முடியாமல் அலறினார்.

இச் செய்தியைக் கேட்டதும், சிவப்பிரகாசப் பண்டாரமும் நல்லக்கண்ணு பண்டாரமும் கை நொடிப் பொழுது மனம் அதிர்ந்தனர்... துடித்தனர். ''ஐயோ..:'' என்று இருவரும் ஒரே குரலெடுத்து அழுதனர். அழுகைக் குரல்களின் மாயைப் பிடி கை நழுவியது. மனங்கள் இரண்டும் அடங்கின. காவித் துணிமணிகள் பளிச் சிட்டன!

''சாமிகளே! பூங்கிளிதான் தெய்வமாகியிருக்கும்!... ஈஸ்வரா!''

''ஆமாம்... நீங்க சொல்றதுதான் சுத்தமான நடப்பாய் இருக்க வேணுமுங்க, சாமிகளே! ஈஸ்வரப் பிரபோ!''

இரு ஜோடிக் கரங்கள் அஞ்சலி முத்திரை ஏந்தின.

(ஆனந்தவிகடன்—1963)

# தெய்வம் நேரில் வரும்

அந்தத் தேதித் தாள் அப்புறம் கிழிக்கப்படவே இல்லை!...

அப்படியென்றால், காலம் மாறவில்லையென்று பொருளா?

ஊஹூம்!

காலம் மாறிக் கொண்டுதான் இருக்கிறது.

ஆனால், அவர்களைப் பொறுத்தமட்டில் மட்டும் காலம் மாறவில்லை.

சுவரில் தொங்கிய காலண்டரில் கிழிக்கப்படாமல் இருந்த அந்தத் தேதித் தாளை—பழுப்புப் படிந்து தூசும் தும்பட்டையுமாகத் திகழ்ந்த அந்த தேதித் தாளைக் கிழிபட்ட மனத்தோடு—கிழிபட்ட மனத்தில் ரத்தமும் பாசமுமாகப் பொங்கிப் புரண்ட மனத்தோடு பார்த்தான். பார்த்துக் கொண்டேயிருந்தான் ஆனந்தன். கனத்து வலித்த கண் விளிம்புகளினின்றும் சுடுநீர் மாலையாக நீண்டது. எதை நினைத்தான். எதுவோ நினைவில் வந்தது.

**'16-10-1970'** என்று அந்தத் தேதித் தாள் சுட்டிக் காட்டிய வண்ணமிருந்த அந்த நாளை அவனுடைய

உதடுகள் முணு முணுத்தன. இமைகள் பொருந்தின. இமைகள் மூடிய கருமணிகள் இரண்டிலும் அந்தச் சித்திரம் மாறி மாறி—மாற்றி மாற்றித் தரிசனம் தந்தது. 'ஐயையோ... தெய்வமே!... ராஜா!... ஓ...மை டியர் ராஜா!'—விம்மல் வெடித்தது. நெஞ்சு எப்போது வெடிக்கப் போகிறதோ?

காலடிச் சத்தம் கேட்டது.

ஆனந்தன் சுயப் பிரக்ஞை கொண்டான். கொண்டவளை ஏக்கம் சூழப் பார்த்தான். "நீ நடந்து வந்திருக்கே. அந்தச் சத்தத்திலே நான் நம்ப ராஜாவோட கால் சலங்கைச் சத்தத்தைக் கேட்டேன்... ஆமா...சுசீ!" என்று விம்மினான்.

சுசீலா உயிர்க் கழுவில் ஊசலாடினாள். இன்று நேற்றுத்தானா இப்படி?—கழிந்த இருநூற்று இருபத்திரண்டு நாட்களாகத்தான் இந்த ஜீவ மரணப் போராட்டம். இவ்வீட்டில் விதியாக—வினையாக—தெய்வமாக விளையாடிக் கொண்டிருக்கிறது. விளையாட்டுக் காட்டிக் கொண்டிருக்கிறது!

"அத்தான் வாங்க, சாமி கும்பிடலாம்..." என்றாள் சுசீலா. பூங்கரங்களிலே பூசனைப் பொருள்களும் பூவும் இருந்தன. குளித்து முழுகிக் கொண்டை போட்டிருந்த கேசக் கற்றைகளில் செருகப்பட்டிருந்த பூச்சரத்தினின்றும் நீர் சொட்டியது. சொட்டிய விழிநீரைத் தட்டிவிட்டுச் சிந்தை இழந்து, கொண்டவனின் கரம் பற்றி அழைத்துச் சென்றாள் அவள். மெய் நடுங்கியது.

தீபாராதனை முடிந்தது.

"விபூதி குங்குமம் எடுத்துக்குங்க" என்றாள். "இன்னிக்கு சனிப் பெயர்ச்சியாம்!"

அவளை ஏறிட்டு ஊடுருவிப் பார்த்தபடி, விபூதி குங்குமம் எடுத்துக் கொண்டான் ஆனந்தன். நெற்றியில்

தூரித்துக் கொள்ளப் போனவன், 'டக்'கென்று நின்று, சுவர்க்கோடியின் கீழ்முனையை நோக்கி நடந்து, அந்தப் பேசும் பொற்சித்திரத்தின் நெற்றியில்—அழகு கொழித்த நெற்றியில் விபூதியையும் குங்குமத்தையும் இட்டான். "ராஜா...! ஐயோ ராஜா... தெய்வமே! ஐயையோ தெய்வமே..." வெறிபூண்டு ஓலமிட்டான். பைத்தியம் பிடித்துவிட்ட மாதிரி சுசீலாவின் நடுங்கும் கைகளைப் பற்றிக் கொண்டு, "சுசீ, நம்ம ராஜா நம்மகிட்டே திரும்பி வந்து சேர்ந்திடுவான்னு இன்னமும் நீ நம்புறே! அப்படித் தானே சுசீ?" என்று சின்னப் பிள்ளை மாதிரிக் கெஞ்சும் குரலெடுத்துக் கேட்டான். மார்பை அழுந்தப் பிடித்துக் கொண்டான்.

சோகத்தில் தெளிந்த நம்பிக்கை அவள் இதழ்களிலே புன்னகையாகச் சுடர் தெறித்தது. "தெய்வத்தைத்தான் இன்னமும் நான் நம்பிக்கிட்டு இருக்கேன். ஆனதாலே, நம்ம ராஜாவை அந்தத் தெய்வம் நம்பகிட்டே மீட்டுக் கொண்டாந்து பத்திரமாய் ஒப்படைச்சிடும்னு தோணுது. அத்தான்..." பெற்ற மனம் உருகி வழிந்தது, கண்களில்! காலை இளஞ்சுடரொளியில் வெண் முத்தங்கள் பனிச்சிட்டன. "சனியும் பெயர்ந்திடுச்சாம்!" தொடர்ந்தாள்.

அவன் மெய்ம்மறந்தான். 'ஆஹா!' என்று தனக்குத் தானே சொல்லிச் சிரித்தான். புதிய ரத்தம் பெற்றவனென அவன் திசைமடங்க முனைந்தான். என்னவோ இடித்தது. 'டங்'கென்று அரவம் கேட்டது. அரவம் கண்டாற் போன்று விழித்தான்.

நடை வண்டி நிலைகுப்புறக் கிடந்தது.

"ராஜா... என் கண்ணே! என் தெய்வமே...உன்னைப் பெற்ற எங்களுக்கு இனியானும் உயிர்ப் பிச்சை அளிக்க மனசு இறங்கப்படாதாடா?... ஐயோ!"

வீரமாகாளி சிரித்துக் கொண்டிருக்கிறாள்...

ஃ ஃ ஃ

அறந்தாங்கி—புதுக்கோட்டை பஸ், வீட்டைச் சுற்றி மடங்கியது.

எதை நினைப்பான்?

எதை மறப்பான்?

ஆனந்தனின் மேனி புல்லரித்தது. அந்தப் பதினோரு மாதங்களில் ராஜாவை அழைத்துக்கொண்டு இதே காரில் போய் குழந்தை ஸ்பெஷலிஸ்ட் டாக்டர் விசுவிடம் எத்தனை தடவை காண்பித்து மருந்து வாங்கி வந்திருக்கிறார்கள்.

விதிக்கு மருந்து இல்லையாம்...

வினைக்கும் மருந்து இல்லையா?

''தெய்வமே. எங்க ராஜா எங்கே?''

—மனம் அழுதது.

ராஜா எங்கே?

ஏமாற்றமும் ஏக்கமும் புடைசூழ, நெற்றி நரம்புகள் புடைத்து நிற்க, நிலைக்காமல், நிற்காமல் அங்கும் இங்குமாகத் தேடினான் ஆனந்தன்—சித்தபேதம் கொண்டவன் மாதிரி.

''ராஜா...''

பாசம், கண்ணீராகப் பொங்கிப் புரள, கண்ணீர் பாசமாகப் பெருகி வழிய, வெறி கொண்ட பாவனையில் அலறினான் அவன்.

உயிர்ப் பதைப்புடன் ஓடோடி வந்தாள் சுசீலா. தாய் நெஞ்சம் தவித்தது, துடித்தது. புடவை முன்றானை நாசியை நாடியது. ''அத்தான், இட்டிலியைச் சாப்பிடுங்க!'' என்று வேண்டினாள்.

''நம்ப ராஜாவை விட்டுட்டு என்னை மட்டும் இட்டிலி சாப்பிடச் சொல்றியே, சுசீ?''

''ஐயோ, அத்தான்!''

''சுசீ, அப்போ நம்ப ராஜா துளித் துளியாக இட்டிலியை 'நப்பு'க் கொட்டிச் சுவைச்சுத் தின்பானே!—தெய்வம் போல... அந்த அழகை எப்படி சுசீ மறக்க முடியும்?''

''ஆமாங்க!'' என்று கேவிக் கேவி அழுதாள் அன்னை. ''சாப்பிட்டுட்டு கடைப்பக்கம் போங்க. மனசுக்கு ஒரு மாற்றம் கிடைக்கலாமுங்க'' என்றாள்.

''சுசீ, நீ ஒண்டியா இருந்து, அழுது புலம்பி, உருகி உருக்குலைந்து போகிறேன் என்கிறாயா? உன் கண்ணீரைத் துடைக்க ராஜாகூட இல்லையே, சுசீ?''

''ஐயோ, ராஜா! தெய்வமே, எங்க தெய்வத்தை எங்க கிட்டே நல்லபடியாய் ஒப்படைத்து விடு, தெய்வமே!''

அப்போது, வீரமாகாளி கோயில் மணி ஒலித்தது.

''சுசீ!''

''அத்தான், தெய்வம் நல்ல சகுனம் கொடுக்குதுங் களே! நம்ம ராஜா உயிரோடு நம்பகிட்டே வந்து சேர்ந் திடுவான்னுதானே அர்த்தம்?''

'ஊம்' கொட்டினான் ஆனந்தன்.

அவள் சிரித்தாள்.

சிற்றுண்டி முடிந்தது.

அவனும் அவளும் மௌனப் பிண்டங்களாக நின் றார்கள். அவர்கள் பார்வையில் ராஜாவின் வெள்ளிக் கிண்ணி தென்பட்டது; ராஜாவின் நடைவண்டி காட்சி தந்தது. அதோ, கிலுகிலுப்பை, ஊதுகுழல், டமாரம்!

ராஜா... ராசா...

பெற்ற உள்ளங்கள் இரண்டும் தணல் மெழுகுகளா யினவோ?

கனவுகள் கண்டு விழிப்பவன்போல ஆனந்தன் வாரிச் சுருட்டிக் கொண்டு எழுந்தோடினான்: "சுசீ! இதோ பார் நம்ம ராஜாவை!" என்று ஆனந்தக் களி துலங்கக் கூவினான்.

பழைய பத்திரிகையொன்று காலில் சிக்கியது. எடுத் தான் ஆனந்தன்.

இந்தப் படத்திலுள்ள ராஜா எங்கள் ஓரே குழந்தை. வீரமாகாளியம்மன் தந்த வரப் பிரசாதம். பூச்சொரியல் திருவிழாக் கச்சேரியின்போது நாங்கள் கச்சேரி கேட்டுக் கொண்டிருந்தோம். எனக்கும் என் மனைவிக்கும் நடுவில் எங்கள் கண்மணி ராஜா அமர்ந்திருந்தான். அம்மன் பேரில் பாடப்பட்ட ராகமாலிகையில் மெய்ம்மறந்திருந்த நாங்கள், சுயநினைவு பெற்றுப் பார்க்கையில் எங்கள் தெய்வத் தைக் காணவில்லை!

தேடாத இடமில்லை; ராஜா இருபது சவரன் நகைகள் அணிந்திருந்தான்.

நகைகளைப் பற்றிக் கவலையே இல்லை. ஆனால், எங்கள் ராஜாவை மட்டும் யார் கண்டா லும், யார் கையில் இருந்தாலும் எங்களிடம் உயிரோடு ஒப்படைத்தால் போதும். அவர்கள் கேட்கும் பொருளைத் தட்டாமல் கொடுப்பேன். அறந்தாங்கியில் ராஜா காபி முதலாளி ஆனந்தனை யாவரும் அறிவார்கள். ஒரு உயிரைக் காட்டுவதன் மூலம் இரண்டு உயிர்களைக் காப்பாற்றிய புண்ணி யம் கிடைக்கும்!

இப்படிக்கு,
ஆனந்தன்-சுசீலா.

விளம்பரம் ராஜாவைக் காட்டவில்லை.

'எங்களுக்குப் பைத்தியம் பிடிச்சிட்டால்கூடத் தேவலாமே?' என்று தவித்தார்கள் பெற்றவர்கள்.

ஃ ஃ ஃ

நிலா மலர்ந்த முன்னிரவு வேளை.

ஆனந்தன் முன்கட்டிலும் சுசீலா பின்கட்டிலுமாகப் படுக்கைகளில் புரண்டு கொண்டிருந்தார்கள். ராஜா பிரிந்த பின், அவர்களும் இப்படிப் பிரிந்து விட்டனர் போலும்!

கசக்கிப் பிழிந்த பெருமூச்சுகள்!

கணங்கள் பேய்க் கணங்களாக ஊர்ந்தன.

அப்போது—

"தாயே, ராப்பிச்சை போடு!... உன் பிள்ளை குட்டிங்க நல்லா இருக்கும். என் மகன் பசியாலே துடிக்கிறான். பிச்சை போடம்மா... தர்மம் தலைகாக்கும் தாயே!"

வாசற்புறமிருந்து சாடி வந்த சொற்கள் சுசீலாவின் தாய் உள்ளத்தில் சிலிர்ப்பை ஏற்படுத்தியிருக்க வேண்டும். ராசா சாப்பிடும் வெள்ளிக் கிண்ணியில் சோறும், குழம்பும் போட்டு எடுத்துக் கொண்டு வெளியே நடந்தாள்.

ஒளியில் மிதந்து நின்றாள் பிச்சைக்காரி. முரண்டு பிடித்து வீரிட்டலறியது இடுப்புக் குழந்தை.

"ஏம்மா, குழந்தையோட அழுகை ஓயறதுக்கு ஒரு வாட்டி பால் கொடுக்கப்படாதா, என்ன?" என்று குரல் தழு தழுக்கக் கேட்டாள் சுசீலா.

பிச்சைக்காரியின் முகம் மாறியது. தலையைத் தாழ்த்தியபடி, தோளில் தொங்கிய பையிலிருந்து பாத்திரத்தை எடுத்தாள்.

''இந்தா, இது உனக்கு. இது உன் பிள்ளைக்கு!'' என்று சொல்லி, பிச்சையிட்டுவிட்டு, தலையை நிமிர்த்தினாள் சுசீலா. கண்கள் கசிந்தன.

பிச்சைக்காரிடன் மகன் அந்தச் சோற்றைக் கண்டது தான் தாமதம், உடனே பிஞ்சுக் கரங்களால் சாதத்தை அள்ளி அள்ளி வாயில் திணித்துக் கொண்டான்.

சுசீலாவின் மேனி நடுங்கத் தொடங்கியது. விழிகளைத் துடைத்துக் கொண்டு உன்னிப்பாகப் பார்வையைச் செலுத்தினாள். 'ஆ!......ராஜாவா? ஆஹா! ராஜாவேதான்! என் ராஜாவேதான்!... தெய்வமே!' அவளது அன்னை மனம் ஆனந்தத்தில் தவித்தது. 'அதே கண்கள், அதே உதடுகள்...! அதோ, இரண்டு பற்கள் கீழ் வரிசையில்!...'

அந்தக் குழந்தை சுசீலாவைப் பார்த்துக் கொண்டேயிருந்தது. எப்படிக் கறுத்து மெலிந்து விட்டது!

கைக்கு ஐந்து வீதம் போட்டிருந்த ஐந்து கொலுசுகள் எங்கே? இடுப்பில் கட்டியிருந்த சலங்கைச் சங்கிலி எங்கே? கடுக்கன்கள் எங்கே? டெர்ரின் ஸ்லாக், நிஜார் எல்லாம் எங்கே?

''தாயே, உனக்குக் கோடிப் புண்ணியம் உண்டு. உன் பிள்ளை குட்டி எழுதிக் கெடக்கும்!'' என்று கும்பிட்டு விட்டுக் குழந்தையும் தானுமாகப் புறப்பட்டாள் பிச்சைக்காரி.

தத்தளித்தாள் சுசீலா. ''ஏ. பிச்சைக்காரி! நில்லு!'' என்றாள்.

பிச்சைக்காரி நிகைத்து நின்றாள்.

அந்தக் குழந்தை இப்போதும் சுசீலாவை இமைக்காமல் பார்த்த வண்ணம் இருந்தது.

''பிச்சைக்காரி, இப்படி உள்ளே வா. பயப்படாமல் வா!''

''இந்தாப் பாரு, நீ வச்சிருக்கிற இந்தக் குழந்தை உன்னுடையதா?''

''பின்னே?...'' அதிகாரமாக எதிர்த்துக் கேட்டாள் பிச்சைக்காரி. கீழே இறங்கத் துடித்துக் கொண்டிருந்த குழந்தையை இறுகப் பற்றிக் கொண்டாள். ''இருடா, காளி!'' என்று அடக்கினாள்.

''தாயே! காளி ஆணையாய்ச் சொல்லு. இந்தப் பிள்ளை நீ பெற்ற பிள்ளையா? சொல்லு தாயே, சொல்லு!'' விக்கலுக்கும் விம்மலுக்கும் இடையே கை கூப்பிக் கெஞ்சினாள் சுசீலா.

''நான் பெத்த மகன் இல்லீங்க! ஏனுங்க கேட்கிறீங்க?'' என்று மேனி நடுங்கினாள்.

''அது என் குழந்தை! பத்து மாசம் தவமிருந்து சுமந்து நான் பெற்ற மகன் அவன்!'' உணர்ச்சிப் பெருக்குடன் செப்பினாள் சுசீலா. எம்பித் துடித்த மார்பை அழுந்தப் பற்றிக் கொண்டாள். விழிகள் புனலாடின.

''இது உங்க பிள்ளை என்கிறதுக்கு ருசு என்னா? ஆதாரம் என்னா?'' என்று ஓங்காரமாக் கேட்டாள் பிச்சைக்காரி.

''ராஜா! என் தெய்வமே!'' என்று அலறினாள் அந்தத் தாய்.

அடுத்த கணம்......!

தாய்ப் பால் பீறிட்டுப் பொங்கிச் சிதறி வழியத் தொடங்கி விட்டது!

மேனி புல்லரிக்க நின்ற சுசீலா, தன் தெய்வ மணிக் கரங்கள் இரண்டையும் குழந்தையை நோக்கி ஏந்தி விரித்தாள்.

தாவி ஓடி வந்த அந்தப் பிள்ளை, சுசீலாவின் மார்பகத்தைச் சரண் அடைந்தது. ''அ...ம்...மா, அம்மா!''

''தாயே! உங்க மகன் தான் என் காளி!'' என்று தேம்பினாள் பிச்சைக்காரி.

''ஏழெட்டு மாசத்துக்கு முன்னாடி இப்ப இருக்கக் கூடிய இதே கோலத்திலே பிறந்த மேனியாய் இந்தப் பிள்ளையை பட்டுக்கோட்டை நாடியம்மன் சந்நிதியிலே கண்டெடுத்தேன். என் பேச்சு சத்தியமுங்க! குழந்தையைக் கயவாடிக்கிட்டுப் போன எந்தப் பாவியோ, நகை நட்டுகளைக் கழற்றிக்கிட்டு, மனசு இரங்கி இதைக் கொல்லாமல் விட்டுப்புட்டுப் போயிருக்க வேணும்!'' என்றாள் அவள்.

''ராஜா! தெய்வமே!''

ஆனந்தனே வந்து விட்டான்.

ராஜா திரும்பினான். ''ப்...பா! ப்...பா!'' என்று செருமினான்.

''ராஜா! எங்க தெய்வமே! இந்தாப் பாரு உன்னை!'' என்று தழுதழுக்கக் கூறிய ஆனந்தன், தன் கையிலிருந்த ராஜாவின் புகைப்படத்தைக் குழந்தையிடம் காட்டினான்.

ராஜா கைகொட்டிச் சிரித்தான்.

''தாயே, நான் புறப்படுறேனுங்க!'' என்று விம்மினாள் பிச்சைக்காரி.

''தாயே, நீ எங்க கண்ணுக்குப் பிச்சைக்காரியாகவே தோணலே!... இந்தா!'' என்று சொல்லி ஐந்து ரூபாய், பத்து ரூபாய் நோட்டுக் கொத்தை நீட்டிக் கெஞ்சினாள் சுசீலா.

பிச்சைக்காரி நடு நடுங்கினாள். ''தாயே, இந்தப் பிச்சைக்காரிக்கு இனி வேண்டியது சாண் வயிற்றுக்குப் பிடி சோறு மட்டுந்தான்...அதைத்தான் அள்ளி அள்ளிக்

கொடுத்துப்பிட்டீங்களே? பின்னே, எனக்கு எதுக்குங்க தாயே, பணமும் காசும்?...ஒண்ணும் வேண்டாம்! ஆனா, இந்த ஏழைக்கு ஒரேயொரு ஆசைதான் மனசிலே தவிச்சுக்கிட்டு இருக்குது. இந்தப் படத்தை மட்டும் எனக்குக் கொடுத்துப்பிடுங்க. கோடிப் பொன்னைக் கொட்டிக் கொடுத்ததாட்டம் நினைச்சுக்கிடுவேனுங்க, தாயே!'' கும்பிட்ட கைகளில் ஈரம் சொட்டியது.

அதோ, கைகளில் புகைப் படத்துடன், கண்களில் கண்ணீருடன் புறப்பட்டு விட்டாள். அந்தப் பிச்சைக் காரி!

''ராஜா...! எங்க தெய்வமே!...தாயே! வீரமாகாளித் தாயே!...''

ஆஹா!...வீரமாகாளி எவ்வளவு கருணையோடு சிரிக்கிறாள்... □

(ஆனந்தவிகடன்)

# எல்லைச் சக்தி

‘‘விந்தையான விமரிசனம். ஆமாம்; உன் சிந்தை தடுமாறாமல் பார்த்துக்கொள். உண்மையிலேயே நீ என்னைவிட ஆடலில் சிறந்தவளென்றால், நீ சற்று முன் பெண்ணுள் ஆணாகிச் சூளுரைத்தாயே, அந்தச் சூளுக்கு சவாலுக்கு-சபதத்துக்கு வெற்றி சொல்ல வேண்டுமென்றால், நீ அந்தப் பார்வதியாகிவிடக் கூடாது. நினைவில் இறுக்கி வைத்துக்கொள். உன் பேதை மனம் இறுக்காகி விடப் போகிறது, உஷார்! சிவபிரானால் சிந்தையொடுககப்பட்ட சக்தியாகி, தில்லையில் போய் எல்லைக் கல் பதித்துவிடக்கூடாது!...நடன உலகம் அப்பால் உன் பெயருக்குப் பாரதம்பாடி விடும்...! அது மட்டுமா? பரணியும் புனைந்து விடுவார்கள். நிஜமாகவே உன் விமரிசனத்திலே விந்தை என்ற சொல்லை அடைமொழியாக்கிவிடாதே!... போட்டியிடப் போகிறவனே தன் எதிர்க்கட்சிக்காரிக்குப் பாடம் படித்துக் கொடுக்கிறானே யென்று எண்ணி அப்படி உன் மீன்விழிகள் துடிக்கின்றனவோ’’ சொல். உன் கண்களிடம்: நான் நாளை உன்னைச் சந்திக்கிறேன். நடன அரங்கிலே! அல்ல, அல்ல! எல்லையிலாப் பெருவெளிக்கு எல்லை கிழித்துக் கிடக்கும் மயானத்திலே, சக்தியின் அகந்தை ஒடுக்கக் கால் மாறிக்

குனித்துக் குழை நக்கிய பிஞ்ஞுகனாக நாளை உன்னைச் சந்திக்கின்றேன்...ஹஹ்ஹா...ஹஹ்ஹா!...''

''மறந்து விடாதீர்கள், உங்கள் சபதத்தை-சூளுரையை-வாதத்தை!... நடன ர்சிகர்கள் தீர்ப்புச் சொல்லட்டும்; நாளை விடியட்டும். துரைராஜன் நடனத்தில் சிறந்தவரா? இல்லை, பார்வதி சிறந்தவளா? அதோ, கையிலையங்கிரியிலே. வெள்ளைப் பனிமலை மீதிலே ஏன், அந்த அலகிலா விளையாட்டுடையானின் முகத்தில் கூட இந்தக் கேள்விகளுக்குப் பதில் பிரதிபலிக்கிறதே?... என் மாதா பராசக்திகூடச் சொல்லாமல் சொல்லி என்னை ஆகிக்கிறாளே, வெற்றி என் பக்கம்தானென்று! சந்திப்பொம், நாளை!...ஹஹ்ஹா! ஹஹ்ஹா!...இந்தப் பார்வதிக்குத்தான் வெற்றி, வெற்றி!! வெற்றி!''

ஃ ஃ ஃ

''இந்தத் துரைராஜனைச் சுட்டெரித்து, அவன் சாம்பலைப் பூசிக்கொண்டுதான் நிற்கப் போகிறேன். அப்பொழுதுதான் நாட்டியம் நிறையும். ஆமாம்; வெற்றி எனக்கேதான்! நான் பார்வதியல்லவா? என் அகந்தையை அந்தச் சிவனேகூட மாற்றவோ, மாற்றுக் குறைக்கவோ முடியாது நான் பார்வதி!''

''நிஜமாகவா?''

''ஆம்... என்னுடைய அன்னைசக்தியின் மேல் ஆணை... இது மெய்யான சேதி, சகுந்தலா.''

''அப்படியென்றால், நீ சோமநாதனைத்தான் கலியாணம் செய்து கொள்ளப் போகிறாயா? உனக்கு நடனம் பயில்வித்த—உன்னைக் காதலித்த துரைராஜனைக் கைவிட்டுவிடத் தீர்மானித்து விட்டாயா, பார்வதி?''

''ஆமாம்... நூற்றுக்கு நூறு உண்மை. போட்டியாம் போட்டி! நாட்டிய உலகம் என்னை வானளாவப் புகழ்

கிறது: இந்தத் துரைராஜன் என்னை வாய்கொண்ட மட்டும் தூற்றுகிறான். பார்க்கிறேன்...இன்றைய நடனப் போட்டியிலே எனக்கேதான் வெற்றி...''

''அப்படியென்றால், உன் மலர் மாலை...?''

''சோமநாதனின் அழகுக் கழுத்துக்கேதான்!''

ஃ ஃ ஃ

''சபாஷ், நீலகண்டா! உன் புத்திசாலித்தனத்துக்கு யாம் பெரிதும் மெச்சினோம். இந்தா, பிடி உத்தரீயத்தை!''

''நான் தப்பித்தேன் துரை. அந்தி நெருங்குகிறது அல்லவா? தில்லையிலே கல்லுருவாகச் சமைந்து நிற்கச் சபித்த அந்த ஒரிஜினல் பிரானாகவே நீ வடிவெடுத்து, ஒரு சாபம் இட்டது போதாதென்று, எங்கே என்னையும் வேறு சபித்துவிடப் போகிறாயோ என்று உயிர் நடுங்கிப் போனேன். நல்லவேளை, நான் தப்பித்தேன், பிழைத்தேன்!''

''அஞ்சல்...''

''அபயம்!''

''பேஷ், பேஷ்!''

''சோமநாதன் வாயில் மண் போடவேண்டும்!''

''அதை நான் ஏன் சொல்ல வேண்டும்? என் வாயில் நீ சர்க்கரையைப் போட்டு விடுவாயல்லவா...?''

''ஓ...!''

''நண்பா, வெற்றி எனக்கேதான். தீட்டிய இடத்திலேயே பதம் பார்க்கக் கனவு காண்கிறாள் பேதை பார்வதி. எனக்கு வெறி ஏறுகிறது—அது புகழ் வெறி; கலை வெறி! நான் பயில்வித்தேன். அவள் புகழ் பெறட்டும்... ஆட்சேபணம் ஏதும் எனக்குக் கிடையாது.

ஆனாலும், பெண் பிறவிக்கு அகந்தை கூடாதல்லவா? பார்க்கலாம், யாருக்கு வெற்றி என்று...! தமிழ்க்கலைக் கூடம் இன்று இரவு வழங்கப்போகும் தீர்ப்பைக் கண்டு உலகம் மூக்கில் விரலை வைக்கப் போகிறது. அவளுடைய விசிறிகளுக்கு உண்மையான விசிறிகள் தேவைப் படத்தான் போகின்றன... நீலகண்டா, நல்லகாலம், அந்த சிவசக்தி நடனத்தை எனக்கு நீ நினைவுபடுத்தினாய்!''

''ஆமாம்...''

''வெற்றி இந்தப் பார்வதி கொழுநனுக்கேதான்!''

''என்ன பார்வதி கொழுநனா?''

''ஆம்; சிவன் என்று அர்த்தம்!''

''ஓஹோ!''

ஃ ஃ ஃ

''ஆஹா! அற்புதம்!...தாம் தித்தாம், தை தத்தை! வெகு நேர்த்தி!...''

''சிவபிரானும் பார்வதியுமே நேரில் பூலோகத்துக்கு விஜயம் செய்து விட்டார்களா என்ன? ஆஹா! தேவர்கள், நாரதர், கின்னரர்! மயானத் தாண்டவம்!''

''அதோ சிவனுக்கு வெறி மூண்டு விட்டதே?''

''பார்வதியின் பாதங்களிலே எத்தகைய இந்திர ஜாலம்! என்ன குழைவு... ஸ்வரஜதியில்தான் எத்துணை ஜீவன், கற்பனை!''

''தன்னை மறந்த லயம் என்கிறார்களே, இதுதானா? சிவனுக்கும் போட்டி வெறியா? சக்தியைத் தோற்கடிக்கச் செய்யும் சாகசமா? ஆ, குழை நழுவி விட்டதே?''

''சங்கரியின் கண்களிலே ஏன் இந்தக் கலக்கம்? சக்தி தான் பெரிதா?''

"ஆஹா, அதோ, ஆதி கால் தூக்கி ஆடி அந்தக் குழையைப் பாதத்தால் எடுத்துக் காதில் அணிந்து கொள்கிறாரே?"

"சக்தி தோற்று விட்டாள்! அவள் பெண்தானே? அவளால் அப்படி முடியுமா பாவம்?"

"ஐயா ரசிகரே? அதோ பாரும், சிவனுக்குப் போட்டியாக சக்தி காலைத் தூக்கி ஆடிவிட்டாள்... சக்திதான் ஜெயித்தாள். அவள் எங்கள் இனமல்லவா..."

"ஆ..."

"ஐயோ, அக்ரமம்! புராணம் ஏடு திருப்பப்பட்டு விட்டதா?"

"நடனத்திலா?"

"இல்லை நடப்பு உலகத்துக்கு."

"விசித்திரமான புராணக் கற்பனை!"

"அதிசயமான போட்டி!"

"அர்த்தமில்லாத காதல்!"

"அற்புதம்!"

"மோசம்...படுமோசம்!"

ஃ ஃ ஃ

"நீ பெண் அல்ல... பேய்! காளி! இவ்வளவு பெரிய ஜனக் கூட்டத்திலே நீ அந்தப் பயலுக்குப் போட்டியாகக் காலை தூக்கிச் சமமாக நடனம் ஆடிவிட்டாயே? நிருத்ய ஆசிரியரின் மகனான நானா—இந்தச் சோமநாதனா இனி உன்னை ஏறெடுத்துப் பார்ப்பேன்? அது வெறுங்கனவு. சிவபிரானுடன் போட்டியிட்டுத் தோற்ற அந்தக் கல்லழகி—எல்லைச் சக்திகூட உன்னுடைய இந்தத் துணிச்சலைக் கண்டு தலைகவிழ்ந்திருப்பாளே? நீ

பெண்ணா? நீ காளி! மகா துர்க்கை! ஓடு, திருவாலங் காட்டை விட்டுத் தில்லைக்கு ஓடு!''

''ஆண்மையுள்ள ஆணழகரே! நிறுத்துங்கள் உங்கள் சொற்பொழிவை. நான் பெண், அசல் தமிழ்ப் பெண்... உலகம் தெரிந்தவள்தான் நான், அந்தத் தில்லைச் சக்தியா நான், அப்படிக் கால் தூக்கி நடனம் ஆடாமல் இருக்க? நான் பார்வதி அல்லவா? பார்வதி ஒருநாளும் அந்த துரைராஜனுக்குத் தோற்றவள் அல்ல... ஞாபகம் இருக்கட்டும், மிஸ்டர் சோமநாதன், தாங்கள் இனி என்னை ஏறெடுத்துப் பார்க்க வேண்டாம்... கண்களை மூடிக்கொண்டு ஜபம் செய்யுங்கள். நீங்கள் கண்ணை மூடு வதற்குள் எவளாவது ஓர் அபலை வந்து உங்கள் கண் களைத் திறப்பாள்...''

''வார்த்தைகள் அளவுக்கு மிஞ்சிக் கனம்பெறுகின்றன. அப்படியென்றால், நடன நாடகம் என்ன ஆவதாம்? அதன் உயிர்க் கருத்து என்ன ஆவதாம்?''

''அது தூசுக்குச் சமானம். சிவனுக்கு அந்தச் சக்தி தோற்றிருக்கலாம். இந்தப் பார்வதி நடனத்தில் எவனுக் கும் சளைக்கமாட்டாள்; தோற்கமாட்டாள்; என் சபதம், சூளுரை, வெற்றி பெற்று விட்டது. நான் நடன ராணி பார்வதி!''

''இந்தப் பதிதையின் நிழல் பட்டாலே நமக்குப் பாவம்...வாருங்கள் அப்பா!''

''ஓடுங்கள்... இல்லையென்றால், உங்களைச் சபித்து விடுவேன். உள்ளத்தைப் புரிந்து கொள்ளத் திராணியில் லாத—நடனத்தின் ரகசியத்தை அறிந்து கொள்ள மூளை இல்லாத நீங்கள் எங்கள் தமிழ் நாட்டுக்குத் தேவையே யில்லை. ஆனால் ஒன்றை மட்டும் மறந்து விடாதீர்கள்... இந்தப் பார்வதி பண்பை உயிராகக் காக்கும் தமிழ்ப் பெண்.''

''பார்வதி, நடனத்திலே நான் தோற்றேன் என்றே வைத்துக் கொள்... நான் வருத்தப்படமாட்டேன்... ஆனால், நான் போட்டியிலே வெற்றி பெற்றுவிட்டேன். தோற்றவன் வெற்றி பெற்ற கதைதான் இங்கேயும் நடக்கிறது. எப்படியோ, என் நாடகம் பலித்துவிட்டது... ஆமாம்; காதல் போட்டியிலுங்கூட நான்தான் உனக்குச் சமம்?... இந்தத் துரைராஜன் அந்தச் சோமநாதன் அல்லவே?''

''அன்பரே, என்னை எல்லைச் சக்தியாக ஆக்கத் தீர்மானித்து விட்டீர்கள் போலும்! நான் தமிழ்ப் பெண் பார்வதி! நீங்கள் எனக்கு நிழல் தர விரும்பினால், அது என் பூஜாபலன்தான்!'' □

(1966-ல் தமிழக அரசின் முதற் பரிசு பெற்ற 'பூவையின் கதைகள்' தொகுப்பிலிருந்து)

# பிள்ளைக் கனியமுதே கண்ணம்மா

'பிள்ளைக் கனியமுதே—கண்ணம்மா
பேசும் பொற்சித்திரமே!
அள்ளி யணைத்திடவே—என்முன்னே
ஆடிவருந் தேனே!'

—ரேடியோவினின்றும் எழுந்து காற்றில் மிதந்துவந்த இனிய கானம் டாக்டர் சுந்தரத்தின் மனத்தில் இன்ப வலை பின்னியது.

''கண்ணம்மா—ஆம்; பேசும் பொற்சித்திரமேதான்! அன்று அமரகவியின் கனவில் தோன்றி மனத்தைப் பித்தாக்கினாள் அந்தக் கண்ணம்மா. ஆனால் தற்சமயம் இழந்த இன்பத்திற்கு நிரவல் கொடுத்து வாழ்விலே அமுத கீதத்தைப் பொழிகின்றாள் இந்தக் கண்ணம்மா.''

டாக்டரின் மனம் குதூகலத்தில் ஆழ்ந்திருந்தது. அவர் பார்வை எதிரே சென்றது. 'கண்ணம்மா' என்று அழைத்துக்கொண்டே எழுந்து நின்றார். தந்தையின் மனநிலையை அறிந்துகொண்டது போலக் கண்ணம்மா தன் சின்னஞ்சிறு வாயைத் திறந்து நயனங்களை உருட்டி விழித்தாள். அத்தருணம் டாக்டரின் தங்கை

லலிதா குழந்தைக்கு அன்னம் பிசைந்து ஊட்டிக்கொண்டிருந்தாள்.

"அண்ணா, கண்ணம்மா வரவர அதிக சேட்டை பண்ண ஆரம்பிக்கிறாள். இந்த மாதிரி சிரித்துக் கொண்டு விளையாடும் சமயம் பார்த்துச் சாதம் ஊட்டினால்தான் கொஞ்சமேனும் சாப்பிடுகிறாள். மற்ற சமயங்களில் ஒரு பிடி அன்னம்கூடச் சாப்பிட மாட்டேன் என்கிறாள். தப்பித் தவறி அண்ணியின் போட்டோப் படத்தண்டை எடுத்துச் சென்றுவிட்டால் படத்தைப் பார்த்து விரலைக் காட்டி 'அம்மா' எனக் கதற ஆரம்பிக்கிறாள்!"

"பாவம், தாயில்லாக் குழந்தை. இந்த ஒரு வருஷம் பட்டதெல்லாம் கஷ்டமில்லை. ஆனால் இனித்தான் நமக்கெல்லாம் சிரமம் காத்திருக்கிறது. இனிமேல்தான் தவழும் பருவம்; அப்போது பேணிக் காப்பதுதான் ரொம்பவும் சங்கடம். நீயும்கூட இன்னும் சில நாளில் சென்னை போய்விடுவாய். என்னமோ ஈசன் விட்ட வழி."

இவ்விதம் பேசிக்கொண்டிருந்த டாக்டர், தன் தங்கை லலிதாவின் முகத்தை நோக்கினார். அவர் முகத்தில் சஞ்சல ரேகைகள் தடம் பதிந்திருப்பதைக் கண்டதும் அவர் கண்கள் கலங்கின.

"லலிதா, குழந்தை தூங்கி விழுகிறது. கொண்டு போய்ப் படுக்க வை" என்று சொல்லித் திரும்பவும் தன் அறைக்குச் சென்றார் சுந்தரம். அவரது கண்ணோட்டம் மேஜைமீது ஸ்டாண்டில் வைத்திருந்த புகைப்படத்தின் மீது லயித்தது. காஞ்சனா உயிருடனிருந்தபொழுது எடுத்த போட்டோ அது. அவளுடைய மென்மலர் வதனத்தில் அன்புக்குழி மிளிரப் புன்முறுவல் பூத்த வண்ணம் சல்லாப மொழி பல பேசித் தன்னை

ஊக்குவித்து வருவது போன்ற ஒரு பிரமை தட்டியது அவருக்கு.

டாக்டரின் மனம் கடந்ததை நினைத்து வருந்த, எண்ணங்கள் அலையலையாய் மிதந்து கண்வழியே நீர்முத்துக்களைச் சிதறின.

ஃ ஃ ஃ

கல்யாணத்திற்குப் பெண் பார்க்கச் செல்லும் படலத்தின் முதல் அத்தியாய ஆரம்ப தினம்!

காஞ்சனாவின் வீட்டில் மலர் மணம் எங்கும் பரவியிருந்தது. குழல் ஊதி லீலைகள் செய்த மாயக்கண்ணனின் படம் ஒருபுறம்; மற்றொரு பக்கம் கால்மாறி நடம் புரிந்த நடராஜமூர்த்தியின் திருவுருவம்! இரண்டிற்கும் நடுவில் அஹிம்சையின் திருஉரு—தியாகத்தின் சின்னம்—அமரவாழ்வெய்திய அண்ணல் காந்தி மகாத்மாவின் மோகன பிம்பம் தீபஒளியாகப் பரிணமித்தது..

அறையின் மத்தியில் வீற்றிருந்த சுந்தரத்தின் கவனம் நாற்புறமும் சுழன்றோடி நிலைத்தது.

சகலகலாவல்லி போலக் காட்சியளித்தாள் காஞ்சனா, கையில் வீணையுடன். வீணையின் நரம்புகளை மெதுவாக மீட்டி ஜீவநாதத்தைத் தட்டி எழுப்பினாள். அவளது வீணாகானத்தில் லயித்த அவர், அவளை நிமிர்ந்து நோக்கின சமயம், ஒருகணம் அவர் மனம் சஞ்சலித்துவிட்டது.

நாணிக் கண்புதைத்த வண்ணம் எழுந்து சென்றாள் பூத்துக் குலுங்கும் கொடி போன்ற அக்கட்டழகி. ஒய்யாரமான அவள் உருவத்தின் ஒவ்வொரு அங்க அமைப்பிலும் இளமை கொந்தளித்தது.

அவளது முகச் சாயலிலே ஒருவிதக் கவர்ச்சி; அந்த வசீகரத்தில் ஒரு குளுமை! பிடியிலடங்கும் இடை; கொடி

மாதிரித் துவளும் மெல்லுடல். மெல்லிய கீற்றுப் போன்ற இதழ்களிலே முறுவல் ஊறும்போதெல்லாம் குழி விழும் ரோஜா நிறக் கன்னங்கள். நீண்ட புருவத்தின் கீழ இருட் கனலெனத் திகழும் விழிகள்!

அந்த அழகியின் வனப்பில் சுந்தரம் மயங்கியதில் ஆச்சரியமென்ன?

முகூர்த்தம் நிச்சயமாகித் திருமணமும் நடந்தேறியது.

சாயந்தரம் ஆனவுடன் 'காஞ்சனா' என்று தேன் குரலில் அழைத்துக்கொண்டே உள்ளே நுழையும் சமயம் அவளும் தன் பதியின் வரவை எதிர்பார்த்து நின்று கொண்டிருப்பாள். வசந்தத்தின் வரவை எதிர்கொண் டழைக்கும் வானம்பாடியைப் போல. சுந்தரத்தின் இதயம் அப்படியே ஆனந்தப் பூரிப்பிலே ஒருமுறை சிலிர்த்து அடங்கிவிடும். இம்மாதிரி இனிய சந்தர்ப்பங்கள் எத்தனை எத்தனையோ!

ஒருநாள் என்றுமிலாதபடி டாக்டரின் மனத்தில் ஒருவித ஏக்கமும் வருத்தமும் குடிபுகுந்திருந்தன. காரணம் காஞ்சனாவிற்கு பிரசவ தினம் நெருங்க நெருங்க அவள் உடல் தளர்ந்துவிட்டது.

அன்று பிரசவ நாள். சுயஉணர்வு தப்பிவிட்டது காஞ்சனாவிற்கு. பிரசவம் சுகமாகத்தான் ஏற்பட்டது. ஆனால் டாக்டரை ஏமாற்றிவிட்டுப் போய்விட்டாள் அந்தக் காஞ்சனா!

தன் வாழ்வு அஸ்தமித்துவிட்டதென எண்ணிப் பொருமினார். ஆனால் அவ்விதம் நினைவு வரும் சமய மெல்லாம் அவருக்கு ஆறுதல் அளித்து வந்தது அவரது கண்ணம்மாதான்!

டாக்டர் சுந்தரத்திற்கு வேண்டிய உற்றார் உற வினர்கள் அவரை 'இரண்டாம் கல்யாணம்' செய்து கொள்ளும்படி மன்றாடிக் கேட்டுக் கொண்டார்கள். ஆனால் அவர்களது வார்த்தைகளுக்கெல்லாம் சிறிதும் மசியவில்லை டாக்டர். அதேசமயம், பச்சைக் குழந்தையின் பராமரிப்பிற்குப் பெண் உதவி மிகவும் அத்தியாவசியம் என்பதைத் தீர உணராமலுமில்லை.

''காஞ்சனா போல இனிமேல் இந்த ஜன்மத்திலா ஒரு மனைவி எனக்கு வாய்க்கப் போகிறாள்?'' இந்த ஒரு கேள்வியைத்தான் தன்னை நாடி வரும் பந்துக்களிடம் பிரயோகித்து வந்தார். காஞ்சனாவுடன் கழிந்து போன இன்பமயமான அந்நாட்களைத் திரும்பவும் எண்ணிப் பார்க்கும்போதெல்லாம் மறுமணத்தைப் பற்றிய நினைவே அவரது மனதில் தலைகாட்டாமலிருந்தது!

இப்படியே நாட்கள் நகர்ந்தன.

அன்று நடுநிசி. குழந்தையைப் படுக்க வைத்துவிட்டுச் சிறிதுநேரம் புத்தகம் படிப்பதில் மூழ்ந்திருந்தார் சுந்தரம்.

''டாக்டர் ஐயா!''

அந்த அறிமுகமற்ற குரலில் வருத்தத்தின் சாயல் தெரிந்தது.

வெளியே சென்று பார்த்தார். பெரியவர் ஒருவர் படபடக்க ஓடிவந்த களைப்புடன் செய்தியைச் சொன்னார்.

டாக்டர் சுந்தரம் உடனே ஆஸ்பத்திரிக்குக் கிளம்பினார். ஓர் பெண் கட்டிலில் உணர்வு தப்பிப் படுத்திருந்தாள். 'ஸ்டெத்தாஸ்கோப்' கொண்டு பரிசோதிக்கக் குனிந்தார். அப்படியே ஸ்தம்பித்துப் போய்விட்டார்

டாக்டர். ஏனென்றால் அந்தப் பெண், காஞ்சனாவை அப்படியே உருக்கிவைத்தாற்போலக் காணப்பட்டாள்!

அவ்வுருவத்தைக் கண்டதுமுதல் அர்த்தமற்ற ஒருவித அனுதாபம், வாத்சல்யம் ஏனோ அவரையும் அறியாமல் கிளர்ந்தெழுந்தன!

நான்கு நாள் கழித்து அந்த யுவதி ஆஸ்பத்திரியிலிருந்து 'டிஸ்சார்ஜ்' செய்யப்பட்ட சமயம் கண்கள்கலங்க அவளை வழியனுப்பி வைத்தார் அவர்.

ஃ ஃ ஃ

''லலிதா, என்னை உடனே புறப்பட்டு வரும்படி அத்தை இன்று தந்தி கொடுத்திருக்கிறார். கண்ணம்மாவை மிகவும் ஜாக்கிரதையாகக் கவனித்துக்கொள்'' என்று தன் சகோதரியிடம் சொல்லிவிட்டுப் புறப்பட்டார் டாக்டர் சுந்தரம்.

அத்தை வீட்டையடைந்ததும் வரவேற்பு உபசாரம் பலமாக நடந்து முடிந்தது.

''அத்தை, ஒன்றும் விசேஷம் கிடையாதே. தந்தியைக் கண்டதும் என்னவோ ஏதோ என்று பயந்துபோய் விட்டேன்.''

''சுந்தரம், தந்தி கொடுத்திராவிட்டால் இவ்வளவு எளிதில் உன்னை இங்கே வரவழைத்திருக்க முடியுமா? காஞ்சனா இறந்ததற்கப்புறம்தான் நீ இங்கு வரவில்லையே. எத்தனை நாளைக்குத்தான் இப்படிக் கல்யாணம் பண்ணிக் கொள்ளாமல் இருக்கப் போவதாக உத்தேசம், கையில் ஒரு பச்சைக்குழந்தையை வைத்துக்கொண்டு? பெரிய பிள்ளைக்கு அதிகமாக நான் எதைச் சொல்ல இருக்கிறது?''

"அத்தை, நான் என்ன யோசிக்க இருக்கிறது? காஞ்சனா மாதிரி இனிமேல் இந்தப் பிறவியிலா எனக்கு ஒரு பெண் மனைவியாக வாய்க்கப்போகிறாள்? ஊஹும். ஒருக்காலும் இருக்காது. ஏதோ விட்டகுறை, தொட்ட குறை என்பார்களே, அந்தமாதிரிதான் எங்கள் திருமணம் முன்னர் நடந்திருக்கவேண்டும். இல்லாவிட்டால்..."

டாக்டரின் பேச்சிற்குச் சோகம் சுருதி கூட்டிற்று.

"சுந்தரம், தேரடித்தெரு சோமுபிள்ளையின் சொந்தக்காரப் பெண்ணாம், பர்மாவிலிருந்து வந்திருக்கிறாள். முதன் முதலில் அவளைக் கண்டதும் அப்படியே திகைத்துவிட்டேன். அப்படியே உன் பெண்டாட்டி போல ஒரே அச்சு. நல்ல பதவிசு. நீ 'ஊம்' என்றால் போதும். காரியம் முடிந்த மாதிரிதான். மேலும், கைக் குழந்தைக்கு நல்ல ஆதரவாயிற்று. அதன் நன்மையை உத்தேசித்தாகிலும் சம்மதம் கொடு, அப்பா."

இவ்விதம் முகாந்தரங்கள் பலவற்றை எடுத்துக் காட்டி, அதற்கு அத்தாட்சிபோல அப்பெண் போட்டோவையும் அவரிடம் நீட்டினாள்.

படத்தைப் பார்த்ததும் அப்படியே நின்றுவிட்டார் டாக்டர். ஏனென்றால. அதே பெண்தான் சில தினங்களுக்கு முன்பு அவரிடம் வைத்தியம் செய்து கொண்ட யுவதி. தன்னையும் அறியாமல் அந்தப் பெண்மீது உண்டான அன்பின் காரணம் இப்பொழுதுதான் அவருக்குப் புலப்பட்டது.

"அத்தை, இரண்டாம் தாரமாகக் கல்யாணம் செய்து கொள்ள இஷ்டமா என்று கேட்டீர்களா பெண்ணிடம்?"

"எல்லாம் கேட்டாய்விட்டது. இதன்மூலம் ஏழைக் குடும்பத்திற்கும் ரொம்பவும் ஒத்தாசை செய்ததுபோல் இருக்கும்."

"புதியவள் வந்துவிட்டால் அப்புறம் கண்ணம்மாவை நன்றாகப் பேணி வளர்ப்பாள்."...இந்த ஒரே ஆசையுடன் மனத்தைச் சாந்தியுறச் செய்துகொண்டு அவர் தன் அத்தையிடம் விடைபெற்று வீடு வந்தடைந்ததும், அவரது நெஞ்சம் பிளந்துவிடும் போலாய்விட்டது. எங்கும் ஒரே அந்தகாரம்; மோன அமைதி! திடீரென்று அலறல் சத்தம் கேட்கத் திரும்பினார் டாக்டர்.

"அண்ணா, கண்ணம்மா போய்விட்டாள் அண்ணா, இன்று காலையில் குளித்துவிட்டுத் திரும்பும் சமயம் குழந்தை தண்ணீர்த் தொட்டியில் தவறிவிழுந்து இறந்து கிடந்தது, அண்ணா" என்று நினைவிழந்து, நெஞ்சம் விம்மத் தேம்பித் தேம்பி அழுதாள் லலிதா.

தன் குழந்தையை நீர் மல்கும் கண்களுடன் ஏறிட்டு நோக்கினார். கண்ணம்மா ஆனந்தப்பள்ளி கொண்டிருந்தாள். டாக்டர் அழுதார்! புரண்டார். பைத்தியம் பிடித்து விடாதது ஒன்றுதான் பாக்கி. தன் அருமைக் கண்மணிக்காக வாங்கிவந்த பிஸ்கட்டுகள், விளையாட்டுச் சாமான்கள் இவையனைத்தும் சிதறிக்கிடந்தன. அவரது மனம்போல.

என்னதான் வாழ்க்கை வேண்டிக் கிடக்கின்றது? அவரது வாழ்விலே சாந்தி, இன்பம் என்பனவெல்லாம் தாமரை இலையில் ஒளிரும் நீர்த்திவலைகள் தாமா? ஆமாம்; மனிதன் வகுக்கும் திட்டங்களை—கட்டும் மன மாளிகைகளைத் தகர்த்தெறியத்தான் 'விதி' குறுக்கிட்டு விடுகிறதே! விதி! நல்ல விதி!

அதே தினம் டாக்டரிடமிருந்து அவர் அத்தைக்கு 'ரிஜிஸ்தர்' தபால் ஒன்று பறந்து சென்றது.

'அத்தை,

இத்தனை காலம் எந்த ஒரே லட்சியத்திற்காக எனது உயிர் காஞ்சனா இறந்ததையும் பொருட்

படுத்தாமல் என் உடலில் தங்கியிருந்ததோ, எந்த ஒரே குறிக்கோளைக் காப்பாற்ற உங்களது பிடிவாதத்தின் துணைகொண்டு மறுமணம் புரிந்து கொள்ளச் சம்மதித்தேனோ அந்த லட்சியம் சிதைந்துவிட்டது! என் கண்மணி கண்ணம்மா இன்று இறந்துவிட்டாள்! என் கண்ணைச் சீராட்டிப் பேணிப் போஷிக்கத் தானே மறுகல்யாணம் செய்துகொள்ள இருந் தேன். இனி எதற்கு இந்தக் 'கட்டை'க்குக் கல்யாணம்?

பெண் வீட்டில் விஷயத்தைத் தெரியப்படுத் துங்கள். பாவம், ரொம்பவும் ஏழைக்குடும்பம். பெண் தங்கமான குணம். சேற்றில் முளைத்த செந்தாமரை! இத்துடன் அனுப்பியிருக்கும் ரூ. 500 செக்கை மாற்றி, நல்ல மாப்பிள்ளை யாகத் தேடித் தாங்களே நேரில் இருந்து அப் பெண்ணுக்குக் கல்யாணத்திற்கு ஆயத்தம் செய்யுங்கள்! இதுவேதான் என் கடைசி வேண்டுகோள்!

**சுந்தரம்!'**

# பிள்ளைக் கலி

முதல் பிரம்மா பெருமூச்செறிந்தார்.

முதற் பூ மடலவிழ்ந்தது.

முதல் குரல் புறப்பட்டது.

குழந்தை அழுதது; அழுதது; அப்படி அழுதது.

அபாயங்களைத் தன்னுள் அடக்கிக் கிடந்த காடு. கூப்பிடு தொலைவில் ஒரு காட்டாறு. கருக்கல் பொழுது.

புல் தரை; பிறந்த மேனியாய்க் கிடந்தது பச்சை மண். பச்சை ரத்தம் மேனியை வெட்டிப் பாய்ந்தோடத் துடித்துக் கொண்டிருந்தது, குழந்தையின் உடல் துடி துடித்தது. நஞ்சுக் கொடி துவண்டு கிடந்தது. ரத்தத் துளிகள் பல கோடுகளில், பல கோணங்களில் சிந்திக் கிடந்தன.' பன்னீர்த் துளிகள் அந்தக் குருதிப் புனலில் இரண்டறக் கலந்தன.

புள்ளி மான்கள் ஓடிவந்தன. வண்ணப் பறவைகள் நாடி வந்தன. வாயில்லாப் பிராணிகள் வாய் விட்டுப் புலம்பின.

அந்தக் குழவியின் உயிர் ஊசலாடிக் கொண்டிருந்தது. குழந்தைத் தெய்வம் அழுதது; அழுது கொண்டேயிருந்தது.

ஃ ஃ ஃ

'மன்றுளே மாறியாடு மறைச்சிலம்படிகள்' நடுங்கின; 'வென்றுளே புலன் களைந்தார் மெய்யுணருள்ளந் தோறுஞ் சென்றுளே அமுதமூற்றுந் திருவருள்' திகைத்தது; சிவன் சிந்தித்தார்.

'கவுணியர்க்குப் பால் சுரந்த சக்தி' தடுமாறினாள்; 'பங்கயற்கணரிய பரம் பரனுருவே தனக்குரிய படிவமாகி, எண்ணிறந்த சரா சரங்களீன்றுந்தாழாயிற் கொங்கயற் கண் மலர்க் கூந்தல் குமரி பாண்டியன் மகள்' செயலிழந்தாள். சிவசத்தி சிந்தித்தாள்.

''தேவி, பூலோகம் வர வர உருப்படாமல் போய்க் கொண்டிருக்கிறது. பார்த்தாயா, அந்தப் பச்சை மண்ணை? கேட்டாயா, அதன் தீனக்குரலை? 'குவா. குவா' என்று கதறி அழும் அதன் வேதனையிலே, 'தெய்வமே, தெய்வமே!' என்ற எதிரொலி கேட்கிறதே? பாவம்!...படைப்பு புதிர் என்று சொல்லுகிறார்கள் மண்ணிலே. ஆனால், அவர்களே படைப்பைப் புதிராக்கி, அத்துடன் வாழ்க்கையையும் புதிராக்கிக் கொண்டு விடுகிறார்கள். அது மட்டுமா? நீயும் நானும் கூடத்தான் அந்தப் புதிர்ப் பிணைப்பில் இணைக்கப்பட்டுப் பேசப்படுகின்றோம். விந்தைமிகு மக்கள்—மக்களா? மாக்கள்!''

பிறை சூடியின் குரலில் எரிமலை கனன்றது.

''அன்பரே, உங்கள் வாய்மொழி முற்றும் உண்மை. கடந்த பத்து நாழிப் பொழுதாக நான் உறக்கம் கொள்ளவில்லை. முதற்குரல் எதிரொலித்தது—திடுக்கிட்டு விழித்தேன். சிசுவின் வினைப்பயன் அப்படியோ? பாவம், பிறந்த மண்ணில் தத்தளித்துக் கொண்டிருக்கிறது. அதோ, பொழுது புலர்ந்து விட்டது. காட்டு வழி நடப்பவர்கள் ஓடோடி வருகிறார்கள்? குழந்தையைப் பார்க்கிறார்களே! ஆ, என்ன கொடுமை? ஐயோ, அவர்கள் எல்லோரும் போய்விட்டார்களே, மதலையை மறந்து...!

ஒரு சொட்டுக் கண்ணீருக்குக்கூடப் பஞ்சமாகி விட்டதே? சே, பாழ் உலகம்! இதயமிழந்த பாவிகள்!''

இமயவல்லியின் இமை பாவா விழிகளிலே கோபம் கொந்தளித்தது.

''உமையவளே! சினம் தவிர். சிவலோகம் விசித்திர மானது-அது நம் இருவருக்கும் புரியாததல்லவே? குழந்தையைக் கண்டவர்கள் வறிதே சென்றார்களல்லவா? அப்போது, அவர்கள் உதடுகள் உதிர்த்த தீர்ப்பை மறுமுறையும் நினைத்துப்பார்: ''ம்...! யார் பெற்ற குழந்தையோ? நமக்கு எதற்கு இந்த வம்பு? எல்லாம் இதன் தலைவிதிப்படிதானே நடக்கும்?'' என்று சொல்லிப் பயந்தோடி விட்டார்களே! அர்த்தமற்ற, நெஞ்சற்ற வார்த்தைகளின் அநியாயத்தைப் பார்த்தாயா?'' என்று கேள்விக் குறியை எழுப்பினார் மங்கை பாகன்.

''ஆ! நெஞ்சு வெடிக்கக் கதறுகிறதே? பிறந்தது முதல் குமுறிக் குமுறி அழுகிறதே?...தேவா, குழந்தையின் முடிவு என்னாவது?'' என்று கவலையுடன் வினவினாள் மாதா.

''பெற்றவளே குழந்தையைப் பற்றித் துளிகூட அக்கறைப்படாத போது, நீ ஏன் கவலைப்பட வேண்டும், சங்கரி?'' என்று வினயமாகக் கேட்டார் சுடலையாடி.

''மறுபடியும் என்னைப் பரீட்சை செய்ய ஆரம்பித்து விட்டீர்கள், பிரபோ! இந்தக் குழந்தைப் பிரச்னையை முதலில் தீருங்கள். நல்ல தீர்ப்பு நவிலுங்கள்?'' என்று வேண்டிக் கொண்டாள் காமக்கோட்டி.

''ஆகட்டும். நீ வீணே பதட்டப் படாதே!'' ஆறுதல் மொழி தந்தார் பிஞ்ஞகன்.

''நன்றி! ஆனால்?''

''ஐயப்பாடா?''

''அல்ல. ஆனால் அந்தக் குழந்தையின் பெற்றோர்கள்...? ஈரைந்து மாதம் சுமந்து பெற்ற அந்த அன்னை?'' என்று எதிர் வினா விடுக்கலானாள் நாரி.

பிறப்பிலி பெருமூச்செறிந்தார் :

''பூலோகத்தில் காதலுக்குப் புது மாதிரியான பொருள். கலியாணத்துக்கு முன்னும், கலியாணத்துக்குப் பின்னும்கூட 'காதல்' என்ற ஒன்று உதயமாவதே கிடையாது; ஆனால், அவர்கள் வாய் என்னவோ, எல்லாம் உணர்ந்த மாதிரி, எடுத்ததற்கெல்லாம் 'காதல், இன்றேல் சாதல்!' என்ற ஒரே பல்லவியைத்தான் பாடித் தொலைக்கிறது. பூலோகக் காதலை தேவலோகக் காதலாக 'ரசாயன மாற்றம்' செய்வதாக உறுதி சொன்னான் அவன்—ஆமாம்: இந்தக் குழந்தையின் தகப்பன். அவள் பிள்ளைக்கனியின் தாய் உண்மையென்று நம்பினாள். உயிரும் உயிரும் ஒன்றாகின. உடலும் உடலும் 'முதல் இரவு' விழாவைக் கோலாகலமாகக் கொண்டாடின. இருள் சிரித்த அந்தக் காட்டிலே, பூலோக சுவர்க்கத்தைத் தரிசித்தனர் காதலர்கள். ஆனால், காலம் சிரித்தது; ஊர் சிரித்தது. சமூகம் சிரித்தது. கண்கண்ட பூலோக சுவர்க்கமாம் இக்குழந்தையைக் கையால் எடுக்கத் தெம்பின்றி, அவளைப் பரபரவென்று இழுத்துக் கொண்டு ஓடோடி விட்டான் அந்தப் பாவி! தேவலோகத்தில் மலரவேண்டிய பாரிஜாத மலர் வழி தவறிப் பூலோகத்தில் பூத்து விட்டது!'' என்றார் பார்வதி கொழுநன், கண்ணீருடன்.

''ஆதியே! பாரிஜாதம் கருகிவிடும் போலிருக்கிறது. நல்ல முடிவு காட்டுங்கள். துரிதப்படுத்துங்கள்!'' என்று ஆதுரப்பட்டாள் சிவை.

திரிபுரம் எரித்த விரிசடைக் கடவுளுக்குச் சிரிக்கத் தானா தெரியாது......?

ஃ ஃ ஃ

உதயம்.

தெய்வச் சந்நிதியில் தெய்வ கானம் :

சாதிகுலம் பிறப் பிறப்புப் பந்தமுத்தி
அரு உருவத் தன்மை, நாமம்
ஏதுமின்றி எப்பொருட்கும் எவ்விடத்தும்
பிரிவற நின்றியக்கஞ் செய்யும்
சோதியை மாத்தூவெளியை மனதவிழ
நிறைவான துரிய வாழ்வைத்
தீதில் பரமாம் பொருளைத் திருவருளே
நினைவாகச் சிந்தை செய்வோம்!

தெய்வக் குழந்தையின் அழுகையொலி வர வரத் தேய்ந்து கொண்டிருந்தது.

யாரோ இதயமுள்ள ஒரு செம்படவன் வந்தான்; குழந்தையைப் பார்த்தான்; அவனுடைய கண்ணீர்த் துளிகள் பேசும் பொற்சித்திரத்தைக் குளிப்பாட்டின. "குழந்தை! மேலுலகத்துப் பாரிஜாதப் பூ! ஆண்டவனே. உன் மகிமையே மகிமை. எங்கள் பிள்ளைக் கலி தீர்ந்து விட்டது!" என்று ஆனந்தக் குரலைத் திக்கெட்டும் திசை பிரித்துவிட்ட வண்ணம், சேயும் கையுமாகப் பறந்தான்.

ஃ ஃ ஃ

முக்கண்ணி சிரித்தாள்!
முக்கண்ணன் சிரித்தான்!
பாரிஜாதம் சிரித்தது!

ஃ ஃ ஃ

இருட்டு-மை இருட்டு.

வண்ணக் களஞ்சியத்தை வாரியணைத்துக் கொஞ்சி மகிழ்ந்தவாறு வாசலில் அமர்ந்திருந்தான் அந்தச்

செம்படவன். மெய்ம்மறந்திருந்தாள் அவனுடைய மனையாட்டி.

"அண்ணே, அண்ணே! ஓடியா, ஓடியா! பாவம், யாரோ ஒரு பொம்பளை காட்டாத்திலே விழுந்திட்டா. நாங்க படகிலே காப்பாத்தினோம். பொளைக்கிறாளோ, என்னமோ, சங்கிலிக் கருப்பனுக்குத்தான் தெரியும்!"

அந்தப் பெண் மெல்ல மெல்லக் கண் திறந்தாள். கண்ணீர் வெள்ளம் புரண்டோடியது. அவள் கதறினாள்: "கடவுளே! நான் செஞ்ச குற்றத்துக்கா என் குழந்தையை என்கிட்டேயிருந்து பிரிச்சே? என்னை ஆசை காட்டி மோசஞ்செஞ்சவனைக் கொன்னுப்பிட்டு, என் குழந்தைக் காக ஓடோடி வந்தேனே...! பெற்ற வயிறு துடிச்சுச் சாகுதே? ஐயோ, என் ஆருயிர்ச் செல்வமே, இனி உன்னை எப்பிறப்பிலே கண்ணாலே காணப் போறேனோ?... என்னை மன்னிச்சிட மாட்டியா, தாயே? உனக்குத் தாயாகக் கொடுத்து வைக்காத பாவியாகிப்பிட்டேனே? கொலைகாரியாகிப்பிட்டேனே? ஐயோ...!"

அவளது விம்மிய மார்பகத்திலிருந்து பால் வெள்ளம் சுரந்தோடியது.

அவள் கண்கள் மூடிக் கொண்டன.

குழந்தை வீரிட்டு அழுதது!

# கால்படி அரிசி ஆத்மா

"ஆமாங்க, செட்டியாரே! இந்த ஆலமரத்தடிக் கிழவன் சொன்னா சொன்னதுதான்!"

"என்னங்காணும், இப்படி ஒரேயடியாய் விலையை ஓசத்திச் சொல்றீரே?"

"கட்டினாப் பாருங்க; இல்லாட்டி நடையைக் கட்டுங்க, ஐயா!"... தொண்டையைக் கனைத்துக் கொண்டார் கிழவர். குவியல் குவியலாக இருந்த கத்தரிக்காய்—தக்காளிகளை பிள்ளையை வருடுகின்ற பாவனையில் மெல்ல வருடிவிட்டார்.

"தாத்தா, கருகப்பில்லை இருக்குதுங்களாங்காட்டி?" என்று ஒரு சிறுமி கேட்டாள்.

"தாத்தாகிட்டே கிடைக்காத சாமான் சட்டு ஏதாச்சும் உண்டா, ஆத்தா?"

"மெய்தான்."

"எம்புட்டுக்கு வேணும்?"

"மூணு காசுக்குக் குடுப்பீங்களா?"

"ஓ!"

ஐந்து காசைக் கொடுத்த சிறுமி, கருவேப்பிலை கிடைத்த மகிழ்வில், பாக்கிச் சில்லறையைப் பற்றின ஞாபகம் இல்லாது நடந்தாள்.

கிழவர் சுருக்குப் பையிலிருந்து தடவி இரண்டு காசை எடுத்து வைத்துக் கொண்டு தலையை நிமிர்த்தினார். கைகளை முடிந்த மட்டும் ஓசைப்பட தட்டினார். "இந்தாத்தா, ரெண்டு காசு!..." என்று பொக்கை வாயை அகலத் திறந்து, ஓர் அழகான பாசச் சிரிப்பை உதிர்த்த படி, இரண்டு காசு நாணயத்தை, அந் நாணயத்தின் நாணயம் பங்கப் படாத ரீதியில், உரியவளிடம் நீட்டினார்.

தக்காளிக்காகத் தவம் இயற்றி, ஒற்றைக்காலால் நின்று கொண்டிருந்த செட்டியார் இன்னமும் நகரவில்லை.

அறந்தாங்கி—நாகப்பட்டினம் எக்ஸ்பிரஸ் அந்த ஆவணத்தாங்கோட்டைச் சாலையை அசட்டை செய்து விட முடியுமா, என்ன?

கிழவர், மண்டையில் அடித்த உச்சி வெயிலைச் சட்டை செய்யாமல் இடது காதிடுக்கில் ஒளிந்திருந்த பாதி சுருட்டை வாய் ஊற எடுத்து, ஒரே தீக்குச்சியில் சமர்த்தாகப் பற்ற வைத்துப் புகையை இழுத்தார். புகையின் ரசிப்பில் வெகு சுவாரசியமாக ஈடுபட்டிருந்தார் மனிதர். ஏதோ சத்தம் கேட்டது. ஆடொன்று அவரது சோற்றுப் பானையை 'லாவி'க் கொண்டிருந்தது. "இந்த ஊரு நாட்டிலே பணக்காரங்க வூடு அனந்தமா இருக்கே? அங்கிட்டாலே நாடிப் போவேன். இந்தக் கிழடு கதை ஒனக்குத் தெரியாது போலே. ஊருக்குப் புதுசோ?... நான் வடிக்கிறது ஒரு நாளைக்கு ஒரு கடுத்தம். இந்த லச்சணத்திலே, நீயும் வந்துதான் தீரணும்னு அடம் பிடிச்சா, நில்லு, ஒனக்கும் போடுறேன். அல்லாச் சோத்தையும் நான் தின்னுதான் என்ன கண்டேன்?... நாத்த ஒடம்பு மேலுந்தான் நாறித்தொலையுது!" என்று ஒரு 'பாட்டம்' பேசிவிட்டு, தலையில் சுற்றியிருந்த ஹைதர் காலத் துவாலையை நிமிண்டிச் சொறிந்து கொண்டார். சுரும்

பேனும் மண்டையைத் தாண்டிக் கொண்டு வந்திருக்குமோ?—கிழவர் இருந்திருந்தாற் போலத் தனக்குள்ளாக ஒரு சிரிப்புச் சிரித்துக் கொண்டார். ஓர் இமைப்பிலே, அச் சிரிப்பு மறைந்துவிட்டது!

கிழவர்... கிழவர் என்றால் அவருக்கும் பெயரென்று ஒன்று இருக்குமே?

இருக்கும், இருக்கும்!—ஆனால், அந்தப் பெயர் யாருக்குத் தெரியும்;

ஆலமரத்தடிக் கிழவர் என்றால், 'சுற்று வட்டை'யில் ஏகப் பிரசித்தம். கறார்ப் பேர்வழி. எழுபத்திரண்டு வருஷம் தன் ஜீவனைக் காபந்து செய்து கொள்ளப் பழகிவிட்ட அசகாய சூரர் அல்லவா அவர்? மிஸ்டர் எமதர்மராஜனுக்கு 'டேக்கா' கொடுக்கப் பழகிவிட்ட படுசமர்த்தராம் கிழவர்! —பேசிக் கொண்டார்கள்! அந்த ரகசியமும் அவர் வரை ஒரு மர்மம்தான்!

ஃ ஃ ஃ

சிந்தனை வசப்பட்ட நிலையிலே, காய்கறிக் கடையை மறந்து, அந்த ஆட்டை கண் பாவாமல் பார்த்தவர், கண்மூடிக் கண் திறந்த வேளையில். அந்த ஆடு நல்லதனமாக அங்கிருந்து நகர்ந்து விட்டதைக் கண்டு கொண்டார். அவரது இமைகளில் ஈரம் பனித்தது. 'மனுஷங்க பாஷை தெரிஞ்ச வாயில்லாச் சீவன்... பாவம்! வாயுள்ளதாலே இந்த மனுசங்களுக்கு என்ன பிரமாதமாக் கொட்டுதாம்? ம்... எப்படியும் சாண் வயித்தைக் கழுவி மூடிக்கிடத் தெரியும். அம்புட்டுத்தானே!... ம்... அப்பாலே, கடோசீலே, அல்லாம் பிடி சாம்பலாகப் பூட வேண்டியதுதானே?... சே! என்னா சென்மம்டாப்பா இது! பிறவா வரம் வேணும்னு, அனுபவிச்ச புண்ணியவான் யாரோ பாடினார்!...'—சுருட்டு சுட்டுவிட்டது போலும்! உதறினார். சாம்பல் தூள் பறந்தது.

''பெரியவரே! கடைசியா என்ன விலை சொல்லு றீங்க தக்காளிக்கு?'' என்று மீண்டும் கேட்டார் செட்டியார்.

''ஒரே விலை! இப்ப தக்காளி வேணுமா? இல்லே... நான் பசியாறப் போவட்டுமுங்களா?''

''வேணும்... வேணும்... ஒரு அரைக் கால் வீசை தூங்க படிக்க கல்லைப் பார்த்துப் போட்டுக்குங்க... ம்... சரி... சரி. இந்தாங்க பணம். இந்தப் படிக் கல்லுங்களை மாத்திக்கிடுங்க. இல்லாட்டி, எவனாச்சும் வந்துபுடிச்சுடப் போறான், பெரியவரே!''

''அப்படிங்களா? பிடிச்சிக்கிட்டுப் போனாப் போய்த் தொலையட்டுமே!... இந்தப் பதினைஞ்சு மாசப் பொழைப்புக்கு ஏதாச்சும் ஓய்வு கெடைச்சாக்கூட தேவ லாம்தான்!'' என்று அழகாகச் சிரிக்கலானார் காய்கறி வியாபாரி.

திரும்பி வந்த ஆட்டுக்கு ஒரு பூவன் பழம் கிடைத்தது.

ஃ ஃ ஃ

'லொக்... லொக்...!'

ஆலமரத்தடிக் கிழவர் இருமினால், அதில் சுருதி பேதம் இருப்பது சகஜமேயாயினும், பேதத்தைக் கடக்கத் தெரிந்தவர்களுக்குக் கட்டாயமாக அந்த இருமலின் சுருதி யைத் தெரிந்து கொள்ளக் கூடும்.

வியாபாரம் மும்முரமாக நடைபெற்றது.

அந்தி சந்திப் பொழுதல்லவா?

உலை ஏறிவிட்டால், 'வெஞ்ச'னத்துக்கு வழி 'சொல்ல வேண்டாமா?

வழி சொல்லிக் கொண்டிருந்தவர் கிழவர். வேர்வை வழிந்தது. இருந்தும், கந்தல் துவாலையை எடுத்து உதறக் கூட நினைவின்றி, அதை எண் சாண் உடம்பைச் சுற்றிப் போர்த்திக் கொண்டார். அட்டணைக் காலிட்டுக் குந்தி யிருந்தவரை பைசாச் சுருட்டு தேடி வந்தது.

''தாத்தா...''

''வாப்பா, பேராண்டி!''

''மேனி ஓரே முட்டா நடுங்குதே? காயலாவா?''

''என்னமோ, அப்பிடித்தான் படுது!''

''அப்படீன்னா எல்லாத்தையும் தூக்கி ஓங்க ஏதாஸ்தானத்திலே போட்டுப்பிட்டு, பூந்து படுக்கறது தானே?... இவ்வளவு வயசானப்பறமும் இப்பிடிக் கஷ்டப் பட்டு யாருக்குச் சேர்த்து வைக்கப் போறீங்க? இப்பதான் ஓங்க கையிலே ரொம்பச் சேர்ந்திருக்கிறதா ஒரு பேச்சு சதா அடிபட்டுக்கிட்டு இருக்குதே, இந்தச் சாலை நெடுக!''

கிழவர் தனக்கே உரிய மர்மத்துடன் 'கடகட'வென்று சிரித்துக் கொட்டினார். அள்ளத்தான் ஆள் இல்லை, பாவம்!

சிரிப்போடே சொல்கிறார்: ''பேராண்டிக்கில்லே சொல்லுறேன். நான் நித்தம் உழைக்காட்டி, என்னோட சாண் வயித்தை வஞ்சனை செஞ்சிடுறதாய்த்தானே அருத்தம்? ஊர்னா, யாரும், யாரைப் பத்தியும் எப்பவும் எதுவும் பேசிக்கிடுவாங்க. இது சகஜம்தான்! பணம் காசுன்னாக்க, யாருக்குத்தான் ஆசை வராது? நானும் கேவலம் ஒரு மனுசப் படைப்புத்தானே?''

''தாத்தா பேச்சு எப்பவுமே மூடு மந்திரம் கணக்கு தான்!''

இப்போதும் வாடிக்கையான ஒரு சிரிப்புத்தான் வெளிப்பட்டது.

செவ்வாய்ச் சந்தைக்கு வைக்கோல் வண்டிகள் சரம் தொடுத்துச் செல்ல ஆரம்பித்து விட்டன.

பேராண்டி என்ற புதிய சொந்தத்துக்குப் புதிய பாத்தியதை பூண்ட அவ்விளைஞன் தன்னுடைய தாத்தாவுக்கென்று ஒரு சாயா வாங்கி வந்து கொடுத்தான்.

கிழவர் அதை மறுக்க மாட்டார். ஒரு முறை காசு கொடுக்கப் போக, அவன் பிரமாதமாகக் கோபித்துக் கொண்டு விட்டான். "போறப்ப யாரும் எதையும் தூக்கிட்டா போகப் போறோம்? நம்பளைத் தூக்கத் தானே நாலு பேருக்கு வேலை வைப்போம்?" என்று வேதாந்தம் படித்தான். அந்தப் பேச்சின் விதரணை, வயசை மீறியதொரு வாக்காகவே பட்டிருக்க வேண்டும்... வம்யாதிகருக்கு. அதிலிருந்து, அந்தப் பிள்ளையென்றால் அவருக்கு ஒரு பிரியம். "நீங்க எந்த ஊரு? ஒங்க பேர் என்ன? ஒங்க கதை என்ன? இத்தனை வயசுக்கப்புறம் ஏன் இப்படிக் கஷ்ட ஜீவனம் நடத்த வேணும்? உங்களுக்கு பிள்ளைகுட்டி இல்லியா?" என்றெல்லாம் துளைத்தான்.

"நான் அநாதை... அதிலேயும் நாதியத்த ஒரு புறம்போக்கு. இதுக்குப் பெரிசா என்ன கதை வேண்டிக் கிடக்கு, காரணம் வேண்டிக் கிடக்கு?......மூச்சு ஓடுற மட்டுக்கும் ஓடித் தொலையட்டுமே! மூச்சு நின்னுட்டாக்க, நல்ல மனுசங்கன்னு ஈவு இரக்கம் கொண்ட தலைங்க நாலா இந்த நாட்டிலே அத்துப் போயிடும்? அவங்க இந்தச் சனியனைத் தூக்கி எறிஞ்சிட்டுப் போகட்டுமே?" என்று அடைத்துவிடுவார். உடனே "தாயே பராபரி... அங்காளம்மை!"... என்று ஓர் ஆறுதல் கொள்ளத் தவறுவதில்லை.

சாலையிலே ஓர் அப்பனும் மகனும் சண்டை போட்டுக் கொண்டார்கள்.

கிழவர் ஆத்திரத்தோடு எழுந்தார். ''ஏம்ப்பா தம்பி, பெத்த அப்பனையா எதிர்த்துப் பேசி, கைநீட்டப் போறே? போப்பா, விலகி!'' என்று தந்தையையும் மகனையும் விலக்கி விட்டார். ''காலம் மாறிப் போச்சு... நீங்க நடங்க, சேர்வை!'' என்று சமாதானம் செய்தார். சுருக்கம் படிந்து கிடந்த அவர் முகத்தில் வேதனையும் விரக்தியும் நிழலாடின.

ஃ ஃ ஃ

ஜன நடமாட்டம் கம்மிபடத் தொடங்கியது.

''இந்தாருங்காணும், இதுகளை எடுத்துக்கும்... நாளைக்கு இருந்தா, தூக்கி எறியத்தான் வேணும்!'' என்று சொல்லி குணம் கணித்து, குற்றம் கண்டு ஒதுக்கி விடத் துணிந்த காய்கறிகள் சிலவற்றை, பூவத்துக்குடி தேவருக்கு மனமுவந்து யாசகமாக நீட்டினார் அவர். கூழைக் கும்பிடு ஒன்று நியாயமான உண்மை போலக் கிடைத்தது.

ஆதாயம் என்றால், ஆதாயம்தானே?

பாவம், இவரா கருமி?...

என்ன உலகம்?

ஃ ஃ ஃ

''ஆல்மரத்தடிக் கிழவர் போயிட்டாருங்க!''

''ஆங்...!''

கும்பல், வித்தைக்காரனைச் சுற்றிக் கூடுவது மாதிரி சிறுகச் சிறுகக் கூடத் தலைப்பட்டது.

அதோ, வித்தைக்காரன்!—என்ன உறக்கம்... என்ன உறக்கம்!

''ராத்திரி நல்லாயிருந்தாரே, முத்துமலை அம்பலம்?''

''நல்லாத்தான் இருந்தார். போன கிழமையாச்சும் லேசா காயலா இருந்தாரு. நேத்தைக்கு ராவு யாதொண்ணும் இல்லே. வரக் காப்பி குடுத்தான் பேராண்டி. அப்பாலே, வளமைப்படி சாமான் சட்டுகளை உள்ளாற தூக்கியாந்து சரி பார்த்து வச்சிட்டு, சுருக்குப் பையை எண்ணிக் காட்டி எங்கிட்டே ஒப்படைச்சிட்டு, இந்த வெளித் திண்ணையிலேதான் படுத்தாரு. கோழி கூப்பிட, வேம்பாவைச் சூடு பண்ண ஏந்திருச்சேன். அவரு காலை மிதிச்சுப்பிட்டேன். திரும்பிப் பார்த்தேன். ஆளு முண்டலை, முடங்கலை. சம்சயம் தட்டிச்சு. லாந்தரைப் புடிச்சு மூஞ்சியைப் பார்த்தேன். வெறும் கட்டைதான் மிச்சம்...''—முத்துமலைக் கிழவர் கண்ணீரை வழித்து விட்டார்.

''ஆமா, இங்கிட்டு வந்து வெகு தொலைக்குச் சொத்து சேர்த்து வச்சாராமே? அது சங்கதி ஒமக்குத் தீரத் தெரியணுமே?'' என்றார் தேவர்—சன்னாசித் தேவர்.

''அந்தச் சங்கதியை அந்தக் கிழவரைக் கேட்டால் தான் தெரியுமுங்க...'' குரல் நெகிழ்ந்து ஒலித்தது.

''அதெல்லாம் சொல்லித் தெரியிற தாக்கலா? என்ன இருந்தாலும், முத்துமலை அம்பலம் யோகக்காரப் புள்ளி தான்...''

''ஆமா, ஆமா... விரிச்சுப்படுக்கறதுக்கு நிழல் குடுத்தாரில்லே?''

''வெட்டிப் பேச்சு ஏதுக்கு?... பொணத்தைத் தூக்கற துக்கு வழி பண்ணுங்க. ஆளுங்க நாலு பேரைப் பிடிங்க, அம்பலம்...'' என்றார் மணி.

''அல்லாரும் சித்தே பொறுத்திடுங்க உண்மைங்கிறது தெய்வத்துக்குச் சமட்டி. நாமள்ளாம் காளிக்கு அடிமைப் பட்டவங்க. இதை நானும் மறந்திடலே; நீங்களும் மறந் திடாதீங்க; அந்த சன்னாசித் தேவர் ஒரு தாக்கலைத் தூக்கிப் போட்டாரு. ஊர் முழுவதும் அப்படிக்கட்ட நினைச்சிருக்கும். இந்தாப் பாருங்க, இந்தச் சுருக்குப் பை. இதுதான் ராவு அந்தக் கிழவர் கடோசியாக் துடுத்து வச்சது பத்தணாவுக்கு மூணு காசு கொறைச்சல் அம் புட்டுத்தான் பணம் உள்ளார கூடையிலே இருக்கற காய் கறிங்க மிச்சம். மத்தப்படி...மத்தப்படி அவரோட காசு எங்கிட்டே இன்னிய தேதி வரைக்கும் ஒரு தம்பிடி சேர்த்த தில்லை. அவரு கணக்கு வழக்கெல்லாம் இந்த நோட்டிலே தான்...அதை வேணும்னாலும் பார்த்துடுங்க'' என்று ஒரு நோட்டுப் புத்தகத்தை எடுத்துப் போட்டார் அம்பலம்.

அப்போது அந்தக் கணக்கு நோட்டிலிருந்து மக்கிப் போனதொரு பழைய செய்தித்தாள் சிதறி விழுந்தது.

மணி, சிதறி விழுந்த அந்தப் பத்திரிகையை எடுத் தார். பிசிறுகள் உதிரலாயின.

எடுத்த எடுப்பில் ஓர் அதிசயம் வெளிப்பட்டது.

மணி, வாய்விட்டு வாசிக்கலானார்.

''காணவில்லை.

இந்தப் படத்திலுள்ள என் தந்தை தேவிபட்டினம் உயர்திரு மு. காசிநாதக் கங்காணி, என் பேரில் கொண்ட சிறு மனஸ்தாபம் காரணமாக, தம்முடைய சொத்து சுகத்தையெல்லாம் துறந்து. கடந்த இருபத்தேழு மாத மாக எங்கோ கண் காணாத இடத்தில் தலைமறைவாக வைராக்கியத்தோடு இருந்து வருகிறார். ஆட்டுக்குட்டி வளர்க்க வேண்டாமென்று நான் சொன்னேன். அவர்

கேட்கவில்லை. ஆத்திரத்தில் புத்தியில்லாமல், திட்டி விட்டேன்! ரோஷக்காரர் அவர்! யாரிடமும் சொல்லாமல் கொள்ளாமல், வீசின கையும் வெறுங் கையுமாக இரவோடு இரவாக வெளியேறிவிட்டார், என் தெய்வம்! இது வரை தேடாத இடம் இல்லை, போடாத விளம்பரம் கிடையாது. நாங்கள் குடும்பத்தில் பயித்தியம் பிடிக்கும் நிலையில் இருந்து வருகிறோம்!...ஆகவே, இந்தப் புகைப் படத்திலுள்ள பெரியவரை இனம் காணும் புண்ணிய வான் யாராகயிருந்தாலும், உடனே ரகசியமாக கீழுள்ள என் விலாசத்துக்குத் தந்தி கொடுத்து உதவும்படி ரொம்ப வும் பணிவுடன் வேண்டிக் கொள்கிறேன். கோடிப் புண்ணியம் கிடைக்கும்!... அவர்களுக்கு வேண்டும் பணத்தை அள்ளிக் கொடுப்பேன். அங்காளம்மை பேரில் ஆணை இது!...''

கத்தரிக் காட்டுக் கிழவர் உணர்சகி வசப்பட்டுச் செருமலானார்: ''மனுசர் விதியோடே எப்படி எப்படி யெல்லாம் விளையாடிப் பார்த்திருக்கார்?... அட கடவுளே!''

மணி முகத்தைத் துடைத்துக் கொண்டார்.

''மணி! இந்தாங்க, பத்து ரூபாய்த்தான் இருக்கு. சைக்கிள் ஒண்ணு எடுத்துக்கிட்டு அறந்தாங்கிக்குப்போயி, அந்தப் பத்திரிகையிலே கண்டிருக்கிற விலாசத்துக்கு ஒரு 'எம்மசன்டு' தந்தி பேசிட்டு வாங்க. நம்ப கிழவனா ரய்யாவோட மகனை உடனே புறப்பட்டு வரும்படி மட்டும் பேசுங்க...போதும்! பாவம்!'' முத்துமலையின் சாயத் துண்டு ஈரத்தால் கனத்தது!

ஆலமரத்தடிக் கிழவர் எத்துணை மகத்தான ரோஷத் தோடு உறங்கிக் கொண்டேயிருக்கின்றார்!...

உறங்கட்டும்! உறங்கட்டும்!...

எழுப்பி விடாதீர்கள்...!

# திருமதி சிற்றம்பலம்

## 1

இடை நேரத் தூக்கத்தை முடித்துக் கொண்ட கையுடன், கைக்கடிக்காரத்தைப் பார்த்தார் திருவாளர் சிற்றம்பலம்.

மணி மூன்று—பிற்பகல்.

கோடை வெயிலின் வெம்மை குறைந்ததாகத் தோன்றவில்லை. அன்றைய சீதோஷ்ண நிலையின் கதி அப்படி இருக்கக்கூடும்.

மெத்தையைச் சுற்றி வைத்துவிட்டு, மண் கூஜாவைக் கவிந்து நீர் எடுத்து முகத்தைக் கழுவித் துடைத்தார். டவல் உதவியது. கைகால்களை முறை பிசகாமல் நீட்டி நெளித்து முடித்தவுடன், நிலைக் கண்ணாடியின் முன்னே போய நின்றார் அவர். வகிடு ஒய்யாரமாக அமைந்தது. முன்புறப்பகுதியிலே, அங்கொன்றும் இங்கொன்றுமாக நரை முடிகள் சில பல்லை இளித்து அம்பலப்படுத்தின. அக்காட்சியைப் பார்த்தவுடன். அவர் மனம் வெதும்பினார். நெடுமூச்செறிந்தார். மறுகணம், அவர் மனக் குறையை விரட்டினார். கண்ணாடியில் தெரிந்த தம் முடைய அழகிய உடலின் வலுவும் கைகளிலே தென்

பட்ட தசைக் கரணைகளும் அவருக்குப் புதுத் தெளிவை அளித்திருக்க வேண்டும். அதன் விளை பலனாக, சோர்வு அழிந்திருக்க வேண்டும்! முறுக்கு மீசை கறுத்துத் தழைத்துப் பொலிந்தது!...

நடந்து வந்தார். மாடியறையின் முன்பகுதிக் கைப் பிடிச் சுவரைப் பற்றியபடி நின்றார். 'ஜாஸ்' சங்கீதத்தின் ஒலி அசைவின் அலைகள் கீழ்த்தளத்திலே விளையாடிக் கொண்டிருந்தன. அவற்றின் எதிரொலி படியேறி வரத் தப்பவில்லை. குறையத் தலைப்பட்ட சூட்டின் அணைப்பில் மிதந்து வந்தது இளங்காற்று. அண்டியிருந்த வேப்பந்தழைகளின் கைங்கர்யம் அது.

''ஐயா!...''

அழைப்பின் பாசத்தை மட்டும்தான் அவர் அறிவார் என்பதல்ல; அந்தப் பாசத்திற்கு வாய்த்த அவ்வுருவத்தை யும் அறிந்தவரே. உருவத்தை அறிந்தவருக்கு அவ்வுள்ளத் தைத்தானா தெரியாது?

''என்ன ராணி?...''

கேள்வியின் பாசத்தில் அன்பின் பரிவு விடையாகத் தொனிக்கவில்லையா?

''சூப் கொண்டாந்தேனுங்க!''

''ஆல் ரைட்!...''

முகத்தை நிமிர்த்தி அந்தப் பெண்ணைப் பார்த்தார்; நுட்பமான நளினத்துடன் அவள் விளங்கினாள். பணிப் பெண் என்ற தகுதியைப் பாதாளத்தில் தள்ளிவிட்டு, அவள் அழகு உச்சியில் உச்சம் பெற்றிருந்தது.

''சாப்பிடுங்க!...நெஞ்செலும்பு சூப்!''

''ஓகே!...''

சைலாக்காரன் கைப்பட்ட மங்குக் கோப்பை அது. அசூயை மேலிட்டுத்தான் செய்தது—கோப்பையின் பேரில்! என்ன செய்வது?...அருவருப்பை உதறிவிட ஒரு நிமிஷம் வேண்டியிருந்தது. பிறகு கோப்பையை வாங்கினார். அவளுடைய பூங்கரங்களைப் பதனமாகப் பற்றிப் பிடித்த படி, கோப்பையை வாங்கிக் கொண்டார். ராணியை ஒரு முறை பார்த்துக்கொண்டு, சூப்பைக் குடித்தார். சூப்பை மட்டுந்தான் அவர் பருகியிருக்க முடியும். அவளது திவ்யமான 'தேஜஸ்' அவளுடனேயே தங்கிவிட்டிருந்தது.

காலிக் கோப்பையை வாங்கும்போது, அவரது கையைத் தொட்டு வாங்கினாள். ''ஐயாவுக்கு ராத்திரிக்கு என்ன சமையல்?'' என்று கேட்டாள்.

வகைகள் சொல்லப்பட்டன.

விடை பெற்றாள்.

தாம்பரத்தைக் குறி இலக்காக்கிப் பறந்தது மின்சார வண்டி.

விவேகானந்தரின் நூல் தட்டுப்பட்டது. இரண்டொரு தினங்களில் முடித்தாக வேண்டாமா? எடுத்தார். வசமாக நாற்காலியில் அமர்ந்தார். கால்கள் ஆடின. மனம் லயித்தது. பரவசக் கவர்ச்சி இழைந்தது.

> 'கடவுளிடம் நம்பிக்கை அற்றவனை நாத்திகன் என்றன பண்டைய மதங்கள். தன்னிடம் நம்பிக்கை அற்றவனே நாத்திகன் எனப் புதிய மதம் காட்டுகின்றது!...''

அழகிய தத்துவச் சிந்தனைகள் பளிச்சிட்டன.

என்ன தோன்றிற்றோ, எழுந்து உள்ளே சென்றார். பீரோவைத் திறந்தார். டைரியை எடுத்துப் புரட்டினார்.

'ஓஹோ, நாளைக்குத்தான் மணிமாறன் வருகிறான்!'. வேறு பக்கங்கள் ஓடின. வேறு சிந்தனைகள்

ஓடின. சிந்தனைகள் கிளைபரப்பி விரிந்து, அந்த விரிவில் அவரது ஆழ்ந்த சித்தத்தின் அனுபவ முத்திரைகள் பதிந்து விளையாட, அவ்விளையாட்டில் விதியும் கூட்டுச் சேர்ந்து, விளையாட்டின் முடிவையே மாற்றிவிட்டு வினயபூர்வமாக நகைப்புக் காட்ட, அந்நகைப்பிலே காலம் கண்ணீர் சொரிந்து முடிவு சொல்ல, அம்முடிவின் தலையெழுத்திலே இப்போது ஓர் ஆரம்பம் உதயமாகி யிருப்பதைப்போல — உதயமாக இருப்பதைப்போல அவரது உள்ளுணர்வின் சக்தி செப்பியபோது, அவர் மனம் அடங்கி, மகிழ்வின் அமைதி பூத்தது. உள்ளத்தின் உள்ளம் குறிப்புக காட்டியது. 'எஸ்...இன்டீட்!...ஆம்; மனிதன் மனிதனாக — மனிதனாகவேதான் இருக்க வேண்டும்?...அப்படித்தான் இருக்கவும் முடியும்!...''

தாழ்வாரத்தில் நின்று எட்டிப் பார்த்தார் சிற்றம் பலம். பங்களாக்கள் வான வளையத்தை முத்தமிட்டன. தியாகராய நகரிலே பணத்துக்கு முடை இல்லை, எட்டிப் பார்த்தவரின் விழிக் கோணத்தில் 'அம்பாஸடர்' எட்டிப் பார்த்தது. விரைந்து உள்ளே போனார். திரும்புகாலில், புதுக்கருக்குப் பெற்றிருந்தார். ஆடை பாதி, ஆள் பாதி என்பது மெய்! மெய்யில் நிலைத்த உடுப்புகளில் அவர் மாப்பிள்ளை போலத் தோன்றி, மாப்பிள்ளையாக மாடிப்படிகளைக் கடந்தார். ஆஹா! அவரது நடையில் தான் எத்துணை துள்ளல், மிடுக்கு, காம்பீர்யம்!...

டாக்டர் யாரோ உள்ளே நுழையக் கண்டார். மருந்து எப்படி இருக்கும்?...நோய் எப்படியிருக்கும்?...'

கீழ்த்தளத்தில் வந்து நின்றார் அவர்.

உள்ளே பேரப்பிள்ளைகள் ராஜ்யம் நடந்து கொண் டிருந்தது. அந்த ராஜ்யத்திலே நயவஞ்சகச் சீனாக் காரனோ, நாணயமிழந்த பாகிஸ்தான்காரனோ தலை நீட்ட மாட்டான்!...

டாக்டர் திரும்பிவிட்டார்.

இவர் திரும்பி மடங்கினார்.

பெரிதாக்கித் தொங்கவிடப்பட்டிருந்த அந்த அம்மணி யின் படத்தை அண்ணாந்து நோக்கினார் அவர்.

'கண்ணே சாரதா! நீ என்வரை ஒரு தத்துவம் ஆகி விட்டாய்!...ஆகவே, உலகத்தைப்பற்றி நீ கவலை கொள் ளாதே!—ஏனென்றால், உலகம் ஒரு பைத்தியம்!...'

கார் கடைத்தெருவை இலக்கு வைத்தது!

## 2

விதியின் விதிக்கு நிகரான சூட்மத்துடனும் பண்புட னும் கடை வீதி விளங்கியது.

திருவாளர் சிற்றம்பலம் காரிலிருந்து விசையுடன் இறங்கினார். 'விசையுடன் வந்து நின்ற காரல்லவா? அதனால்தான் அவ்வாறு இறங்கியிருக்க வேண்டுமோ?...

அவசரத்தின் துணை எனில், மனிதப்பிண்டத்திற்கு எப்போதுமே ஒரு நாட்டம், ஓர் ஒட்டுறவு!...

சிற்றம்பலம் எபபோதுமே ஆர அமரத்தான் எதையும் செய்வார். இந்நிலை, பிறவிப்பயனல்ல! சுவாமி விவேகானந்தரின் சில தத்துவங்கள் அவருக்குப் பிடித்தன. அதன் பலனான விதிபோல, அவருக்கு இம்மானுடப் பிறவியிலே ஒரு சுவை கனிந்தது. 'அரிது அரிது...மானிட ராய்ப் பிறத்தல் அரிது!' என்ற உண்மைக் கோட் பாட்டின் உள்வட்டமாக அவர் இயங்கி, அல்லது இயக்கப்பட்டு, அச்சுழற்சியின் யந்திரகதியில், அவரே தனக்குத்தானே ஒரு கோட்பாடாகவும் விளங்கினார்.

ஆரோக்கியத்தின் ரகசியமாக—வாழ்வின் சமநிலைத் திட்பமாக அவர் தோன்றினார்.

'இரும்பு போன்ற தசைகளும் எஃகு போன்ற நரம்புகளும், எதனாலும் தடுக்க முடியாத அளவற்ற சக்தியும் வாய்ந்தவர்களே நாட்டின் பாதுகாப்புக்குத் தேவை!' என்ற சுவாமி விவேகாநந்தரின் உண்மைக் கூற்றுகள் அவருள் ஒரு புரட்சியாக உருப்பெற்றது. அப்புரட்சியின் பலனாக, அவரது மேனி உடல் வல்லமை எய்தி, ஆண்மையின் வீர்யம் மிகுந்து விளங்கியது. வறுமை அவருள் செய்த தொண்டினை உதறி விட்டு, அவர் நாட்டுக்குத் தொண்டு இயற்ற முனைந்தார். அம் முனைப்பைப் பின்னுக்கு இழுத்தது தரித்திரம். எனவே, காடுகளுக்குப் போய் தவம் செய்து, இந்த நல்குரவுக்குப் பாடம் போதிக்கத் திட்டமிட்டார். அது தருணம், யதேச்சையாக நிழலுக்கு ஒதுங்கினார். தாகத்திற்கு தண்ணீர் கொடுத்தாள் சாரதா. அவளே அவருக்கு வாழ்வின் நிழலானாள்; வாழ்வின் வளப்பத்துக்கு நீர் ஊற்றும் சீதேவியானாள். நீரின்றிம்நீர் பிரியமாட்டாத பாந்தவ்யம்! பாசம்!

எதிர்பாராத முடிவிலே எதிர்பாராத ஆரம்பம் உதயமானது.

'என் வாழ்வே ஒரு கதையாட்டந்தான் இருக்குது!...

மனைமாட்சியும் நன்மக்கட் பேறும் கிட்டின. அவர் செய்து வந்த பிரார்த்தனைகளின் விளைவு நல்ல பயன் சொல்லி வந்தன.

தடம் என்றால் 'திருப்பம் இருந்துதானே தீர வேண்டும்!'

வந்த திருப்பம் சாரதாவை விழுங்கி விட்டது!...

முழுக்கைச் சட்டையை இழுத்து விட்டுக் கொண்டு குறுக்கு மறித்து நடந்தார். மஸ்லின் வேஷ்டியின் ஒரு

பகுதியை வலக்கை முனையை விரலால் நீவி விட்டபடி நடந்தார்.

அதோ, 'லஸ்' முனை.

'சாரதா ஸில்க் பாலஸ்' என்னும் கடையின் வாசற் படியில் ஏறினார். கல்லாவில் அமர்ந்திருந்த இளைஞன், சிற்றம்பலம் பெற்ற பிள்ளை—சாரதா பெற்ற பிள்ளை. எழுந்தான். அவர் குந்தினார்.

நாகரிகம் சூடு பிடிக்கும் நேரம் அது. பொழுது அணைந்து கொண்டிருந்தது. வெயிலின் சூடு இறங்கி விட்டது.

தேதி காலம்.

பெண்டுகள் ஏறி இறங்கினர்.

ரோக்காக்கள் கிழிக்கப்பட்டன.

ரூபாய்த் தாள்கள் உள் அறையில் பதுங்கின.

ஒருத்தி, கட்டுக்கழுத்தி. கையில் காஞ்சீபுரம் பட்டு வைத்திருந்தாள். வாடாமல்லி நிறத்தில் உடல்... மயில் கழுத்து பார்டர்.

ஒரு நினைவுச் சிதறல்.

லகான் அறுபட்ட குதிரையாக அவர் நெஞ்சு குதித்தது.

மகிழ்வின் குழந்தையாக நின்ற தருணம், மணப்பெண் சாரதாவுக்கு வாங்கியிருந்த புடவையும் இதே அச்சுத் தான். 'என் சாரதாவுக்கு அப்போது இந்தப் புடவையைப் பார்த்ததும் உண்டான சந்தோஷம் இவ்வளவு அவ்வள வல்ல!... ம்!...' புடவையை வாங்கிக்கொண்டு போய் விட் டாள் அந்த அம்மணி. 'சாரதா தன் புடவையை எனக்கு நினைவுச் சின்னமாகக் கொடுத்துவிட்டுப் போய்

விட்டாளே!...' கடிவாளம் மாட்டப்பட்ட புரவியாக அழுதது அவர் மனம்.

கூட்டம் நெரிந்தது.

உள் மனத்தில் கசிவின் ஈரத்தை மனத்தெம்பு துடைத்தது.

ரூபாயை எண்ணிக் கொண்டேயிருந்தான் மணி பாலன். அவன் தலைச்சன். இந்தக் கடைக்கு அவன் பொறுப்பு. அவனது உடம்பு கொஞ்சம் வெளுப்புத் தட்டியிருந்தது. அதுவும்தான் எட்டுப்பிள்ளைகள் வரை ஜாபிதா வளர்ந்து விட்டதே... அயர்வுக்காக காபி வந்தது. குடித்தான். பயந்து பயந்து குடித்தான். காரணம் இதுதான்: ''அப்பாவுக்கு ஸிஸ்டம்னா ஸிஸ்டம் தான்... எதுவுமே திட்டப்படிதான் நடக்கும்... 'விதி என்பது மனத்தில்தான் சங்கற்பம் பெறுகிறது; ஆகவே, நம் மனசையே கண்ணாடியாக்கிக் கொண்டால் விதியை தித்தந்த்தம் நாம் பார்த்துக் கொள்ள முடியும்'னு அப்பா சதா சொல்வாங்க! என்னவோ, அப்பாவே ரொம்பப் பேருக்கு ஒரு புதிராகத்தான் தோணுவார்! எங்களுக்கோ அப்பா எப்பவும் ஓர் அதிசயமாகவே தோணுவார்! அப்பாவை, எழுபத்திரண்டு வயசு வாலிபர்னுதான் எல்லோரும் சொல்லுவாங்க!''

தேவலோகமாய்த் திகழ்ந்தது ஜவுளிக் கூடம்.

சிற்றம்பலத்தின் தோழர்கள் வரவே அவரும் எழுந்து உள்ளே சென்றார், தொடர் நிழல்களுடன். பாரிஸ் அழகிகளின் லீலா விநோதங்களைச் சித்திரித்த படமொன்று புதிய தியேட்டரில் ஓடுகிறதாம். துணை சேர்த்தார்கள். சிற்றம்பலம் ஒப்பவில்லை. ஓய்வு அவருக்கு அருமருந்து.

அப்போது அவருக்கு 'இணைப்பு' கொடுத்துத் தொலைபேசி கூப்பிட்டது.

வேலைக்காரப் பெண் அவரது க்ஷேமலாபம் பற்றி விசாரித்தாள்.

அவள் யார் தெரியுமா?

ராணி...

## 3

ஆன்மீக பலத்தை ஆசனமாக்கி அமர்ந்தபடி நேயம் கலந்த உருவத்தையும் நினைவு கடந்த ஈடுபாட்டையும் பக்தியாக்கிக் கைதொழுது, எதிர்முகமாக நின்ற ஈசனை அழைத்துப் பிரார்த்தித்துக் கொண்டிருந்தார் சிற்றம்பலம் அவர்கள். அப்பிரார்த்தனை ஊனையும் உயிரையும் உருக்கிக் கொண்டிருந்திருக்க வேண்டும். அதனால்தான், கண்ணீர் அப்படிப் பெருகி வழிந்ததோ?

ஆம்; கண்ணீர் இல்லையேல், சிரிப்புக்குரிய பங்கு, மகத்துவம் மனிதனுக்குப் புரியவே புரியாது போலும்!

கண்ணீரின் ஒரு பகுதியை அனுபவித்தவருக்குச் சிரிப்பின் மறுபகுதி தன்னாலேயே கிடைத்தது. நிழலற்றுத் திரிந்தவரே பலருக்கு நிழலானார். அன்று இவருக்கு நிழல் தந்த புண்ணியவதியோ இன்று நிழலுருவம் பெற்று விட்டாள்!

பூசனை முற்றுப் பெற்றது.

அவர் கதவுகளை நன்றாகத் திறந்து விட்டார். பூந்தென்றல் மிதந்தது. கன்னங்களில் உவர்க்கோடிட்டுக் கிடந்த கண்ணீரை அது போக்கியது. அமைதி பூத்திருந்தது, மனத்திடை. விண்ணிடை பூத்திருந்த நட்சத்திரப் பூக்களின் ஒளிச் சுகந்தத்தையும் அவர் அனுபவிக்கத் தெரிந்தவர்.

வழக்கமாக நெளியும் ஓர் ஆவல் உந்தியது. நடந்தார். மாடி ஹாலிலே அலங்கரிக்கப்பட்டிருந்த படங்களை மேலோட்டமாகப் பார்த்துவிட்டு, அப்புறம் அந்த ஒரு போட்டோவை மாத்திரம் எம்பி எடுத்தார்.

சாரதா மரிப்பதற்கு ஒரு மாதம் முன்னம் எடுக்கப்பட்ட படம். அவருடைய குடும்பத்தின் உருவப்படம் அது. மணிபாலன் — மாலதி; மணிநாதன் — வடிவு; சரவணன் — சாந்தி. இப்படி ஒரு 'செட்'. அடுத்து, மணிமாறன். 'ஒண்டிக் கட்டை'!... அதோ, பெண்கள் இருவர்: சாருபாலா, சாருமதி!... இருவரும் அவரவர் புருஷன்மார்களுடன்! அங்கங்கே குழந்தை குட்டிகள் அவரவர் குடும்பத்துடன்... நட்ட நடுவில் சிற்றம்பலம்— சாரதா ஜோடி!

கண்களை மூடிக் கொண்டார் பெரியவர். ஓர் அரைக் கணம் மோன நிலை!

''சாரதம்! நீ பொய் அல்ல; நீதான் நிஜம்... பொய்யாக இருந்த எனக்கு மெய்யின் உருவம் வழங்கிய தேவி நீ...''

திடுதிப்பென்று அவருக்குத் தமது முதல் இரவின் ஞாபகம் சுடர் தட்டியது. மனத்தை என்னவோ செய்தது. சஞ்சலமும் சிரிப்பும கை இணைத்து வலம் வந்தன.

இதயத்தில் அமைதியை வரவழைக்க வேண்டி, அவர் மாடித் தாழ்வாரத்தில் நடந்தார். உடற்பயிற்சிச் சாதனங்கள் கிடந்தன. தன்மயமான கர்வத்திளைப்பில் ஊறினார் அவர். ஆளுயர கண்ணாடி அழைத்தது. போய் நின்றார். நாடகக்காரன் வேடப் பொருத்தத்தைச் சரி பார்த்துக் கொள்ளுவதையொப்ப அவர் பார்த்துக்கொண்டார். 'நான் இனி எந்த வேடம் கட்டப் போகிறேன்?...

ஏன் அப்படி நினைக்க வேண்டும்?' முடிவு என்ற ஒன்றுக்கே அவர் இடம் வைக்க விரும்பார். ஓடும் மட்டும் தேர் ஓட்டட்டும்! உடலும் உள்ளமும் அவர்வரை பாது காப்புப் பொருள்கள்.

கடல் தாண்ட விழைவு பூண்டவர். அதற்காக, கால் வாயைத் தாண்ட கால்கள் பெறாமல் இல்லை!

மணி எட்டு.

கடிகாரம் வந்தது.

ஆம்; அதே ராணி...

வேலைக்காரப் பெண்!

சாப்பிடக் கூப்பிட்டாள்.

சாப்பாடு பரிமாறினாள்.

கீழே கார்ச் சத்தம்.

மூத்தவன் அப்போதுதான் கடையைக் கட்டிவிட்டு வந்திருக்கிறான்.

''பேபிக்கு இருமல் எப்படி இருக்காம்? பார்த்தாயா ராணி?''

''இப்போ பரவாயில்லை. ஏதோ புது மிக்சர் கொடுத்ததாம். குணம்தானா!''

''ம்...''

மோர்ச் சோறு.

எலுமிச்சம்பழ ஊறுகாய் தூவப்பட்டது.

''இன்னும் ஒருபிடி சோறு...''

''ஊஹூம்... உனக்கு இப்படிக் கேட்பது பழக்கம். இன்று நேற்றுப் பழக்கமா? ஒரு வருஷத்துப் பழக்க மாச்சே?... மனிதன் உடம்பை வளர்க்கப்படாது; அதை

வலுப்படுத்தத்தான் வேணும்... நான் கொடுத்த புஸ்தகங்களைப் படித்தாயா?''

''இப்போது சுவாமி விவேகானந்தரின் சிந்தனைகளைப் படிச்சுக்கிட்டிருக்கேன். ஞானத் துறவி பரம்பரையைச் சேர்ந்தவர்னாலும், பெண்களைப் பத்தி ரொம்ப மதிப்பும் அனுதாபமும் பாசமும் வச்சுக்கிட்டே ஒவ்வொரு சொல்லையும் சொல்லியிருக்காங்க!...''

''எஸ்...எஸ்...எனக்கு ரொம்பச் சந்தோஷம்!... நீ சுவாமிஜியை ரொம்பத் தெளிவாகப் புரிஞ்சுகிட்டு வாரதாவே நான் நினைக்கிறேன்!...''

''எல்லாம் உங்களோட பயிற்சி!...''

அவர் சிரித்தார். முத்துப் பற்கள் வெகு நாகரிகமாக அழகு சிந்திக் காட்டின.

அவளுடைய எழிலுக்கு உகந்த அமுதச் சிரிப்பின் காந்தக் கவர்ச்சி மகிமைக்குக் கேட்கவா வேண்டும்?...

ராணி மெல்ல இருமினாள். சிணுங்கல் இருமல்.

சிற்றம்பலம் பதறிப் போனார். உயிர்க் கழுவை யாரோ திருடுவதுபோலத் துடித்தார். ''ராணி, என்னம்மா இது...டாக்டரை அழைக்கட்டா?...எனக்கு வைத்திருக்கிற பாலை நீ குடியம்மா!...கொஞ்சம் மஞ்சள் பொடியைத் தூவிச் சாப்பிடு!...இவ்வளவு சின்ன வயசிலேயே உடம்பை அசட்டை செய்யப் பழகுகிறது தப்பு. ம்... என்னைப் பார்!...வருகிற மாசம் எனக்கு எழுபத்திரண்டாவது வருஷம் பிறந்த நாள் வரப் போகுது!... பாரேன் என்னை...மைனர் மாதிரி!...'' சிரிப்பின் கம்பீரத்தில், இத்தனை தொலைவுக் கற்களைக் கடந்துவிட்ட அயர்வு உள்வாங்கிவிட்டது.

''காலம்பற டாக்டரைப் பார்க்கிறேன்!...'' அவள் நயங்கிச் சொன்னாள், நழுவ எத்தனம் செய்தாள். முடியா

வில்லை. கையில் வைத்திருந்த ஊசியில் நூலிழையைப் பொருத முனைந்தாள்.

"என்ன ராணி?..." ஊசியை வாங்கி வெகுலாகவ மாக நூலிழையை நுழைத்தார் அவர்.

"வந்து ஊஹூம்...ஒண்ணுமில்லே!..."

அவள் மனத்தில் ஏதோ ஒரு செய்தி தொண்டைக் குழியைவிட்டுப் புறப்படத் துடிப்பதை அவர் அனுபவ பூர்வமாக உணர்ந்தார். அவள் மனத்தைத் தூண்டி அறிய விழைந்து, அவளது பூங்கரத்தைப் பற்றி இழுத்து அவளது எழிலார் வதனத்தை நிமிண்டி உயர்த்தி, "என்ன ராணி?" என்று வம்பு பண்ணுகையில், எவ்வித முன்னறிவிப்புமின்றி, அங்கே மூத்த மகன் பிரசன்னமா யிருக்கக் கண்டுங்கூட, தம் கைப்பிடியை விடாமலிருக் கவே, அந்தப் பெண்ணாகவே திமிறிக்கொண்டு விடுதலை பெற்று, பூஞ்சிட்டாகப் பறக்க வேண்டியவள் ஆனாள்!

## 4

ஞானப்பண்டிதனுக்கு ஞானப்பாலைப் பற்றித் துளி யும் தெரியமாட்டாது. அவன் கைக் குழந்தை. அவனுக்குத் தன் அன்னையின் முலைப்பால் பற்றியே அறிவான். பாலமுதம் அருந்திய குதூகலத்திலே தவழ்ந்து விளையாடி னான். படுசுட்டி!...

அப்போதுதான் யோகாசனப் பயிற்சிகளை நிறை வேற்றிவிட்டு, காற்றாடபங்களாவின் 'லான்' பகுதிக்கு வந்தார் சிற்றம்பலம். காலை இளங்காற்று இதமாக வீசியது. மேலை நாட்டு வண்ணப் பூக்கள் வகை பிரித்துச் சிரித்தன. மகிழம் பூக்களின் மணம் எடுப்பாக வீசியது. முழுநேரக் கச்சேரியிலே அனைவரது அமோகமான

பாராட்டுதலையும் பெற்றுவிட்ட ஓர் அபூர்வ ராகம் போல!

குழந்தை முன்புறப் பூங்காவுக்கு வந்துவிட்டது.

வேர்வையை துண்டுகொண்டு ஒற்றியபடி, சிரிப்பின் வழியிலே தடம் ஒற்றி நடந்து, சிரிப்புக்குச் சிரிப்பையே பரிசிலாகக் கொடுத்து, குழலியை எடுத்துத் தோளில் சாய்த்துக் கொண்டார்.

மணிபாலன் 'டீக்'காக உடுத்துக்கொண்டு வந்து நின்றான். தம்பியை அழைத்துவர விமான நிலையத்துக்குப் போகப் போகின்றான்!

சிற்றம்பலம் அங்கிருந்தபடியே ராணியை அலட்டினார். ராணி கவரிமானென ஓடிவந்து மறுகி நின்றாள். மணிபாலனைக் கண்டதும் அவள் மௌனம் அமைந்து நின்றாள். சிற்றம்பலம் தந்த சாவிக்கொத்தைத் திரும்ப அவரிடம் நீட்டியபோது, ஐந்து ரூபாய் நோட்டு ஒன்றையும் நீட்டினாள். அதை அவர் தம் புதல்வனிடம் கொடுத்தார். அவன் புறப்பட வேண்டியவன் ஆனான். புறப்பட்டால் போதும் என்னும் சூழலுக்கு ஆளான கட்டத்தில் இருந்தவனுக்கு விடை கிடைத்தால் போதாதா என்ன?

பேரனை மருமகளிடம் ஒப்படைத்தார். குளியலறைக்குள் பிரவேசித்தார். 'ஹம்மிங்' ஒலி கிளம்பியது. வங்கோடு திகழ உள்ளே இருந்தவரின் கையில் சோப்டப்பாவைத் திணித்துவிட்டு நகர்ந்தாள் ராணி—பணிப் பெண்.

உதயத்தின் கோலம் புள்ளிக் கோலம் இழைக்கத் தொடங்கிவிட்ட பொன்மயமான மாயப் பொழுதல்லவா அது!

பூப்பந்தை விட்டெறிந்து மகிழ்ந்த குழந்தை, அப் பூப்பந்து திரும்பி வந்து தன்னிடமே நிற்பதைக் கண்டு முகம் சுளிக்குமே, அதுபோலத்தான் உள்ளே சந்தோஷத்துடன் நுழைந்து, மீளும் தருணத்தில் 'சுரத்து இல்லாமலும் இருந்தார் சிற்றம்பலம். அதற்காக, எப்போதுமே நீரிலேயே அமிழ்ந்துவிட விழைபவரும் அல்லர். எதிலுமே ஒரு கட்டுப்பாடும் நியமமும் வேண்டுமே அவருக்கு!...

வெகுமதி பெறப்போகும் பாணனின் நிலையில் அவர் மனம் இருந்தது.

மணிமாறன் சற்றைக்கெல்லாம் வந்துவிடுவான்!... அவருககுக் கிடைக்கப்போகும் பரிசில் அவனேதான்!... அச்சுத் தொழில் நுட்பக் கல்விக்காக ஜெர்மனிக்கு அரசாங்கத்தின் சார்பில் சென்றவன் அவன்! அப்பப்பா!... அதற்குள் ஓராண்டு ஓடிவிட்டதா?... 'வழியனுப்பி வைத்த மகனை வரவேற்று ஆரத்தி எடுத்து திருநீறு பூசி வாழ்த்த அன்னை இல்லை!' என்ற நிர்ணயிக்கப்பட்டு விட்ட யதார்த்தத்தின் உண்மையை இதயத்தின் உள்மயமான உணர்வு அறிவித்தபோது, அவர் கலங்கிப் போனார்.

ஈரத்துண்டில் ஈரம் சேர்ந்தது.

மாடியில் அவரது தனி அறையில் நறுவிசான ஒப்பனையுடன் உட்கார்ந்திருந்தார் சிற்றம்பலம். சந்தனப் பொட்டும் ஜவ்வாது பொட்டும் குலுங்கின; மணத்தன. புத்தர் சிலைக்கடியில் அவரது குளிர்சிச்க் கண்ணாடி காட்சிப் பொருளானது.

ராணி வந்தாள்.

காலைச் சிற்றுண்டி வந்தது.

இடியாப்பம், புதினா துகையல். அசல் உருக்கு நெய்.

ருசியில் திளைத்தது நாக்கு.

''இன்னும் கொஞ்சம்...''

''ம்...உன் மாமூல் உபசரணை...நடக்கட்டும்!...'' மெல்லிய நகைப்பொலி அரவம் காட்டியது. ஊஹூம், அரவமன்று!...

மோர் குடித்தார்.

எச்சில் பிளேட்டுடன் அவள் நின்றாள். அன்றிருந்த பாங்கிலேயே இன்றும் ஒரு தடுமாற்றப் பாவனையுடனேயே ராணி நின்றாள்.

அவர் அவளைப் பார்த்தார்.

மதுக்குடம் ஏந்தி நின்ற மணமலராய்ப் பொலிவுற்று நின்றாள் அவள். இனக் கவர்ச்சி குரலெடுத்துப் பாடாத பகுதி இல்லை!...

வசந்தம் புறப்பட்டதா?

தேவமனோஹரி பண் பரப்பியதா?

மனோரஞ்சிதம் மகிழ்ந்ததா?

பூலோக சொர்க்கம் இதுதானோ?...

ஆண்மையின் வீர்யம் கிளர்ந்தெழுந்தது!

அவர் அவளையே பார்த்துக் கொண்டிருந்தார். 'ஈசனே!'

சமன் நிலை கொண்டார்.

''ராணி...'' என்று பரிவுடன் குரல் தந்தார். வேர்வை ஓடியது.

''ஐயா! நான் போய் விடட்டுமா? ஏச்சும் பேச்சும் கூடுதலாப் போயிட்டது... இங்கிருந்து போயிடத்தான் போறேன்! ஆமாம்!''—தேம்பினாள். இதழ்க் கடையில் அழுகை. கண் விளிம்பில் சுடுநீர்.

கண்ணீரைத் துடைத்தார் அவர்.

''மற்றவர்களுக்கு வேறே ஜோலி இல்லே. அதுங்களும் பைத்தியமும் ஒரு ஜாதி! —நீ எதுக்காக என்னை அனாதையா விட்டுப்பிட்டுப் போகணும். நான் உயிரோடு இருக்கிறமட்டும் நீ எதுக்கும் கவலைப்படத் தேவையில்லைன்னு அன்னிக்கே சொன்னதுதானே ராணி!...'' பண்பாட்டில் பிரிவு பேசியது.

ஒருநாள்:

கடல் மல்லைக்கு 'பிக்னிக்' சென்றார். துணை ராணி தான். புதிதாக மணம் புரிந்துகொண்ட இளவட்டத்தை யொத்து அவர் காணப்பட்டார். சதா ராணியின் 'கொசுவத்'தையே சுற்றிச் சுற்றி வந்தார். எந்த ஒரு பேச்சுக்கும் அவர் அவளைத் தொடாமல் பேசுவது கிடையாது.

ஆங்கிலேய இணை ஒன்று அறிமுகம் ஆனது.

''இந்த யுவதிதான் உங்கள் இனிய பாதி போலும்!'' என்று கேட்டார் எட்மண்ட் லூயிஸ். ஆங்கிலேயக் கனவான் அவர்.

''நோ...நோ... ஷி இஸ் மை லேடி ஃப்ரண்ட்!''

ராணி அப்பேச்சை ஆமோதித்தாள். தலையை உலுக்கினாள். கொண்டைப் பூச்சரம் சிலிர்த்தது.

ஆங்கிலத் தம்பதி கை குலுக்கி விடை பெற்றபோதில், பாரதத்தின் மாண்புக்கு ஓர் இலக்குப் புள்ளியாக அமைந்திட்ட மஹாபலிபுரச் சிறப்புகளை வானுயரப் பேசு முன்னே, 'அந்த இளம்பெண் அந்தப் பெரியவரது மகள் தான் என்றே நான் முதலில் கருதினேன்!' என்றுதான் அதிசயப் பேச்சை உதிர்த்தாள்.

''ராணி...''

''ம்...''

''நீ போ... அதோ கார் வந்து விட்டது... நீ போ...''

ராணி படி தாண்டினாள்.

சிற்றம்பலம் கீழே வந்தபோது, அவர் பார்வையில் வழக்கம்போல சாரதாவின் புகைப்படம்தான் முதல் தரிசனம் ஆனது.

## 5

மணிமாறன் வந்து விட்டான்!

நாகரிகத்தின் புது மெருகு வெள்ளோட்டம் வந்தது.

வாழ்க்கைப் பரிசிலைச் செம்மை பாய்ச்சி செலுத்திக் கெலித்தவருக்கு இப்போது கனவின் பரிசிலாக இதோ, மணிமாறன் நிற்கிறான்—பிரத்தியட்ச உண்மையாக! இவன் தொடக்கம் தொட்டுப் படிப்பில் காட்டி வந்த அக்கறை காரணமாக, இவரும் மகன் படிப்பில் அக்கறை செலுத்தலானார். மூத்தவன் வெறும் பட்டம் பெற்றுக் கடையில் ஒட்டிக் கொண்டான். பி. காம். படிப்பு: அமைதியாக இருந்து விட்டான். இரண்டாமவன் இப்படி இல்லை. நெடுஞ்சாலைப் பிரிவு எஞ்சினியர். திருச்சியில் உத்தியோகம். மூன்றாம் புள்ளி சரவணன். எம். பி. பி. எஸ். தஞ்சாவூரில் வ. உ. சி. நகரில் 'ப்ராக்டிஸ்'. கடைக்குட்டி தான் மணிமாறன். ஒன்றிக் கட்டை. பெண்களையும் நல்ல இடம் பார்த்து, நிதி மிக்க இடங்களிலே தான் கட்டிக் கொடுத்திருந்தார். 'மணிமாறனுக்கு வெகு விரைவிலேயே மத்திய அரசாங்கத்தில் பொறுப்பான அலுவல் கிட்டிவிடும். கூடிய சீக்கிரமே அவனுக்கு அவன் இஷ்டப்படி கல்யாணம் காட்சி செய்து விடவேணும்!'

கணம் ஒன்றோ, இரண்டோ! நினைவுகளோ ஆயிரம்! கனவுகளுக்கோ கணக்கு இல்லை!— வாழ்வின் சிக்கலே இதுதான்; சூட்சுமமும் இதுவேதான்!

இதோ, பிள்ளை!

பாசத்திற்குப் பாசம் 'பூப்பலி' செலுத்தியது.

இரண்டாங்கட்டில் வந்தமர்ந்தார் சிற்றம்பலம்.

கையில் மணிமாறன் வைத்திருந்த 'கூலிங்க்ளாஸ்' ஆப்புரவான அந்தம் பெற்று விளங்கிற்று. உடுப்புகள் எடுப்பாக இருந்தன. பெர்லினிலும் ஹெடில்பர்கிலுமாக படித்த நுட்பங்களை விவரித்தான். ரொட்டி டின்கள் சில தலைநீட்டின. குழந்தைகள் தலைநீட்ட அட்டியில்லை... முதல் டின்னைத் திறந்து முதல் ரொட்டியை அப்பாவிடம் மரியாதையுடனும் பாசத்துடனும் நீட்டினான் மணிமாறன்.

அவர் வாங்கிக் கொண்டார், உணர்ச்சிப் பெருக்குடன். 'என் பிள்ளை தருகிறான்... கொடுத்து வாங்குகிற தத்துவம் பெரிய அர்த்தம் கொண்டதல்லவா?'

''இன்னொன்று கொடு!...'' என்று கேட்டார் சிற்றம்பலம்.

அவனோ ஒரு ரொட்டிப் பெட்டியாகவே கொடுத்தான் ''ஆல்ரைட்... மிச்சத்தை எல்லாருக்கும் பகிர்ந்து கொடு...'' என்று சொல்லிக் கொண்டே, ''ராணி!'' என்று குரல் கொடுத்தார்.

ராணி குனிந்த தலைநிமிராமல் வந்தாள். நெற்றித் திலகம் நேர்த்தி.

அவளிடம் பிஸ்கட் டின்னைச் சமர்ப்பித்தார் அவர்

அவள் பதவிசுடன் கை ஏந்திப் பெற்றுக் கொண்டாள்.

"தம்பி, இவள் பெயர் ராணி!... உங்க அம்மா போன துக்கப்புறம் இந்தச் சின்னப் பெண்தான் என்னை கவனிச்சுக்கிட்டு வருது! ம்!"

ராணியைப் பற்றிய அறிமுகத்தைத் தன் தந்தையின் வாய்மொழியாகக் கேட்ட மணிமாறன் மிகவும் அமைதி கொண்டான். 'அப்பா படிச்சது அதிகமில்லாவிட்டாலும் உலகத்தையும் உலகோரையும் படிச்சது ரொம்ப ஜாஸ்தி! ரியலி...ஏ...இன்ட்ரடக்ஷன்! எஸ்... எளிய — இனிய தேவதை போலல்லவா தோன்றுகிறாள் இந்தப் பெண்...' இன்னும் கொஞ்ச நேரம் பார்க்க வேண்டும் போலிருந்தது அவனுக்கு கூடவில்லை.

அவள் போய் விட்டாள்.

மணிமாறனை நோக்கித் தம்முடைய பார்வையை நாட்டிய வேளையில், அவன் தவழ்ந்து சென்ற அழகின் சுவைப்பில் மனம் கிறங்கிப்போனதை 'இனம்' கண்டு கொண்டிருப்பாரோ?

மூத்தவனைக் கடைக்கு ஏவினார்.

கடல் கடந்து வந்தவனை ஓய்வு கொள்ளப் பணித்தார்.

மாலையில் துணிமணி முதலிய பரிசுகளை குடும்பத்தவர்க்குக் கொடுக்க வேண்டுமென்பது அவ்விளைஞனது இட்டம்.

சிற்றம்பலம் மாடியை நாடினார்.

மாலை வந்தது.

மயக்கத்தின் வனப்பும் வந்தது.

தன் வரவு பற்றி அறிவிக்க மணிமாறன் பல்கலைக் கழகக் கட்டடத்துக்குப் போய் மீண்டான்.

பங்களாவில் பெரியவர்கூட இல்லை.

கீழே மூத்த அண்ணி மட்டுமே இருந்தாள்.

மணிமாறனின் கண்கள் சுற்றிச் சூழ தேடின.

ராணி தோட்டப் பகுதியில் நின்றாள். மலர்களின் மலராக நின்றாள். காலையில் ராணியைப் பற்றிய பிரஸ்தாபம் ஏதாகிலும் யார் வாயிலிருந்தாவது வெளி வருமென்றுதான் அவன் எதிர் நோக்கியிருந்தான்!—ஏதும் வரவில்லை. அதற்கான 'ஏதும்' இல்லாமல் இருக்க லாமோ?...

ராணியைச் சந்தித்துப் பேசினால் மனசுக்குத் தெம்பாகவும் பொழுதுபோக்காகவும் இருக்கும் என்றெண்ணினான் மணிமாறன். 'வயதொத்த யுவனும் யுவதியும் மனமொத்த நண்பர்களாகவே பழகி, தங்கள் தங்கள் நேசத்துக்கு ஓர் அர்த்தத்தை உண்டு பண்ணிக் கொள்ளுகிறார்கள். இரண்டு நண்பர்கள் பழகுவதில்லையா அப்படி... இது மேலை நாடுகளிலெ வெகு சாதாரணம்!... இங்கேதான் யுவன்—யுவதி நட்புக்குப் புதுப்பொருள் கற்பிககிறார்கள்! காதலென்றும் கூதலென்றும்!...' அண்ணியை எண்ணினான். அவளது இங்கிதப் பண்பில் நம்பிக்கை வைத்து அவன் நடந்தான்.

அழகே ஒப்பற்ற ஆபரணமாகக் கொண்டு இறங்கினாள் ராணி.

இளமையின் அதீதமான பொலிவே தனக்குக் கிடைத்த ஆடம்பரமான ஒப்பனை என்ற கருவத்துடன் அவள் நின்றாள்.

"ராணி..."

நாணம் காட்டி, நகை காட்டி ஒதுங்கினாள் ராணி.

"பிஸ்கட் நன்றாக இருந்ததா?"

"ஆமாம்!"

"அப்படி உட்காரலாமா?"

"............"

''சும்மா உட்காருங்கள்.''

''ஐயாவுக்குச் சமையல் ஆக வேணும்!''

''பொழுது இருக்கிறது!''

''வேலை ஆக வேண்டாமா? வேலையைப் பார்த்துக் கொண்டா பொழுது ஓடுகிறது...'' கையிலிருந்த ஏடு புரண்டது.

''இது நீங்கள் படிக்கவா?''

''பின்னே?'' கொஞ்சம் சூடாகவே வந்தது பதில்.

விவேகானந்தரின் நூல்.

''ஐயா தந்தது, அவர்கள் பழக்கியது!''

''ஓ...''

அந்தப் புத்தகத்தை வாங்கியபோது, 'அப்பாவுக்கு எல்லாம் தெரியும். ஒழுக்கம், கட்டுப்பாடு போன்ற தார்மீக வரம்புகளுடன் இரக்கம், தயை, அன்பு, பாசம், கருணை போன்ற குணநலன்களும் சீராக வளர்க்கப்பட்ட பெரியவர் அவர். பெரியவர்களுக்கு அவர்களின் தகுதி அடிமனத்தின் வாயிலாக முன்கூட்டியே தெரிந்து விடுமாம்!' என்று சிந்தித்து, பிறகு, வாங்கிய நூலைப் புரட்டினான். எடுத்த எடுப்பில், ''எது எது உண்மை யானதோ, எது எது பரிசுத்தமானதோ, எது எது புனித மானதோ, பெண்மை பெண் இனத்தில் எனப் போற்றப் படுவது எதுவோ, அதற்குப் பெயர் சீதை!'' என்ற உண்மைகள் பிரகடனப்படுத்தப்பட்டவையாக பளிச் சிட்டன.

அவ்வரிகளைப் படித்தபோது, அவன் விழிகள் கலங்கின. அவன் ராணியைப் பார்த்தான்.

''உங்களைப் பற்றி கொஞ்சம் நான் அறியலாமா?' என்று கேட்டான் அவன்.

''கொஞ்சம்தான் சொல்ல வேண்டியது உள்ளது. உங்கள் அப்பாவை பார்க்கும்வரை அனாதையாக இருந்த

அபலை நான். இன்று எனக்கு ஒரு நிழல் இருக்கிறது. நாளை எனக்கு ஒரு வாழ்வு கிட்டிவிடும்!'' தன்னம்பிக்கையின் சுடர் மௌனப் புன்னகை புரிந்தது.

அந்தி வானத்தின் விந்தைகள் சொல்லில் அடங்கி விடுமா?

பூச்செடிகளுக்கு நீர் பாய்ச்ச வந்தான் தோட்டக்காரன்.

''உள்ளே போகலாம்!''

அவன் முன்னே சென்றான்.

அவள் மாடிப்படியில் கால் வைத்த நேரத்தில், அவன் அவளிடம் ஓர் அழகிய பட்டுச் சோளித் துணியைக் கொடுத்தான்.

''வேண்டாம். ஐயா கொடுத்தது நிரம்ப இருக்கு...'' அச்சம் விழி பிதுங்கியது.

''பரவாயில்லை. இதையும் வைத்துக் கொள்ளுங்கள். உங்கள் தன்மையை நான் ரொம்பவும் போற்றுகிறேன்... என் அன்புக்கு ஒரு அடையாளம் இது!''

''அடையாளம் என்ற ஒன்று இருந்துவிட்டால், அப்பால் அது அன்பாக எப்படிங்க இருக்க முடியும்?... பிரதிபலனை எதிர்பார்க்கும் ஒரு உபகாரம் ஆகி விடாதா?''

இருவரும் உரையாடிய சமயம், ''பேஷ்!'' என்ற பேச்சொலி சிரிப்புக் கலந்து கேட்டது.

அங்கே ஸ்ரீமான் சிற்றம்பலம் நிச்சலனமாக நின்றார். ''வாங்கிக்க ராணி!'' என்றார். குரலில் எவ்வித மான மாற்றமும் இல்லை. தெளிந்த நிதானம் பிறழவில்லை.

ராணியின் பூங்கரங்களிலே இப்போது அந்தப் பட்டுத் துணி இருந்தது.

விஞ்ஞானி ஆல்பர்ட் ஐன்ஸ்டின் பிறந்த ஊரான அல்ம் என்னும் நகரில் அம்மேதையின் இல்லத்தைத் தரி சித்துத் திரும்புகையில் வாங்கப்பட்ட இந்தப் பட்டின் நினைவை மணிமாறனால் மறக்க வாய்க்காது.

அதேபோல, அப்பட்டு அண்டிய இடத்தின் இந் நினைவையும் மறக்க மாட்டான்!

## 6

'வாக்கிங்' போய்த் திரும்பினார் 'சாரதா ஸில்க் பாலஸ்' முதலாளி. தெரு விளக்குகள் எரிந்தன. நீராடி னார். நீறு பூசினார். பூஜையை நிறைவுபெறச் செய்தார். மாலைப் பதிப்புச் செய்தித்தாள் வந்திருந்தது. புரட்டி னார். ஐம்பத்துநாலு வயசு சினிமா நடிகர் ஒருவர், தான் பார்க்க சின்னக் குழந்தையாக இருந்தவள் இப்போது தன் னுடன் கதாநாயகியாக நடித்திருப்பதைப் பற்றிப் பிரமாதமாக அளந்திருந்த செய்தியை அளவுகட்டிப் பிரசுரித்திருந்தார்கள்.

சிற்றம்பலம் உள்ளுக்குள்ளே நகைத்துக்கொண்டார். தமிழ் நாட்டிலே எதற்கும் ஒரு ஆச்சரியக் குறிதான்!'

எந்த ஒன்றிற்கும் முற்றுப்புள்ளி இட்டு முடிக்க ஒப்பாதவர் சிற்றம்பலம். 'மனிதனை இயக்கும் ஒரு கருவியே தெய்வமும் வினையும்; ஆகவே எந்த ஒன்றும் இந்த ஒரு முடிவைத்தான் எய்துமென்று முன்னதாகவே நிர்ணயம் செய்துவிட்டு, அதன்பின் தெய்வத்தின் பேரில் பழி போட்டுவிட்டுச் சும்மா இருப்பது தர்மமாகாது' என் கிற கருத்து உடையவர் அவர்.

ஒரு நிகழ்வு:

சாரதாவின் உயிர் தொண்டைக்கும் வாய்க்குமாக இழுத்துக்கொண்டிருந்தது.

சிற்றம்பலம் சின்னப்பிள்ளை மாதிரி விம்மி வெடித்துக் கொண்டிருந்தார். தன் இன்னுயிரின் மறுபாதி அவ்வளவு சுளுவாக—அத்துணை சீக்கிரமாக தன்னிடமிருந்து பிரிந்துவிட அவர் ஒப்பவில்லை. பட்டணத்தில் உள்ள பல பெரிய டாக்டர்களைக் கலந்தார். தெய்வத்தையும் துணைக்கழைத்தார். ஒருவர் சொன்ன ஒரு நூதனக் கண்டுபிடிப்பு மருந்து பயன் தந்தது. என்றோ போய்விடுமென்று எல்லோரும் எதிர்பார்த்த அவ்வுயிர் அதற்கப்புறம் பதினைந்து தினங்கள் 'ஜம்'மென்று உடற் கூட்டில் ஒட்டியிருந்தது. அவளுடன் வாழ்வு நடத்திய நூறுபத்திரண்டு வருஷங்களிலே ஒரு முழு நாள் என்பதாக அவளைவிட்டு அவர் இருந்ததில்லை. அப்படிப்பட்ட நெருக்கத்தின் மகிமையை பின்னும் அனுபவிக்க—உணர மகிழ அவருக்கு மீண்டும் ஒரு பதினைந்து நாட்கள்—அல்ல, பதினைந்து யுகங்கள் கிட்டின. மண்ணுக்கும் விண்ணுமாகக் குதித்துவிட்டார் அவர்.

அடுத்ததாக ஒரு நினைவு சிலும்பியது, செம்மறிக் கடா மாதிரி.

ஞாபகம் வைத்துப் போற்றத்தக்க ஒரு ஞாபகமாக அது உணர்வு காட்டியது. கண்ணீரில் கனத்த கபாலம் இனி இறங்கிவிடலாமா?

'ராணி!'

சாரதா கண்களை மூடிக் கொள்வதற்குக் கச்சிதமாக முதல் நாள் ராணி வந்தாள். ஒரு புதினத்தின் ஓர் அத்தியாயம் முடிந்து மறு அத்தியாயம் ஆரம்பமாகும் கதை.

மனைவியின் உடல் நலம் காரணமாக மனம் நலிந்திருந்த சிற்றம்பலம் கோடம்பாக்கம்வரை இருட்டை

மிதித்துக்கொண்டு நடந்தார். பரந்து அகன்றிருந்த மார்பு மெல்லிய காற்றின் ஸ்பரிச சுகத்தில் லேசாக சுகம் காண முடிந்தது. நோக்கமில்லாத நடை. 'சாரதாவின் நிலை பயமாக இருக்கிறது. அவள் இல்லாமல் நான் எப்படி இனி உயிரோடு இருக்க முடியும்? என்னில் அவளாக இருந்த தெய்வப் பெண் அல்லவா? அவள்!... தெய்வப்பெண்...! தெய்வாம்சம் கூடிய மனைவி! அவள் மாதிரி இனிமேல் என்னை யார் அப்படிக் கவனிச்சுக்கப் போறாங்க?...என்ன கேள்வி இது?...யாராலே அப்படி என்னை அவ்வளவு உரிமையான கவலையோட பராமரிச்சுக்க இயலும்?...இத்தனை வருஷத்துக்கு வாழ்க்கையை நான் கூத்தாக நினைச்சதில்லே! இனிமேல்தான் அப்படி ஆயிடப்போகுது!...வாழ்க்கை என்கிறது வாழ்ந்து ஆக வேண்டுமென்று மனிதனுக்கு விதித்திட்ட ஆண்டவன் கட்டளையா?...ஊஹூம், அப்படி நான் ஒதுக்கிட ஒப்ப மாட்டேன்! வாழ்க்கை என்கிறது வாழ்ந்து தீரவேண்டிய கடமை—மனிதனின் கடன்!...அவ்வளவேதான்! ...ம்... எனக்கும் கடமை இருக்குது! ஆமா...திஸ் ஒன்லி...இஸ்... ட்ரூ!...' வெய்துயிர்ப்பு வெளியேறியது. ஆனால், தன் நிழலை விரட்ட எத்தனிக்கும் பாலகனைப் போன்று ஓர் ஆற்றாமை மட்டும் மிஞ்சியது.

'ஜிம்னாஸ்யம்' ஒன்றின் சொந்தக்காரர் எதிர்ப்பட்டார். அடிநாளைய நட்பு. குசலம் விசாரித்துக் கொண்டனர். அம்மனிதர் தளர்ந்து போயிருந்தார். கைக் கம்பு இல்லையெனில் அவர்பாடு அந்தரம்தான்!

தமிழ் நாட்டின் ஹாலிவுட் பகுதி ஆயிற்றே!—பிரபலமான நடிகர் ஒருவரின் அகால மரணம் பற்றிப் பேசிக் கொண்டார்கள். அரைக்கணம் அதிர்ந்து போனார். 'பெரிய ஸ்டார் ஆனார்...இப்படித்தான் வாழணும் என்கிற ஒரு அடக்கம் இல்லாமல் 'கண்டபடி'

வாழ்ந்துவிட்டுப் போய்விட்டார், பாவம்! மற்றவர்களுக்கு இவர் ஒரு எச்சரிக்கை ஆகிவிட்டார். அந்த வகையில் அவர்பாவம் கழிந்துவிடும்...கழுவாய் கிடைத்துவிடும்!'

இப்போது தம்மைத் தாமே ஒரு முறை நோக்கிக் கொண்டார். தமக்குத்தாமே சிந்தித்துக் கொண்டார். 'கற்பு நிலை என்பது ஆணுக்கும் இருக்க வேண்டும். என் வரை இப்பண்பிலே நான் நீதியுடன் நடந்துவிட்டேன், என் சாரதாதான் என் நீதி!'

திரும்பிக் கொண்டிருந்தார்.

வழியில் வழிமறித்துக் கிடந்தாள் ராணி.

விழியை வழியாக்கிப் பார்த்தார் சிற்றம்பலம்.

பருவத்தின் முதல் வாசலை மிதித்திருந்த நேரத்தில், அவள் ஏன் இப்படி ஆகிவிட்டாள். ஓடிய டாக்ஸியை அழைத்து, ராணியை வீட்டுக்கு அழைத்துச் சென்றார். பரிசோதனைகள் நடந்தன. நஞ்சு சாப்பிட்டிருக்கிறாள் ராணி. அழகின் ராணிக்கு இப்படி ஓர் அவக்கேடு ஏன்?... பொறியைக் கலக்கி விதி விளையாடலாமோ? ஓர் இங்கிதம் வேண்டாமா? இங்கிதமின்றி நடந்துவிட்ட பேய் உலகிலே அவளும் பேயாக மாறிவிட முடியாமல், பேய் உலகிலிருந்து விடுதலை பெற முடிவு கட்டியிருக்கின்றாள்!

எப்படியோ, ராணி மறுபிறவி கொண்டு எழுந்தாள். 'என் பசியையும் என் அழகையும் துஷ்பிரயோகம் செய்தாள் ஒரு அரக்கி. என்னையுமறியாமல் என் மானத்தைப் பறிகொடுத்தேன். என்னை ஏன் காப்பாற்றினீர்கள்?'— அவள் புலம்பினாள். விஷயம் இதுவே. அவள் அழுத பாஷை நீளம்!

வாழ வேண்டுமென்கிற தத்துவத்தின் கடமைப் பண்பாட்டில் அவதாரம் செய்த மனிதப் பிறப்புக்கு, தன் போக்குப்படி சாவதற்கு அனுமதியே கிடையாது என்ற தம் சித்தாந்தத்தை—ஏட்டளவில் எழுதப்பட்ட ஒரு மூதுரையை ஒரு வடிவமாக்கிப் பேசிய தம் கருத்து மொழியை எடுத்தியம்பினார்.

அவளோ விழித்தாள்.

அவரோ அவளுக்கு நம்பிக்கை ஆனார்.

படுத்த படுக்கையில் கிடந்த சாரதாவுக்கு இப்போது நம்பிக்கை ஆகும் பேறு ராணிக்குக் கிடைத்தது. உயிர் ஊசலாடும் கட்டத்தில் சாரதா வேண்டினாள்: ''அம்மா ராணி, உன்னைப் பார்த்தா ஒரு வேலைக்காரியா என்னாலே மதிப்பிட முடியலை. என் பிரியமான புருஷனை உன்கிட்டே ஒப்படைச்சிட்டுத்தான் போறேன். அந்த ஒரு நிம்மதியோடதான் போறேன்!''

சிற்றம்பலம் நிமிர்ந்து குந்தினார்.

கண்கள் பொடித்தன.

''சாரதா!...''

மேசையில் கிடந்த அந்தச் சாமானை எடுத்தார். பேனா வடிவு கொண்டிருந்த அதன் அடிப் பொத்தானை அழுத்தினார். அது ஒரு 'வாக்கிங் ஸ்டிக் ஆக உருக் காட்டிற்று. மணிமாறன் அப்பாவுக்குக் கொடுத்த பரிசு!...

அவர் சிரித்துக் கொண்டார். சிரிப்பும் அழுகையும் அவர் மட்டில் பேதம் காட்டாது. அந்தப் பொருளை தூக்கி வீசிவிட்டு எழுந்தார். எலுமிச்சம்பழ ரசம் கொஞ்சம் அருந்தினால் தேவலாம் போலிருந்தது. 'ராணி!' என்று பெயர் தொண்டைக்குழியில் மிதந்தது.

ஏனோ அழைக்கக் காணோம். கைவிரல் பூ மோதிரத்தை நெருடிவிட்டபடி, புத்தக அலமாரிக்கு நெருங்கினார். மனம் பின்னிக் கிடந்தது. எப்போதுமே அவர் மனம் இத்துணை உளைச்சல் கண்டதில்லை. நெற்றிப் பொட்டு நரம்புகள் முறுக்கேறின. ரத்த நாளங்கள் துடித்தன. எலுமிச்சைச் சாறு பிழிந்து ஒரு மிடறு குடித்தார். பிறகு தீவிரமான சிந்தனைக்குப் பின் ஒரு திட்டம் பெற்றார். 'ஆமாம், அதுவே சரி!'

படிக்கட்டில் இறங்கினார் சிற்றம்பலம். அதன் அடிப் பகுதியில் ராணி நின்று, மெய்சோர்ந்த நிலைப்புடன் கண்ணீர் மாலை தொடுத்துக்கொண்டிருந்தாள், ராணியின் விதி என!...

ராணியின் மரகதச் சேலையைச் சமன்செய்து போர்த்தினார். கலைந்திருந்த முடிகளைச் சீராக்கினார். கண்ணீரைத் துடைத்துவிட்டார். அவருக்கு மீண்டும் அழுகை முட்டியது. அவள் கையில் மணிமாறனின் பரிசுத்துணி காணப்பட்டது.

''ராணி!''

''.........''

''ராணி!...''

''இதை உங்க மகன்கிட்ட நீங்களே குடுத்திடுங்க!...''

''ஏன்?''

''எனக்கு இது வேண்டாம்!''

''அப்படின்னா, நீ அவனை விரும்பவில்லையா?''

''விரும்புறேன்! உங்க மகனாக அவரை விரும்புகிறேன்!''

''ராணி!''

இத்தனை அழுகையையும் இது பரியந்தம் அவள் எந்தக் கிட்டங்கியில் சேமித்து வைத்திருந்தாள்?

'என் புள்ளிபிசகிவிட்டது... இனி நான் என்ன செய்ய வேண்டும்? இப்போது ராணிதான் பேசி ஓய்ந்தாளா?... அப்படியென்றால்... அப்படியென்றால்...?'

தர்மம் அவரை அழைத்ததோ?

மண்டை ஓடு கொதித்தது.

உலகம் பூதாகாரமாக விசுவரூபம் எடுத்து, பேய்க் கணமாக எக்காளமிட்டுச் சிரிக்கத் தொடங்கியது.

கீழே சிதறிக் கிடந்த நூல் விரிந்தது.

''...தன்னிடம் நம்பிக்கை அற்றவனே நாஸ்திகன்...!''

உணர்ச்சிகளை ஆளவல்ல 'சித்து' கைவரப்பெற்றவர் சிற்றம்பலம். 'பாவம், ராணி!'

தர்மம் புன்னகை சிந்தத் தொடங்கிற்று.

## 7

திருவாளர் சிற்றம்பலம் அவர்களுக்கு அன்று பிறந்த நாள் விழா! எழுபத்திரண்டாவது பிறந்த நாள் வைபவம்!'

மாலையில் விசேஷம்!

துயில் கலைந்து எழுந்ததுமே, சிற்றம்பலத்தின் மனம் மப்பும் மந்தாரமும் கலைந்து வெளி வாங்கிய வானமாக இருந்தது. உடற்பயிற்சி, குளியல், பிரார்த்தனை போன்ற நித்தியக் கடன்களையெல்லாம் வழக்கம்போலவே சுறு சுறுப்பாகவே செய்து முடித்துக் கொண்டு தம் அறைக்கு வந்து அமர்ந்தார்.

வழக்கம்போலவே அவருக்கு எல்லா வகையிலுமே துணை நின்றாள் ராணி.

காலைச் சிற்றுண்டி வந்தது.

அவர் அனுபவித்துச் சாப்பிட்டார்.

விக்கல் எடுத்தது.

நீர் கொடுத்தாள்.

குடித்தார்.

புதுச் சொக்காயை அணிந்து கொண்டார் அவர். புதிய ரோஜாப்பூவை நீட்டினாள் அவள். 'எனக்கு ஒரு மானசீகத் தூண்டுகோலாக இருந்தீர்கள். நீங்களும் போய்விட்டீர்கள், நேருஜி!'—பூவைச் செருகிக் கொண்டார்.

கீழே சிற்றம்பலத்தின் பெண்கள் வந்து இறங்கினார்கள். குரல்கள் அம்பலமாயின. மற்றவர்கள் இரவே வந்து சேர்ந்தார்கள்.

''ராணி, ராத்திரி நிம்மதியாகத் தூங்கினாயல்லவா?'' என்று கேட்டார், பெரியவர்.

''ஓ!...'' நளினமுடன் பதிலிறுத்தாள். அவள் மார்பகம் எம்பியது; தணிந்தது. ஆரம்பம், முடிவு என்ற இவ்விரண்டையும் ஒன்றாய் மதித்துத் திரியும் தவப் பெண் போல நிர்மலமாக இருந்தது அவளது பால் வழியும் அரவிந்த முகம்.

அவளை இமை பாவாமல் பார்த்தார்; பார்த்தார்; அப்படிப் பார்த்தார்.

அவர் இமைகள் கசிந்தன.

அவள் ஜரிகை அங்கவஸ்திரத்தை எடுத்துக் கொடுத்தாள்.

எப்போதும் அவள்தான் அவரது கழுத்திலே போட்டு விடுவாள்.

இன்று அப்படிச் செய்யவில்லை.

அவரும் அதைப்பற்றிக் கேட்டுக் கொள்ளவில்லை.

இளநகை வரிக்கோடிட்டது அவருடைய இதழ்க் கரையிலே.

"சாப்பிடு!"

"ம்!"

அவள் புறப்பட முனைந்தாள்.

அவர் மேஜை இழுப்பை வெளியே இழுத்தார்.

மணிமாறன் அன்று ஒருநாள் ராணிக்குத் தந்த அந்தப் பரிசுப் பொருள் இன்னமும் அங்கே மூடி வைக்கப் பட்டிருந்தது. ஒரு புத்தகத்தை எடுத்துக் கொண்டு 'டக்' கென்று மூடிவிட்டார்.

ஏதோ காரியமாக, அங்கு மணிமாறன் வந்தான். ராணியை ஜாடையாகப் பார்த்தபடியே, தந்தையிடம் ஏதோ பேசினான். குடும்பத் தாக்கல், "மரியாதைக்குக் கேட்கிறான் அண்ணா சந்தோஷம்தான், அதுதான் நான் பழக்கிக் கொடுத்த பழக்கம். டின்னரில் இரண்டொரு ஐட்டங்களைக் குறைத்துவிடச் சொல்!...தம்பி! நீ எனக்குக் கொடுத்த அந்த நூதனமான ஊன்றுகோல் பிரமாதம்!...சரி...விண்வெளி யுகமகிமை பற்றி நீ பேச ஆரம்பித்து விடுவாய்...! போ...வேலைகள் நடக்கட்டும். சற்றுப்பொறுத்து நானே கீழே வருகிறேன்!..."

மணிமாறன் போய்விட்டான்.

ராணி தொண்டையைக் கனைத்துக்கொண்டு, "அந்தத் துணியை உங்க பிள்ளையிடம் கொடுக்கலீங் களா?" என்றாள்.

"என் பிள்ளையின் துணியா!" எல்லாம் என் சொத் தல்லவா? எல்லாம் என் சுயார்ஜிதமாக்கும்!..."

அவளுக்கு ஒன்றும் புரியவில்லை. முகம் குழம்பிப் போனது.

"ஒரு பாட்டைக் கேளேன்!..."

"......"

"ராணி!"

''ம்!...''

சிற்றம்பலம் பெரிதாகக் கனைத்துக்கொண்டு, தொண்டையைப் பதனப்படுத்திவிட்டு பிறகு பாடினார்.

''முத்து முகப்படியோ முச்சந்தி வீதியிலே
பத்தாம் இதழ்பரப்பிப் பஞ்சணையின் மேலிருத்தி
அகத்தை யடக்கிநிலை ஆருமில்லா வேளையிலே
குத்து விளக்கேற்றி என் கண்ணம்மா
கோலமிட்டுப் பாரேனோ!''

அழுகணிச் சித்தரின் ஆத்மலயம் பளிச்சிட்டிருக்குமோ?

பாடிவிட்டு அவர் சிரித்தார்.

கேட்டுவிட்டு அவள் சிரித்தாள்.

புத்தகத்தை வெறி பிடித்தவர்போல ஒரே எட்டில் வீசிவிட்டு, அவள் கைகளைப் பற்றத் துடித்து, பிறகு அதே நொடியில் பின் வாங்கிக்கொண்டு, ராணியைக் கூப்பிட்டு, அவளை நேருக்கு நேராக ஒரு கணம், இரண்டு கணம் என்று சில கணப்பொழுதுவரைப் பார்த்திருந்து முடித்து, பிறகு திரும்பவும் பேசஆரம்பித்து, 'ராணி' என அழைத்து, ''உனக்கு நான் முடிவு சொல்ல வேண்டும்! இல்லையா?'' என்று வெள்ளைத்தனமான பான்மையுடன் வினவிவிட்டு, அடுத்த நிமிஷம் அப்படியே மௌனச் சிலையாகி விட்டார்!

ராணி துடிதுடித்தாள்.

''ஐயா!...''

''ராணி!''

''ம்!''

''உனக்கு நான் என் முடிவைச் சொல்லிவிடவேணும். இல்லையா?''

சிற்றம்பலம் தம்மை முழு மனத்துடன் நம்பிய இறுக்கத்துடன், உந்திக் கமலத்தினின்றும் பிறந்த அமுதச் சிரிப்பினை மெள்ள மெள்ள உதட்டுக் கோணங்களிலே உலவ விடலானார்!

## 8

பிறந்த நாள் விழா ஆரம்பமாயிற்று,

பங்களா விழாக் கோலம் பூண்டது.

பஞ்சுமெத்தை இடப்பட்ட நாற்காலியில் திருமிகு. சிற்றம்பலம் அவர்கள் வீற்றிருந்தார், மகாராஜாவுக்கு நேராக!—வருவோர் போவோரின் வணக்கத்தைக் கவரும் சிற ஜெயஸ்தம்பமாக! புத்தாடைகள் அவருக்குப் புது மணம் ஊட்டின. மலர்மாலையின் வாடை உள்வட்டமாக நெறி ஏற்றியது.

அந்தி மயங்கி வந்தது.

பட்டணத்துப் பிரமுகர்கள் பலர் விழாவுக்கு வந்து சிறப்பித்தனர். வந்த பெரிய மனிதர்கள் அனைவரும் வயதில் சின்ன மனிதர்களாகவே இருந்து விட்டார்கள். ஆனபடியால், அவர் யாரிடமிருந்தும் ஆசி பெற பாக்கியம் செய்திருக்கவில்லை. மாறாக, அவரது வாழ்த்துக்களைப் பலர் பெற்று ஏகினர்.

சிற்றம்பலத்தின் இதயத்தின் இதயம் சதா 'சாரதா-சாரதா' என்றே உச்சரித்துக் கொண்டிருந்தது. 'சாரதா, நீ இருந்த இடம் என் நெஞ்சில் உனக்காகவே என்றென்றும் காத்துக் கிடக்கும்!'

இரு பாதிரிமார்கள் வந்தார்கள்.

ஒருவருக்கு இல்லறத்தில் இருக்க அனுமதி.

மற்றவருக்குத் துறவுதான் விதி.

அவரவர் மதச்சார்பு அப்படி!

மணிமாறன் அனைவரையும் வரவேற்றான்.

ஜனாப் முகமது ராவுத்தர் வியாபாரக் கூட்டாளி. அவர் வந்தார். பரிசு டப்பா ஒன்றை ஓர். எடுபிடி சுமந்து வந்தான்.

சிற்றம்பலம் மறுத்தார்.

ஜனாப் கடைசிப் பட்சமாக, சட்டைப் பையிலிருந்து ஒரு சிறந்த 'செண்ட்' சீசாவை எடுத்து, அதை எழுபத்திரண்டு வயசு இளவட்டத்தின் ஜிப்பாவில் நெடுகப் பூசினார். நெடி, நெடிதுயர்ந்து பரவியது.

இசை நிகழ்ச்சியொன்று தொடங்கியது.

அப்போது, ராணி புது உடை திகழ, கூட்டத்தை விலக்கிக்கொண்டு வந்து, சிற்றம்பலத்தை நெருங்கி வந்தாள். அதற்கு, மணிமாறன் நிரம்ப உதவினான்.

வந்த ராணி, சோளியின் உட்புறமிருந்த ஓர் உறையை எடுத்து அதைச் சிற்றம்பலத்தின் கைகளில் பணிவுடன் தொட்டு வைத்தாள். அவரது செந்நிறப் பாதங்களைத் தொட்டு வணங்கினாள்.

சிற்றம்பலத்தின் கையிலிருந்த உறை கழன்றது.

''மதிப்புக்குரிய ஐயா அவர்களுக்கு நீண்ட ஆயுள் தரும்படி எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கிறேன்.

இப்படிக்கு,
**வேலைக்காரி ராணி''**

சிற்றம்பலம் உணர்ச்சி வசப்பட்டார்.

''ராணி!''

''ஐயா!''

அங்கிருந்து பிரிய விடை கேட்டாள் ராணி.

''ஆ!'' என்று மலைத்தார் சிற்றம்பலம்.

''ராணி!...''

''ஐயா!...''

''ராணி, நான் இனி உனக்குச் சொந்தம்!''...

''மெய்யாகவா?...கடவுளே, நான் பாக்யவதி!...''

விழாப் பந்தல் அதிசயக் குறியை முகப்பு வெளியில் பறக்கவிட்டது.

## 9

திருவாளர் சிற்றம்பலம் அவர்கள் ராணியைத் தன் உடைமை ஆக்கிக்கொண்டார் முறைப்படி.

அதன் விளைபலனாகக் குடும்பத்தில் பூத்த பூசல் களுக்குச் சட்டப்படி வழிதேடினார். தான் சம்பாதித்த சொத்துகளில் ஒரு பகுதியை தன் குடும்பத்துக்கு வைத்துக்கொண்டு, மிகுதியைப் பிள்ளைகளுக்கும் பெண் களுக்கும் பாகம் பிரித்துக் கொடுத்தார். ஒவ்வொரு வருக்கும் தனித் தனி வீடு. இந்தப் பங்களாவை இவரே வைத்துக் கொண்டார். அப்பாவின் குணத்தை அறிந்த பிள்ளைகளுக்கும் பெண்களுக்கும் இன்னும் ஒருபடி மேலோக அவரைப் பற்றி அறிந்துகொள்ள ஒரு வாய்ப்பை விதி அமைத்தது.

''இப்போ என்னை என் மக்கள் மட்டுமில்லை, ஊர் உலகமும்கூட ரொம்ப அப்பட்டமாக புரிஞ்சுகிட்டி ருக்கும்!'' என்ற வீரச் சொற்களை முடிவுரையாக்கி மற்றவர்களைக் கதிகலங்கி ஓடச் செய்துவிட்டு அவர் வழக்கம்போல எவ்விதமான சலனமும் இன்றித் தம் முடைய தனியறையில் உட்கார்ந்தார். சாரதாவின் படத்தின் கீழ் நின்று, ''கண்ணே சாரதா! நீ தான் என் வரை உண்மை. மற்றதெல்லாம் பொய். உலகத்தைப் பற்றி நீ செவி சாய்க்காதே. அது ஒரு பைத்தியம்'' என்று சொல்லி நிறுத்தினார்.

அப்புறம் தொடர்ந்து, ''சாரதா! டியர்!...என்னைப் பாதுகாக்க நீ முன்பு என் நிழலாக இயங்கினாய். இப்போது உன் மன விருப்பப்படியே ராணி வந்திருக்கிறாள். அது அவள் கடமையாம். சொல்கிறாள்...உன் மரணப்படுக்கையில், என்னை அவள் கைகளில் நீ ஒப்படைத்துப் போவதாகச் சொன்னாயல்லவா! அந்த ஒரு வாக்கையே வேதவாக்காக மதித்து என்னைத் தன் கைப்பிடியில் அமர்த்திக் கொண்டுவிட்டாள் ராணி...அதிசயமாகத்தான் இருக்கிறது... நேற்றுவரை நானே கனவிலும் நினைத்திராத எதிர்பார்த்திராத ஒரு முடிவு, சாரதா... இது!...நான் நாளை ஒரு கதை ஆகப்போகின்றவன். அவளோ இன்றே ஒரு கதை ஆகிவிட்டாள். சாரதா, நீ இனி நிம்மதியாக இரு. ஏன் தெரியுமா? நான் இப்போது நிம்மதியாக இருக்கிறேன். ஆமாம்! நான் இனி நிம்மதியுடன் இருப்பேன். ஆகவே, நம் ராணியும் இனி நிம்மதியுடன் இருப்பாள்! மாயப் பிறப்பறுக்க வேண்டுவார்கள். எனக்கு அம்முடிவு வேண்டவே வேண்டாம்! நீயும் ராணியும் எனக்கென இருக்கையில், இனி நான் எத்தனை காலம் வேண்டுமென்றாலும், வாழக் கடமைப் பட்டவனாயிற்றே!...'' ஒன்று மட்டும் உண்மை. நம் ராணி இருக்கிறாளே ராணி, அவள்தான் மெய்யான தியாகச் சுடர்! ஆனால் அதிசயம் என்னவென்று கேளேன்...அவள் என்னைத்தான் பெரிய தியாகி என்று புகழ்கிறாள்!... சாரதா!...நீ சொல்...! உனக்குத் தெரியும் என்னை. எப்படியோ ராணியின் ஆசையைப் பூர்த்தி செய்து விட்டேன். ஆமாம்; அட்டியில்லை. நான் மனிதனாக— மனிதனாகவே இருந்துவிட்டேன்!...உனக்குப் புரியாதா என் உள்ளம், பேச்சு?...சாரதா!...நீ தேவதை; இல்லையென்றால், நீ திரும்பிவந்து என்னை ஆட்கொள்வாயா?'' என்று தமக்குத்தாமே நம்பி, அந் நம்புதலையே ஓர் இலட்சியமாகக் கொண்டு, அந்த இலட்சியத்தை வாழ வைத்துவிட்ட அமைதியில் சிந்தை தெளிந்த கனிவுடன் நல்ல மூச்சுவிட்டு, நல்ல சிரிப்பை உதிர்த்தார் அவர்.

அவரது விழிவரம்புத் துளிகளை ராணி துடைத்தாள். அவளது கண்ணீரைத் துடைக்கும் பாக்கியம் அவருக்குக் கிடைத்தது.

நாட்குறிப்பின் அன்றையத் தேதியிட்ட தாளில் சிற்றம்பலம் கீழ்க் கண்டவாறு குறிப்புகளை எழுதியிருந்தார்.

''ஈசனே!...சோதனைகள் இல்லையென்றால் உன் சுயரூபம் தெரியாதா எனக்கு?...எனக்கு நான்தான் எல்லாம். இது முதல் அங்கீகாரம். அப்புறம்தான் நீ!...என் கொள்கையின் பலம் தான் என்னை இத்தனை காலமாகக் கட்டிக் காத்தது. இனி...இனிமேல்...உன் சோதனை என் பேரிலே விளையாடத் தொடங்கிவிடும்!... என் ராணியை நீ அறிவாய். அவள் இருபது வயசுப் பெண். அவளது மங்கல நாணைக் காக்கும் பொறுப்பில் இப்போது உனக்குத்தான் பெரும்பங்கு வந்து விட்டிருக்கிறது!...தெய்வமே! என் ராணிக்கு மாறாத சிரிப்பையும் மாற்ற முடியாத நெஞ்சுரத்தையும் அருள்!...என்னை நீ அறிவாய். எல்லாம் கடந்தவன் நான்; எல்லாம் கொண்டவனும் நான்தான்!''

## 10

உயர்திரு சிற்றம்பலம் தம்பதி எங்கெங்கோ தேன் நிலவுப் பயணம் போய் மீண்டனர். எங்கெல்லாமோ க்ஷேத்திராடனம் போய்த் திரும்பினர்.

ஊர்ப் பத்திரிகைகள் 'அதிசயம்—ஆனால் உண்மை' என்ற பகுதியில் மேற்படி செய்திகளைக் கட்டம் கட்டி வெளியிட்டுப் பணம் சம்பாதித்தன.

அன்று ராணி படுக்கையை விட்டெழுந்ததும், வாந்தி எடுத்தாள்.

அவரோ ரிஸீவரைக் கையில் எடுத்தார்.

டாக்டரோ சர்க்கரைத் துகளை கையில் எடுத்தார்.

சிற்றம்பலத்தின் வரிசைப் பற்கள் வெகு துல்லியமாகப் பளிச்சிட்டன.

பூஞ்சிட்டுகள் குறுக்கு மறித்துப் பறந்தன.

தொழு கடன்பொழுது.

அவர் மனம்விட்டு, வாய்விட்டுப் பாடினார்; நினைவில் குதித்த ஏதோ ஒரு திருவாசகப் பாடல்; பாடினார்:

''மாறிநின் றென்னை மயக்கிடும் வஞ்சப்
புலனைந்தின் வழியடைத்தமுதே
யூறி நின்றென்னுளெழு பரஞ்சோதி
யுள்ளவாகாணவந் தருளாய்;
தேறலின்றெளிவே சிவபெருமானே,
திருப்பெருந்துறையுறை சிவனே,
யீறிலாப்பதங்களி யாவையுங் கடந்த
இன்பமே யென் னுடையன்பே!''

அந்த நேரத்தில் :

திருமதி சிற்றம்பலம் தன்னுடைய நாட்குறிப்பில் அன்றையத் தேதியைப் புரட்டி இதயம் தோய்ந்த நல்லுணர்வின் நன்றிப் பெருமிதத்துடன் எழுதலானாள்:

''சமுதாயத் தீவினைகளுக்குப் பலியான பெண்களுக்குக் கைகொடுக்க அன்று ஒரு மகாத்மா வாழ்ந்தார். இன்று ஒரு சிற்றம்பலம் அவர்கள் எனக்குக் கிடைத்திருக்கிறார். என் கனவைச் செயற்படுத்தி நனவாக்க, அவர் தியாக மனிதரானார். எனக்கு நிழலான அவர், இப்போது என்னையும் நிழலாக்கிப் பெருமைப் படுத்திவிட்டார்!

மனிதன் கடவுளாக வாழவேண்டுமென்று எழுதிப் பேசி, உபதேசம் செய்துவிட்டு, இறுதியில் திரைமறைவிலே கேவல்மான—அற்பத்தனமான—கேடுகெட்ட மிருகமாக வாழ்ந்து போலிக் கூத்து ஆடி அடங்குகிற மாயப் பிரபஞ்சத்திலே என் சிற்றம்பலம் அவர்கள் ஒரு புரட்சி மனிதர். அவர் வாழ்வு எப்போதும் அவர் கைகளிலே

தான்! மனிதன் மனிதனாக—மனிதனாகவே வாழக் கடமைப்பட்டவன் என்ற சித்தாந்தத்தில் —நியதியில் பற்றுக்கொண்டு, அதன் பிடிப்பில் தம்மைத் தாமே நம்பி, அந் நம்பிக்கையையே காலத்திற்குக் கொடுத்த பதிலாக்கிவிட்டு, இப்போது அவரே ஓர் உதாரணம் ஆகி, எனக்கு உத்தாரணம் அளித்தார். நான் கொடுத்து வைத்தவள். அதனால் அவரை நான் எடுத்துக் கொண்டேன்!

''என் பெண்மைக்கு ஒரு பொருள் கிடைத்து விட்டது. எனக்குப் பூரணத்துவம் கிட்டி விட்டது. அவருடன் இந்த ஒரு சில நாட்களாக நான் வாழ்ந்த — வாழ்ந்துவரும் சொர்க்க வாழ்வே என்வரை கோடானுகோடி யுகதர்மங்களாக என்னுள் நிரந்தரச் சத்தியமாகி நிழலாடும்! மனிதாபிமானத்துக்கு ஒரு தர்மமும், நன்றிக் கடனுக்கு ஒரு கடிதமும் கிடைத்துவிட்டன, உலகத்துக்கு! அந்த உலகத்தைப் பற்றி எனககு இனி அக்கறை ஏது?

''ஆம்; எனக்கு வழங்கப்பட்டுள்ள 'காப்'பும், என்னை அணைத்து என்னுள் வளர்ந்து வரும் நிழலும் எனக்குப் பொருளாகி பொருள் ஆன அந்த மகத்தான சக்தியும்தான் எனக்கு விதி, வினை, தெய்வம், உலகம் எல்லாம்!...... ஆமாம்!...... இதுவே யதார்த்தமான உண்மை!''

காற்று பாங்குடன் வீசிற்று.

பேனாவை மூடி விட்டாள் திருமதி சிற்றம்பலம். கண்களையும் இதயத்தையும் அவளால் அப்படி மூடிவிட முடியவில்லை. தவித்தாள். சூன்யத்தின் அண்டப் பெரு வெளியில் மாயையின் ரூபமாக அவளது பூங்கரங்கள் ஓங்கிக் குவிந்தன. பூந்தாளையின் இனிப்பும் ஈரமும் நாக்கில் ஊறத் தொடங்கின!...

பாவம், 'விதி' விழித்துக்கொண்டிருந்தது!...

''ஆம்; 'விதி' விழித்துக் கொண்டுதான் இருந்தது.

# பிட்டுக்கு மண்

ஸ்ரீமந் ஆனந்த நடராஜ மூர்த்திக்கு நவராத்திரி வந்துவிட்டதென்றால், கூத்தும் கொண்டாட்டமுமே! நவராத்திரியின்போது, அந்த ஒன்பது நாட்களிலும் நாளைக்கோர் அலங்காரமும் வேளைக்கோர் ஆராதனையுமாக ஏற்பான் அவன். அவன் 'கால் மாறிக் குனித்தவன்' அல்லவா? ஆண்டவனின் மகிழ்ச்சி வெள்ளம் அந்தக் கோயில் மடத்தில் ஆனந்த வெள்ளமாகத் திரை எழுப்பி, நுரை எழுப்பிப் படர்ந்து பரவும்; பரவி ஓடும்.

ஆண்டவனுக்குக் குதூகலமென்றால், ஆளப்பட்ட ஊருக்கும் ஊர் மக்களுக்கும் அந்தக் குதூகலத்தில் பங்கு இருப்பது இயல்புதான். ஆகவே, நவராத்திரித் தருணத்தில் பூவைமாநகர் விழாக்கோலம் ஏற்கும்.

இந்தப் பூவைமாநகரிலே 'பசை' மிக்கது செட்டித் தெரு. ஊரோடு ஊராகப் பசையாக ஒட்டிக்கொண்டது இது. இங்கே செட்டிமார்கள் ஒரே இனம். ஆனால் அவர்களுக்குள் 'புரப்' பிரிவுகள் மட்டும் பல உண்டு. இவற்றுள், 'ஆதியான் செட்டியார் புர'த்தவர்களுக்குக் குடிக்காணியாட்சிப் பாத்தியதை கொண்டது இந்த நடராஜர் மடம். ஆதியில் மடமாகக் கூத்தப்பிரானின் படத்தை மட்டிலுமே கொண்டு விளங்கியது. இப்போது கோயிலாகி விட்டது. நியமப்படி பூசனைகள் தூபதீபம ஏற்று நடக்கும்.

இத்தகைய பரம்பரை, வழிபாட்டில் நவராத்திரிக் காப்புக் கட்டும், கடைசி நாளன்று நிகழும் வெள்ளி ரதப் பவனியும் எடுப்புமிக்கவை. முதலும் இறுதியுமான இவ் விரு நிகழ்ச்சிகளுங்கூடக் கோயிலை ஆடிமை கொண்டவர் களுக்கே உரிமை பூண்டிருந்தன. ஏனைய விழாக்கள், பண்டைய மரபுப்பிரகாரம் ஆளுக்கொரு மண்டபப் படியாக உபயம் ஆகும்.

பின், கூத்தன் கூத்தாடக் கேட்பானேன்?

ஃ ஃ ஃ

விடிந்தால், மகாளய அமாவாசை. புண்ணியகாலம். நவராத்திரி விழா ஆரம்பமாகிவிடும். துதியை திதி, உத்தரட்டாதி நட்சத்திரம் கூடிய சித்தயோகம் சிம்ம லக்கினத்தில் அம்பலக் கூத்தனுக்குக் காப்புக் கட்டி விடு வார்கள். கொலு ஏறி விடுவான் ஆண்டவன்; மகர் நோன்பு முடிய நவராத்திரி கொண்டாட்டந்தான்!

ஓதுவாருக்கு இனிமேல் நிற்க நிலைக்க நேரம் இருக்காதுதான். இரவு முழுவதும் விழாச் சம்பந்தமான அலுவல்கள் சரியாக இருக்கும். நவராத்திரி நாட்களின் அவதாரங்களுக்கான அலங்காரப் பொருள்கள், அணி மணிகள், பட்டுடைகள், வெள்ளித் தீபவரிசைகள் முதலானவற்றைக் கிட்டங்கியில் உள்ள இருப்புப் பெட்ட கத்தினின்றும் பிரித்தெடுக்க வேண்டும். கல்யாணம் காட்சிமாதிரி தெய்வ காரியங்களிலுங்கூட வேலைகள் சுற்றிச் சுற்றி வரும்; இயல்புதான்.

அந்திப் பொன்னொளி. சிந்தூரக் கனவாகி இயற்கை யின் புதிர்மயக்கம் கொண்ட சூனியப் பெருவெளியில் சித்து விளையாடிக் கொண்டிருக்கிறது.

கைப்பிடியில் சிக்கெனப் பற்றியிருந்த காகிதச் சீட்டுக் களை மேலும் ஒரு தடவை உன்னிப்பாகப் பார்வை யிட்டார். ''அப்பனே! நடராஜப் பெருமானே!'' என்று பாசமும் பக்தியும் உருகி வழியத் தமக்குள், தமக்குத்தாமே முணுமுணுத்துக் கொண்டார். கழுத்தில் இழைந்து

கிடந்த ருத்திராட்ச மாலையை நெருடிவிட்ட வாக்கில் எதிர்ப்புறத்தில் பார்வையை ஓடவிட்டார் அவர்.

ரங்கன் ஓடி வந்தான். எதற்கெடுத்தாலும் அவனுக்கு ஓட்டந்தான். மடத்தின் காவலாளி என்றால், பின் சாமானியமா? "ஐயா, மடத்து அடிமைக்காரங்களும் மண்டபப்படிக்காரங்களும் கோயில் பிராகாரப் பந்த லிலே வந்து கூடியிருக்காங்க. உங்களுக்கோசரம் எல்லாரும் காத்துக்கிட்டிருக்காங்க" என்று தகவல் தகவல் கொடுத்தான் அவன்.

"ஓ, அப்படியா?"

"ஆமாங்க!"

"சாடாப் பேர்களும் வந்தாச்சா?"

"ஓ!"

இனம்புரிந்த தவிப்பும் இனம் புரியாத கலக்கமும் ஆண்டு நிற்க, "அம்பலவாணன் செட்டியாரும் வந்துட் டாராப்பா?" என்று கேட்டார் ஓதுவார்.

ரங்கன் கைகளை அகல விரித்தவாறு, "ஊகூம்; இல்லீங்களே! அவர் மட்டுந்தான் பாக்கி!" என்று தாழ் குரலில் விடை சொன்னான்.

'தெய்வமே?'

ஃ ஃ ஃ

புரட்டாசிக் கெடுவில் வாடைக்குப் பஞ்சம் இருக் குமோ? இருக்கலாமோ?

ஓதுவார் பற்றறுத்த துறவியைப் போலே மயில்கண் துவாலை மார்புக்குக் குறுக்கு வசத்தில் புரள, நெற்றிப் பட்டைகளும் தாமுமாகக் கைப்புறம் படிந்த காகிதக் கற்றைகளோடு நடை ஒற்றிவந்தார்.

"வாங்க ஐயா! ஐயா வாங்க?"

உலகம் பலவிதம் என்கிற சித்தாந்தத்துக்குச் சாட்சியம் அளிக்க இப்போது ஒலி பிரிந்து குரல் ஈந்த சத்தபேதங்களே போதும்.

''ஆமா!'' என்று சொல்லித் தலையை உலுக்கி, கும்பிட்ட கரங்களுக்குப் பதில் கும்பிடு கொடுத்துக் கொண்டே விரிப்பில் சம்மணம் கோலி அமரலானார் ஓதுவார். ஓதுவாரென்றால், சுந்தரமூர்த்தி ஓதுவார் எனப் பொருள்.

''ஐயாவோட பூர்வாங்க அலுவலெல்லாம் கைகூடி முடிஞ்சிருக்கும்னு நினைக்கிறோமுங்களே.''

சொன்னவர் 'தீனாருனா': அதாவது திருவம்பலம் செட்டியார்; பல் போனாலும் சொல் போகாத பழுத்த பழம்.

''வாஸ்தவந்தான். என் கடன் பூராவும் மாமூல் பிரகாரம் முடிஞ்சாச்சு!'' மென்மைத் தன்மை நிரக்கக் கூறினார் ஓதுவார்.

''ஐயா, மண்டபப்படிக்கான முறிச்சீட்டுக்களையும் சாமான் சிட்டங்களையும் உடையவங்ககிட்டே சேர்ப்பிச்சுக் கையொப்பம் வாங்கிக்கிடுங்க. விடிஞ்சானதும், சாமியைக் கொலு ஏற்றதுக்குண்டான காரியங்களைக் கவனிக்கலாம்!'' என்றார் பாகவதர் கிராப் விடலை. பேச்சில் சிக்கிரி கலந்த காப்பித்தூள் மணத்தது. காப்பித் தூள், சிக்கிரி விகிதாசார ரகசியமா? மூச்! அது சிதம்பர ரகசியம்!''

''ஆகட்டும்!'' என்கிறார் ஓதுவார்.

சம்மணக் கோலத்தை மாற்றி உட்கார்ந்த ஓதுவார், கைவசம் அடங்கியிருந்த உரிமைச் சீட்டு வகைகளைக் கண்குவித்துப் படிக்கலானார். முதல் முறை படித்தாயிற்று. மறு தரம் வரிசைப்படுத்தி வாசித்துக்கொண்டு வந்தவர், அடுத்து வந்த சீட்டுத்தாளைக் கையில் தனியே எடுத்து வைத்துக் கொண்டார். ''நவராத்திரி அஞ்சாவது நாள் மண்டபப்படி நம்மள் சோவன்னா மானா அம்பலவாணன் செட்டியாரோடது'' என்று சொல்லி, தொடர்ந்த சொற்களைத் தொடர் சேர்க்க வாய்க்காமல் நிறுத்தினார் ஓதுவார்.

"ஆமா; அதுச்கென்ன, ஐயா?"

"அதுக்கு ஒண்ணுமில்லீங்க. ஆனா, அந்தப் 'பிட்டுக்கு மண்' மண்டபப்படியை நடத்தறது யாரின்னுதான் நான் யோசிக்கிறேனுங்க!"

"பிட்டுக்கு மண் மண்டபப்படியை நடத்தப் பாத்தியம் கொண்ட அம்பலவாணன் செட்டியார் இருக்காரல்லவா?"

"புள்ளி இருந்திருந்தால், இந்தப் பிரச்னை ஏன் இப்படிக் கிளம்பப் போகுது? நீங்க பட்டணமே கதின்னு ஆகிட்டவங்க. உங்களுக்குக் கதையே தெரியாது போலிருக்குது, தம்பி!"

"என்ன நடந்திச்சு அவுகளுககு?"

"என்ன நடக்கக் கூடாதாதோ, அத்தனையும் நடந்திருச்சுது!"

"ஆமா தம்பி, எனக்குங்கூட மறந்து போயிட்டுது. அம்பலவாணன் செட்டியார் நம்ப மண்ணைத் துறந்து போய்ப் பத்து மாசத்துக்கு நெருங்கப் போகுது!"

"அட கடவுளே!"

"கடவுள் என்ன செய்வார், பாவம்!"

ஓதுவார் இடைமறித்தார்: "பாவ புண்ணியத்தோட ஐந்தொகைக் கணக்கைப்பற்றி வெறும் மனுஷங்களான நமககுப் பேசுறதுக்கு அருகதை இல்லை. ஆனா இந்த ஊர்ச் செட்டிமார்களுக்குள்ளாற, அம்பலவாணன் செட்டியார் ஒரு தனிப் புள்ளியாய்த்தான் இருந்துக்கிட்டு வந்தார். என் அநுபவத்திலே என்னோட மனசறிஞ்ச உண்மையான தாக்கல் இது. அந்தக் காலத்திலே, பர்மாப் பணம் ஆட்டம் போட்ட சங்கதியும் தெரியும். இடை நடுவாந்தரத்திலே இந்த ஊரே நொடிச்சு அந்தரத்திலே நின்ன கதையும் தெரியும்; இப்போ காபித்தூள், தூள் பறந்துக்கிட்டு இருக்கக்கூடிய இந்த ஊர்நடப்பும் எனக்குப் புரியும். ஆனா, அம்பலவாணன் செட்டியார் இப்படிப்பட்ட விதிக்கெல்லாம் விலகி, ஒரு விலககாகவே

இருந்தார். கொடிகட்டி வாழ்ந்தவர் அவர். கொடி அறுந்தால் என்ன செய்கிறது? பூர்வஜன்ம வினைப்பயன்; அந்தப் புண்ணியவான் தம் பெண்டாட்டியை இழந்தார்; வாரிசு இல்லாத ஆளுக்குச் சொத்துப் பத்து எதுக்குன்னு ஆண்டவன் நினைச்சிட்டானோ என்னவோ? பழகின சிநேகிதருக்கோசரம் இரக்கப்பட்டு, பிராமணாள் காபிக் கிளப்பை விலை கொடுத்து வாங்கி அறந்தாங்கியிலே நடத்தினார். உண்டானபோது கோடானு கோடின்னு சொல்லுவாங்க, இல்லையா? அது மாதிரி அவரைச் சுற்றிச் சுற்றி வந்து சாப்பிட்டவங்களும், நயவஞ்சனையாலே ஏய்ச்சவங்களும் ஒரு குறைச்சலும் இல்லாமல்தான் இன்னிக்கு இருக்கிறாங்க. ஆனா, அவருக்குத்தான் நஷ்டத்துக்கு மேலே நஷ்டம் வந்திச்சு. சொத்து சுகம் வீடு வாசல் எல்லாம் போயிடுச்சு! பத்து மாசத்துக்கு முந்தி அவர் இந்த மண்தூசியை உதறிப்பிட்டுப் போனவர் தான். இதுநாள் பரியந்தம் அவரைப்பற்றி ஒரு தகவலுமே இல்லை!''

ஓதுவாருக்குத் தொண்டை அடைத்தது: கனத்தது.

''அம்பலவாணன் செட்டியாரோட பந்துக்களிலே மேலவளவு கந்தசாமிச் செட்டியாரும் நடுத்தெரு தங்கராஜ் செட்டியாரும் 'ஓகோ'ன்னு இருக்காங்களே; அவங்களுக்காச்சும் அவரைப்பத்தி ஏதானும் தெரியுமோ, என்னவோ?'' என்று விசாரணை செய்தார் பல் போன பலராமன் செட்டியார்.

ஓதுவார் விநயமாகச் சிரித்தார்: ''பிச்சையாண்டி ஆகிட்ட அம்பலவாணன் செட்டியாரைப்பற்றி யாருக் கென்ன கவலை, பெரியவரே! நீங்க கண்ணாலே பார்க்க, பாயிலே படுத்தவங்க தரையிலேயும், தரையிலே படுத்த வங்க பாயிலேயும் கிடக்கலீங்களா? ஆனா, நம்ப அம்பல வாணன் செட்டியரார் மானாபிமானம் மிக்கவர்! ரொம்ப ரொம்ப ரோசக்காரர்! ரொம்ப ரொம்ப மானி! பிறந்த மண்ணை மட்டும் துறந்திட்டார் அம்பலவாணன்

செட்டியார்னு தோணல்லே; அநுதினமும் கைகடுக்கக் கும்பிட்டுக் கால்கடுக்க வலம் வந்த இந்தத் தெய்வத்தையுங் கூடத் துறந்திட்டாரோன்னு கூட எனக்குத் தோணுது. இல்லாட்டி, எந்தத் தில்லியிலே இருந்தாலும், இந்த நவராத்திரிக் கெடுவுக்கு இங்கிட்டு வந்து குதிச்சிருக்க மாட்டாரா? ஈச்வரா!''

ஓதுவார் கண்களைத் துடைத்துக் கொண்டார்.

''அது சரி. இப்ப என்ன ஆகிறதாம்? அம்பலவாணன் செட்டியாரோட உபயமண்டபப்படி என்ன ஆகிறதாம்?'' என்று கேட்டது கடுக்கன் இளவட்டம்.

''சட்டுப்புட்டுன்னு ஒரு முடிவுக்கு வந்தால் தான் தேவலாம். பசிநேரம் இது'' என்றது புதிய மீசை.

கோயிலுக்குச் சொந்தம் பூண்டிருந்த எட்டுப் பேர்களும் ஒருவரை ஒருவர் மேலும் கீழுமாகப் பார்த்துக் கொட்டக் கொட்ட விழிக்கலாயினர்.

ஓதுவார் நரை திரண்ட முடிகளை வேதனையோடு கோதி விட்டபடி, அவர்களை ஒரு முறை ஊடுருவினார். பிறகு, ''ஒரு முடிவும் தோணலீங்களா உங்களுக்கெல்லாம்?'' என்று வேதனை தாளாமல் வினவினார்.

''ஊஹூம்!''

குரல்கள் எட்டு வகையாகப் பிசிறு தட்டிக் கேட்டன.

'ஒருவேளை, அம்பலவாணன் செட்டியார் எங்காச்சும் அநாதையாகிக் காலமாகி...?''

உள்ளம் நடுங்க,உடல் நடுங்கக் குறுக்கிட்ட ஓதுவார், ''ஐயையோ!...உங்க பேசசை ஈவிரக்கமில்லாமல் முடிச்சுடாதீங்க, கடுச்கன்காரத் தம்பி!'' என்று கெஞ்சினார், விழிகள் துளும்பின; நெஞ்சம் துளும்பியது.

''சரி சரி. ஏதாச்சும் முடிவு பண்ணினால் தானே?''

''ஒண்ணுமே மட்டுப்படலையே!''

''அந்த அம்பலவாணன் செட்டியார் திருவிழாவை நடத்தாமல் விட்டுப்புட வேண்டியதுதானோ?''

''என்ன சொன்னீங்க, மீசைக்காரத் தம்பி?'' ஆவேச மும் ஆத்திரமும் முழங்கக் கேட்டார் ஓதுவார். நெற்றி நரம்புகள் புடைத்தன.

''பின்னே, என்னவாம்?''

ஓதுவார் ஆற்றாமையோடு பெருமூச்செறிந்தார். ''சோதனைகள் பாழாய்ப்போன இந்த மனிதர்களைத் தான் விட்டு வைக்கிறதில்லைன்னு நினைச்சிருந்தேன். இப்போ தெய்வத்துக்கும் அல்லவா சோதனை வந்திட்டுது? ஈச்வரப் பிரபோ!'' குரல் தழுதழுத்தது.

''ஓதுவார் ஐயா, நீங்களே இதுக்கு ஒரு யோசனை சொல்லுங்களேன்?''

ஓதுவார் உணர்ச்சி சுழிக்கப் பேசினார்: ''லட்சக் கணக்கான பணத்திலே புரண்டுக்கிட்டு இருக்கிற உங்களுக்கெல்லாம் தோணாத மார்க்கமும் யோசனை யுமா மண்ணிலே புரண்டுக்கிட்டு இருக்கிற எனக்குத் தோணப் போகுது? ஊம். அம்பலவாணன் செட்டியார் எப்படி எப்படியோ உச்சத்திலே வாழ்ந்தவர்; வாழ்ந்து காட்டினவர்! அந்த மனிதரை யார் மறந்தாலும் நல்ல வங்க ஒருநாளும் மறக்க முடியாது. அது மாதிரியே அவர் வருஷம் வருஷம் கோலாகலமாய் நடத்தி வந்த 'பிட்டுக்கு மண்' மண்டபப்படியையும் யாருமே மறக்க வாய்க்காது. அப்படிப்பட்ட புண்ணியவானோட மண்டபப்படியைப் பெருமையோடவும் மனிதாபிமானத் தோடவும் ஏற்று நடத்தக் கோயில் அடிமைக்காரங்களா இய உங்களுக்கெல்லாம் மனசு வரல்லே!... பரவாயில்லை. அம்பலவாணன் செட்டியாரோட மண்டபப்படியை என் தலையை அடமானம் வச்சாவது, எப்படியாவது பணம் தோதுபண்ணி நானே நடத்திடுறேன். இது என் கடமை யாக்கும்; இது என் பாக்யமாக்கும்!''

கோயிலுக்கு அடிமைப்பட்டவர்கள் இப்போது மௌனத்துக்கும் அடிமைப்பட்டார்கள்.

ஃ ஃ ஃ

அப்போது—

"ஐயா!"

புதிய குரலொன்று எதிரொலித்தது.

எல்லோரும் பார்வைகளைத் திசைமாற்றினார்கள். யாரோ ஒரு பண்டாரம் மொட்டைத் தலையும் திருநீற்றுப் பூச்சும் ருத்திராட்ச மாலையும் பொலியக் காட்சி தந்தார்.

"யோவ்! இது ஆண்டி மடம் இல்லே; கோயில் மடம்! இங்கிட்டுப் பிச்சை போட மாட்டாங்க! ஊருக்குள்ளே போய்ப் பாருங்காணும்!"

கடுக்கண்—வைரக் கடுக்கன் ஆயிற்றே! அது ஏழரைக் கட்டைச் சுருதியில் ஆணையிட்டது.

அந்தப் பண்டாரம் ஏன் அப்படிச் சிரிக்க வேண்டும்? உலகாளும் ஆண்டவனே ஒரு கட்டத்திலே 'பிச்சை ஆண்டி'யாக வேடம் புனைய நேர்ந்த விதியை நினைத் திருப்பாரோ?

ஓதுவார் மலைத்தார்.

"ஐயா, பிச்சைக்காக நான் இப்போது இங்கே வந்து நிற்கவில்லை!"

"பின்னே?"

"இங்கே சுவாமிக்குப் பூஜை பண்ணுகிற ஓதுவார் ஒருத்தர் இருக்காராமே, அவர் யார்? எங்கே இருக்கார் அவர்?" என்று விசாரித்தார் ஆண்டிப் பண்டாரம்.

"ஏன், நான்தான்!" என்று சொல்லிக் கொண்டே முன்னே வந்தார் ஓதுவார். பண்டாரத்தைக் கூர்ந்து பார்த்தார். ஏக்கமும் ஏமாற்றமும் நிழலிட, "சுவாமி களே, சுவாமி சந்நிதியிலே 'இப்படி உட்காருங்க" என்று உருக்கமாக வேண்டினார். "என்ன விஷயமுங்க, ஐயா?" என்று கேட்டார்.

விளக்குடையான் கழலடியில் நின்ற தூண்டாமணி விளக்குச்சுடர் தெறித்தது.

பண்டாரம் திருவாய்மலர்ந்தார்: "ஐயா, இவ்வூரைச் சேர்ந்திருந்த அம்பலவாணன் செட்டியார் என்பவர் தம்

மோட 'பிட்டுக்கு மண்' மண்டபப்படித் திருவிழாவை வழக்கம் போலவே விமரிசையாக நடத்தச் சொல்லி உங்க கிட்டே இந்த இருநூற்றைம்பது ரூபாயைச் சேர்ப்பிக்கச் சொன்னார். இந்தாங்க பணம்! எண்ணிச் சரிபார்த்துக் கிடவேணும்!''

ஓதுவார் மேனி சிலிர்த்தார். பணத்தை நடுங்கும் விரல்களால் சரி பார்த்து இடுப்பு மடியில் வைத்துக் கொண்டார். ''அந்தத் தர்மசீலர் நல்லபடியாக இருக்கா ரல்லவா?'' என்று ஆர்வத்துடன் உணர்ச்சி வயப்பட்டு விசாரித்தார்.

''ஊம்!'' கொட்டினார் பண்டாரம்.

''எங்கே இருக்கார் அவர்?''

''எங்கேயும் இருப்பவர் ஐயா அந்தப் புண்யவான்.''

''தம்மோட மண்டபப்படி விழாவன்றைக்காகிலும் அம்பலவாணன் செட்டியார் வருவாரா, சுவாமிகளே?'' மனிதாபிமானத்தின் ஆர்வம் பிடர்பற்றித் தள்ள விசாரித் தார் சுந்தரமூர்த்தி.

''வருவார்னு தோணலீங்க!'' என்றார் ஆண்டி.

''அட கடவுளே! தெய்வம் அவரை மறந்திடுச்சே என் கிறதுக்காக, அவரும் மறந்திட்டாரா என்ன? ஐயோ! என்ன சோதனை இது? நடராஜப் பிரபோ!'' என்று உருகிக் கரைந்தார் அர்ச்சகர்.

''ஐயா, தெய்வம் அவரை மறந்திடுச்சு என்பதோ, அல்லது அவர் தெய்வத்தை மறந்திட்டார் என்பதோ இந்தப் பொய்யான வாழ்க்கையிலே நமக்கு நாமே கற பிதம் செய்து கொள்ள வேணுமானால் உபயோகப்பட லாம். ஆனா, மெய்யாகவே ஆளுகிறவனுக்கும் மெய்யா கவே ஆளப்படுகிறவனுக்கும் ஊடாலே இப்படிப்பட்ட பொய்யான மயக்கங்கள்செல்லாக் காசுக்குச் சமதைதான். தெய்வசித்தம் என்கிற ஒரு மகத்தான மாயசக்திக்கு முன்னே நாமெல்லாம் எம்மாத்திரம்; இந்தக் 'கட்டை'க்கு நாழி ஆகுது. விடை வாங்கிக்கிட வேணும், ஐயா!''

பண்டாரத்தின் விழிகள் பொங்குகின்றன.

ஃ ஃ ஃ

அன்றைக்குத்தான் 'பிட்டுக்கு மண்' மண்டபப்படி விழா. அம்பலவாணன் செட்டியார் மரபு காத்து நடத்தும் இத் திருநாள் வைபவத்துக்கு விசேஷமாகக் கூட்டம் கூடுவது வழக்கம். மேளக் கச்சேரி, பிட்டு, சர்க்கரைப் பொங்கல், கடலைப் பருப்புச் சுண்டல், தாம்பூலம், தேங்காய் மூடி என்று அன்று தடபுடலாகவே உபயங்கள் எல்லாம் நடந்தேறும். ''தெய்வம் தந்தது என்னோட சொத்து. அந்தத் தெய்வத்துக்கு விமரிசையாய் மண்டபப் படி செய்கிறதிலேதான் என்னோட மனச்சாட்சி அமைதி காணும்; அதுதான் என் மனசுக்கும் சந்தோஷத்தைக் கொடுக்கும்; கொடுக்கவும்முடியும்'' என்பார்செட்டியார்.

அப்படிப்பட்ட மெய்ப் பக்தரான அம்பலவாணர் இல்லாமலேதான் அவர் மண்டபப்படி விசேஷம் நடைபெற வேண்டுமென்று விதித்துவிட்டதா என்ன?

நிரம்பி வழிந்த ஒளி வெள்ளத்திலே கூட்டம் நிரம்பி வழிந்தது.

ஓதுவார் ஏக்கம் தேங்க, சோகம் பாகமிட, மெய் யொடுங்கி, மெய் விதிர்த்துப் போய்விட்டார். 'அப்பனே' ஏன் இப்படிச் சோதிச்சிட்டே? இதோ, தீபாராதனை நடக்கப் போகுதே! உன்னை அல்லும் பகலும் அனவரதமும் துதித்துக்கொண்டிருக்கப் பழகிவிட்ட அம்பலவாணன் செட்டியாரை மறந்திட்டியா? இல்லை, மறக்கப் போறியா? உன்னை மறக்காத அவரை நீ மறந்தால், மறக்க நேர்ந்தால் அது தருமமாகுமா, நியாயமாகுமா? சொல், அம்மையப்பா!' நெஞ்சம் நெக்குருகியது; உருகிக் குலைந்தது; குலைந்து விம்மியது: விம்மி வெடித்தது.

திருப்புகழ் பாடிக் கொண்டிருக்கிறது நாகசுரம். 'அனித்த மறத் திருப்பொதுவில் விளங்கு நடத்தரசு'க்கு இன்றைக்குப் பிட்டுக்கு மண் சுமந்த வேடம்—புனை வடிவம் அதாவது, அவதாரம்! பிட்டும் மண்ணும் கதை அல்லவே!

பிட்டு விற்ற கிழவி வந்தியின் சார்பிலே, வைகைப் பெருவெளத்தை அடைக்க அல்லது அடக்கச் சோமசுந்தரக் கடவுள் மண்சுமந்து, அரிமர்த்தன பாண்டியனிடம் பிரம்படிபட்ட திருவிளையாட்டை நினைவுறுத்தியும் நினைவு கூட்டியும் விளங்கும் அந்தக் கோலத்திற்கென்று அப்படியொரு மகிமை போலும்!

மண்வெட்டி, பிட்டுத் தட்டு, ஐந்தடுக்கு நாமுகத் தீபம் எல்லாமே வெள்ளிப் பொருள்கள்தாம்; வெள்ளியம் பலத்தே திருநடம் புரிந்த ஐயனுக்கு உகந்தவைதாம். இவை அனைத்தும் அம்பலவாணரின் பக்திச்சுவை சொட்டும் உபயங்களாம்.

''ஊம்! ஐயா, பூஜை ஆரம்பியுங்க. மணி இப்போதே பத்தடிக்கப் போகுதுங்களே, ஓதுவார் ஐயா!''

உத்தரவு பிறந்தது.

ஓதுவாருக்குத் திகீரென்ற ஓர் அச்சஉணர்வு அச்சாரம் கொடுத்து உலுக்கி விட்டிருக்க வேண்டும். இமைகொட்டாமல், ஆவால் தேள் கொட்டின துடிப்போடு ஆண்டவனைப் பார்த்தார்; பார்த்துக்கொண்டே நின்றார். நெஞ்சிலும் நினைவிலும நிழலாடிய அம்பலவாணன் செட்டியாரின் அன்பின் உருவம் மனக்கண்ணிலே ஆடியது கண்ட பாங்கிலே ஆடியது. ஏக்கமும் ஆர்வமும் தழலாகக் கொதிக்க, கைக்கு மெய்யான ஏமாற்றமும் சோகமும் சாட்டைப் பம்பரமாகச் சுழல, அவர் சுற்றுமுற்றும் பார்வையைச் செலுத்தினார். முடியவிழ்ந்த நரைமுடிக் கற்றைகள் வாடைக் காற்றில் அசைந்தாட, அலைந்தாட நுட்பமாகக் கண்ணோட்டம் பதித்தார். அம்பலவாணன் செட்டியார் திடுதிப்பென்று இங்கே சுவாமியின் திருச் சபையின் சந்நிதியின் முன்னே வந்து குதித்துவிட மாட்டாரா? அம்புலிக்கு ஆசைப்படும் மழலையென அவர் மனப்பால் குடித்துவிட்டாரோ? மறு இமைப்பில், நெடுமூச்சுப் பிரிந்ததுதான் மிச்சம். மணியைக் கையில் ஏந்தினார்.

வில்வ இலைகள் சிந்தின, சிதறின. அம்பலவாணன் செட்டியாரின் ஜன்ம நட்சத்திரமான பூரட்டாதி நட்சத்திரத்தைச் சொல்லி அர்ச்சனையைத் தொடங்கினார், ஓதுவார்.

மேளச் சத்தம் முழங்கிற்று. நாகசுரம் வழிந்தது. கையெடுத்துக் கும்பிட வேண்டும். அதோ, தீபாராதனை நடக்கிறது.

தீபம் ஏந்திய ஓதுவாரின் அன்புக் கரங்கள் ஏன் அப்படி நடுங்குகின்றன? 'ஈசனே, எம்பிரானே! சோதனை கடந்தவன் ஆயிற்றே நீ? ஆனாலும் சோதனை நடத்தி விட்டாயே? உன் சித்தம் இந்த அற்பனுக்கு எப்படித் தெரியும், புரியும்? உன் விருப்பம் போல் நீ விளையாடு. அலகிலா விளையாட்டுடையவன் ஆயிற்றே நீ? அம்மையப்பா! எங்கள் அம்பலவாணன் செட்டியாரை எங்கிருந்தாலும் நல்லபடியாகக் காப்பாற்றுவது அருள்பாலிப்பாய் அல்லவா?'—இமை வட்டங்களிலே சுடுநீர் வட்டம் போட்டது.

ஆராதனை தொடர்ந்தது.

"ஹரஹர மகாதேவா!"

கண்டாமணி ஓசையெனக் கணீரென்று முழக்கமிட்டது பக்திச் சுவை குலுங்கிய புதிய குரலொன்று.

கூட்டம் ஏறிட்டு விழித்தது. அங்கே—

ஏக்கமும் உருக்கமும் மேலிடக் கைகுவித்து நின்றார் அந்த மொட்டைத் தலை ஆண்டிப் பண்டாரம்.

'எண்குணங்கள்' பெற்ற அந்த ஆண்டவன் ஏன் அப்படிச் சிரிக்கிறான்? புதிர்ச் சிரிப்பல்லவா அது?

ஃ ஃ ஃ

ஆம்; அம்பலதரசனின் அந்தப் புதிர்ச் சிரிப்புக்குத் தாராளமாகப் பொருள் இருக்கத்தான் இருக்க வேண்டும். அப்படியென்றால்—?

அதோ, கோயிலின் வெளிப் புறத்துப் பந்தலிலே, கும்பலோடு கும்பலாகவும் தாடியும் மீசையும் எலும்பும் தோலுமாகவும் நின்றுகொண்டே, மேனி குலுங்கிட, கண்கள் குலுங்கிட, மனம் குலுங்கிட, பக்தி பரவசத்தோடு மெய்ம்மறந்து, ஆனால் மெய்யை மறக்காமல் கை கூப்பிக் கும்பிட்டுக்கொண்டே இருக்கிறதே ஓர் உருவம், அந்த உருவத்தைப் பற்றறுத்துப் பாருங்கள்!

"அப்பனே! நடராஜப் பெருமானே! உன்னோட அன்புக்கும் கருணைக்கும் ஈடேது; எடுப்பேது? நீ ஆட்டுவித்தாய். நான் ஆடாமல் தப்புவேனா? கண்காணாத சீமையிலே மண் சுமந்து, காசு சேர்த்து, வளமைப்படி உன் திருநாளை, என் மண்டபப்படியை, நல்ல தனமாகக்

கொண்டாடக் கொடுத்து வச்சேனே! நான் பாக்கியவான் தான்! என் மானத்தைக் கட்டிக் காத்தாயே அம்மை யப்பா! உன் விளையாட்டை என்னவென்பேன்? நீ மண் சுமந்த பாவத்துக்கு ஓர் புது அர்த்தம் கொடுக்க வேண்டித் தான் நானும் மண்சுமந்த புண்ணியத்தைப் பெற்றேனோ? நீ புதிரல்லவே! நான்தான் புதிர்! இல்லையானால், எனக் குன்னு மெய்யன்பரான ஒரு ஓதுவாரையும், ஓர் ஆண்டிப் பண்டாரத்தையும் கை காட்டியிருப்பாயா? கடைசியிலே என்னையும் மீறின வகையிலே என்னையும் இங்கே இப்போது மாயமாகக் கொண்டாந்து சேர்த்திட்டு இப்படிச் சிரிச்சுக்கிட்டு இருப்பாயா, அப்பனே! ஆகா! அம்மையே அப்பா! ஒப்பிலா மணியே!'' அந்த உருவம் உருகிக் கரைந்து கொண்டே இருக்கிறது.

ஃ ஃ ஃ

திருநீற்று மடலும் கையுமாக வெளிப்புறப் பந்தலை அடைந்தார் ஓதுவார். அவர் பார்வை நாற்புறமும் ஓடியது. மறுகணம், ''ஆ! ஐயாவா?'' என்று தம் உள் மனம் ஆனந்த பரவசம் மேலிடக் கூவியவாறு, விரைந்து பாய்ந்து, விபூதிப் பிரசாதம் வழங்கினார். ஓதுவார். 'எம்பிரானே! உன் விளையாட்டு இப்படியா நடந்தி ருக்குது!' கண்கள் கசிந்தன! மேனி உறுப்புக்கள் ஒசிந்தன.

அந்த உருவம் விபூதியை மெலிந்த கை நடுங்க வாங்கிப் பூசிக்கொண்டதுதான் தாமதம்; மறு இமைப்பில் அவ்வுருவம் அப்படியே தடாலென்று தரை மண்ணில் சாய்ந்தது.

ஓதுவார் துடியாய்த் துடித்தார்.

கூட்டம் பரபரப்படைந்தது.

''பாவம்! யாரோ பரதேசி ஒருவர் திடீர் மயக்கம் போட்டு விழுந்திட்டார். எல்லாரும் தயவு பண்ணி ஒதுங்கி நல்ல காற்றுக்கு வழி விடுங்க! ரங்கா, ஓடிப் போய் நல்ல தண்ணீர் கொண்டாப்பா!''

ஓதுவாரின் விழிகளினின்றும் கண்ணீர் மாலை நீண்டு மணக்கிறது.

ஃ ஃ ஃ

ஆகா! அந்தத் தூண்டாமணித் தீபம் எத்துணை அறக் கருணையோடும் அருட் சிரிப்போடும் ஒளி ஏறறு, ஒளிகாட்டிக் கொண்டிருக்கிறது!

மணிமேகலைப் பிரசுரம்
சென்னை-600017